உருமாற்றம்

ஃபிரான்ஸ் காஃப்கா

தமிழில் : பேரா.வின்சென்ட்

உருமாற்றம்
ஃபிரான்ஸ் காஃப்கா
தமிழில் : பேரா.வின்செண்ட்

உருமாற்றம்

ஃப்ரன்ஸ் காஃப்கா

ஜெர்மனிலிருந்து ஆங்கிலத்தில்:
வில்லா மியூர். எட்வின் மியூர்

தமிழில்: ஆர். சிவகுமார்

மொழிபெயர்ப்பாளர் முன்னுரை

உருமாற்றம்

1

2

3

கா∴ப்கா தன் அப்பாவுக்கு எழுதிய நீண்ட கடிதத்தின் இறுதிப்பகுதி

'உருமாற்றம்' பற்றி கா∴ப்காவின் இரண்டு டயரிக் குறிப்புகள்:

கா∴ப்காவும் ஒரு தமிழ் எழுத்தாளரும் — க.நா.சுப்ரமண்யம்

மொழிபெயர்ப்பாளர் முன்னுரை

> கனவுத்தன்மை கொண்ட என் அகவாழ்க்கையைச் சித்திரிக்கும் உணர்வு பிற எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டது.
>
> — 1914 ஆம் ஆண்டு காஃப்கா எழுதிய நாட்குறிப்பிலிருந்து

தன் வாழ்க்கையையே உருமாற்றி இலக்கியமாக்கிய ஃப்ரன்ஸ் காஃப்கா (1883—1924) தற்போது செக்கோஸ்லோக்கியாவின் தலைநகராக உள்ள ப்ராக்கில், அது பழைய பொஹீமிய மாகாணத்தின் பிரதான நகராக இருந்தபோது, பிறந்தார். ஓரளவு வசதியான மத்தியதரக் குடும்பத்து வியாபாரி ஒருவரின் மகனான அவர், ஒரு ஜெர்மானிய யூதர் என்ற வகையில் செக் மொழி பேசும் கத்தோலிக்கக் கிறித்துவப் பெரும்பான்மையினரிடையே ஒட்டுதல் இல்லாத சமூக வாழ்க்கையை வாழ்ந்தார். எப்போதும் அதிகாரம் செலுத்திய வியாபாரி அப்பாவால் உருவாக்கப்பட்ட கண்டிப்பு மிக்க குடும்பச் சூழல், கணவரின் வியாபாரத்துக்குத் துணை செய்த அம்மாவின் நேரமின்மை என இரண்டும் சேர்ந்து உருவாக்கிய தனிமையில் காஃப்காவின் குழந்தைப் பருவம் கழிந்தது. பள்ளியில் அடிப்படைக் கல்வியையும் ஜெர்மன் மொழியையும் கற்றார். சார்ல்ஸ் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வியில் (1902—1906) பட்டம் பெற்றார். அங்கு தன் வாழ்நாள் நண்பராகப் போகும் எழுத்தாளர் மாக்ஸ் ப்ரோடைச் சந்தித்ததோடு சோஷலிசம், அனார்கிசம் போன்ற தத்துவங்களாலும் தாக்கம் பெற்றார். இலக்கியம்தான் தன் வாழ்க்கைத் தொழில் என்பதைப் பதின்பருவத்திலிருந்தே உணரத் தொடங்கிவிட்ட காஃப்கா அதைக் கடுமையான போராட்டத்துக்கு மத்தியிலேயே தொடர நேரிட்டது. சட்டக் கல்விக்குப்பின் தனியார்க் காப்பீட்டு நிறுவனம் ஒன்றில் ஓராண்டு பணிபுரிந்தார். கடுமையான பணிச்சுமை காரணமாக அதிலிருந்து விலகி அரசு நிர்வகித்த தொழிலாளர் விபத்துக் காப்பீட்டு நிறுவனம் ஒன்றில் உயர்நிலைப் பணியில் சேர்ந்தார். 1908 முதல் 1918 வரை அதே பணியில் இருந்தார். இந்தப் பணி பிற்பகல் இரண்டு மணியோடு முடிந்ததால் அவருக்கு எழுத நேரம் கிடைத்தது. ஆனால், இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. 1911இல் தன் மைத்துனர் தொடங்கிய ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலையை நிர்வகிக்கப் பிற்பகல்களில் அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். அந்தப் பணிக்கு ஈடுகொடுக்க முடியாமலும் எழுதுவதற்கு அது தந்த இடையூறுகளாலும் மனம் வெதும்பி 1912 ஆம்

ஆண்டு அக்டோபர் மாதம் தற்கொலைக்கு முயன்று பின் அந்த எண்ணத்திலிருந்து மீண்டிருக்கிறார். அந்த ஆண்டு மாக்ஸ் ப்ரோடின் உறவுப் பெண்ணான ஃபெலிஸ் பௌவர் மீது காஃப்கா காதல் கொண்டார். பாலியல் வேட்கையும் பெண்கள் மீதான ஈர்ப்பும் அதிகம் கொண்ட காஃப்கா, அதே சமயம் அவை தொடர்பான கூச்சமும் தன் உடல்நிலை குறித்த நம்பிக்கையின்மையையும் கொண்டிருந்தார். ஃபெலிஸுக்கு 500 காதல் கடிதங்கள் எழுதினார். இரண்டு முறை அவர்களுக்கிடையே நிகழ்ந்த நிச்சயதார்த்தம் கைவிடப்பட்டதற்குக் காஃப்காதான் காரணம். திருமண வாழ்க்கைக்கு மன ரீதியிலும் உடல் ரீதியிலும் தான் தகுதியில்லாதவன் என்பதை அவர் உணர்ந்திருந்தார். செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவரின் மகளான Julie Wohryzek என்ற யூதப்பெண்மீது 1919இல் காஃப்கா கொண்ட காதலை அந்தஸ்தைக் காரணம் காட்டி அவருடைய அப்பா நிராகரித்தார். 1920 ஆம் ஆண்டு தொடக்கத்தில் Milena Jesenska என்ற பத்திரிகைத்துறைப் பெண்ணையும் 1923இல் பெர்லினில் சிறிது காலம் தங்கியிருந்தபோது Dora Diamant என்ற தொடக்கப் பள்ளி ஆசிரியையும் காதலித்தார். இவை அனைத்தும் தோல்வியில் முடிந்தன. மாற்று மருத்துவத்தில் ஆர்வம் கொண்டிருந்த காஃப்கா ஒரு கட்டத்தில் சைவ உணவுக்கு மாறினார். 1907இல் ஆரம்பிக்கப்பட்ட நவீனக் கல்விமுறையான மான்ட்டிசோரி கல்விமுறையை ஆதரித்தார். காசநோய் அன்றி தூக்கமின்மை, ஒற்றைத் தலைவலி போன்ற உபாதைகளும் மனச் சோர்வு நோயும் சமூகம் குறித்த அச்ச உணர்வும் அவரைத் துன்புறுத்தின. நோய் முற்றிய நிலையில் 1924இல் வியன்னாவுக்கு அருகில் இருந்த காசநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் அதே ஆண்டு ஜூன் 11 ஆம் தேதி இறந்தார். இறுதி நாள்களில் அவருடைய கடைசித் தங்கையான Ottla அவரைக் கனிவுடன் கவனித்துக்கொண்டார்.

கனவின் பண்புகளான விசித்திரமும் எதார்த்தமும் இணைந்த வினோதக் கூட்டு காஃப்கா கதைகளுக்கு வடிவத்தையும் மொழியையும் தருகிறது. அப்பாவின் அதிகாரம் உண்டாக்கிய பயம், வெறுப்பு (தந்தைக்கு எழுதிய கடிதத்தில் அவரைக் குறிக்க ‘கொடுங்கோலர்’ என்ற வார்த்தையைக் காஃப்கா பயன் படுத்துகிறார்), காச நோயால் ஏற்பட்ட உடல் நலக் குறைவு, காதல்

தோல்விகளால் உருவாகிய குற்ற உணர்வு, சமூக அமைப்பும் சட்டங்களும் எளிய மனிதனை அந்நியப்படுத்தல் போன்றவற்றின் கொந்தளிப்பான கலவையே காஃப்காவின் ஆளுமை. சமூக அதிகாரத்தின் அபத்தமான அமைப்பும் சட்டங்களும் தம் கண்ணுக்குத் தெரியாத கைகளால் நவீன மனிதனை ஒடுக்கி அவனைப் பதற்றத்துக்கும் குழப்பத்துக்கும் ஆளாக்குவதைப் பதிவு செய்யும் அவருடைய எழுத்தில் நாம் காணும் நாயகப் பாத்திரங்கள் காஃப்காவும் நாமும்தான். Kafkaesque என்ற பெயரடை ஆங்கில அகராதிகளில் இடம்பெற்றுவிட்டது. ‘குழப்பமூட்டுகிற, அச்சுறுத்துகிற சூழ்நிலையை, குறிப்பாக எவ்வித அர்த்தத்தையும் தராத சிக்கலான அதிகார அமைப்பின் விதிகளும் ஒழுங்குமுறைகளும் உள்ளடங்கிய சூழ்நிலையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது’ என்ற விளக்கத்துடன் ஆக்ஸ்ஃபோர்ட் அகராதி இச்சொல்லைப் பட்டியலிட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையை அனுபவிக்காத நவீனகால மனிதர்கள் மிகச்சொற்பம் என்ற உண்மையே அவருடைய எழுத்தின் பொதுமையை உணர்த்தும். காஃப்காவின் வாழ்நாளில் வெளியாகிய குறைவான படைப்புகளில், The Stoker (1913இல் வெளியான இக்கதையின் விரிவாக்கமே அமெரிக்கா என்ற முற்றுப்பெறாத நாவல்), தீர்ப்பு (1913), உருமாற்றம் (1915), தண்டனைக் குடியிருப்பு (1919), கிராமப்புற மருத்துவர் (1919) போன்ற கதைகள் குறிப்பிடத் தக்கவை. முதல் மூன்று கதைகளிலும் தந்தை—மகன் உறவு அடிக்கருத்தாக உள்ளது. காஃப்காவின் எழுத்தில் காணப்படும் ஈடிபஸ் சிக்கலின் தாக்கம் குறித்து நிறைய விவாதிக்கப்பட்டுள்ளது. படைப்பூக்கம் தந்த உந்துதலால் தான் ஒரே இரவில் எழுதிய ‘தீர்ப்பு’ தனக்கு மிகுந்த மனநிறைவைத் தந்த படைப்பு என காஃப்கா குறிப்பிடுகிறார். சுதந்திர வாழ்க்கையை விரும்பும், அதே சமயம் தந்தையின் மீது உண்மையான அக்கறையும் கொண்ட மகனைத் தவறாகப் புரிந்துகொண்டு ‘நீரில் மூழ்கி உயிர் விடுவாயாக’ என்று தீர்ப்பு வழங்கும் தந்தை இக்கதையின் பாத்திரம். பணிப்பெண் ஒருவரால் சபலமூட்டப்பட்டு அவரது கர்ப்பத்துக்குக் காரணமான பதினாறு வயது மகனை ப்ராக்கிலிருந்து கப்பலில் அமெரிக்காவுக்கு அனுப்பிவிடும் ஒரு தந்தை The Stoker (நீராவிக் கப்பலின் எந்திர உலைக்குக் கரி போடுபவர் என்று பொருள்) கதையில் வருகிறார்.

இறப்புக்குப்பின் தன் சொத்துகளை நிர்வகிக்கும் பொறுப்புக்குத் தன் நண்பரான மாக்ஸ் ப்ரோடை நியமித்த ஆவணத்தில், வெளியிடப்படாத தன் கையெழுத்துப் பிரதிகள் அனைத்தையும் எரித்து விடுமாறு காஃப்கா குறிப்பிட்டார். நண்பர் அதைச் செய்யமாட்டார் என்று தெரிந்துதான் காஃப்கா அப்படிச் சொன்னார் என்று கருதப்படுகிறது. காஃப்காவின் இறப்புக்குப்பின் மாக்ஸ் ப்ரோட் அவருடைய படைப்புகள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தி வெளியிட்டார். காஃப்காவின் மூன்று முற்றுப் பெறாத நாவல்களில் முதலாவதாக அவர் எழுதிய நாவலான அமெரிக்கா சார்ல்ஸ் டிக்கன்ஸின் டேவிட் காப்பர்ஃபீல்ட் நாவலின் பாதிப்பில் உருவானது. புறக்கணிப்பட்ட, எளிய மனிதர்களை அதிகார அமைப்பு ஒடுக்கித் திரும்பத் திரும்பத் துன்புறுத்தலுக்கு ஆளாக்குவதை இந்நாவல் விவரிக்கிறது. காஃப்காவின் மூன்று நாவல்களில் மிகக் குறைவான கவனிப்புக்கு ஆளானது இதுதான். திடீர் கைது, இன்னதென்று சொல்லப்படாத குற்றச்சாட்டு, அடையாளம் காணமுடியாத நீதிபதிகள், விசாரணை அமைப்பு குறித்த ரகசியம், குழப்பமூட்டும் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆகியன உருவாக்கும் அபத்தத்தால் அலைக்கழிக்கப்பட்டு கடைசியாகக் கொல்லவும்படும் அப்பாவி ஜோசஃப் கே. வை கதைநாயகனாகக் கொண்டது விசாரணை நாவல். (ஜெர்மன் மொழியிலிருந்து ஏ.வி.தனுஷ்கோடியால் நேரடியாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்நாவலை க்ரியா பதிப்பகம் 1992இல் வெளியிட்டது.) நாவலின் ஒன்பதாவது அத்தியாயத்தில் தேவாலயத்தில் வைத்து சிறைச்சாலைப் பாதிரி ஒருவர் கே.வுக்கு ஓர் உருவகக்கதையைச் சொல்கிறார். சட்டத்தின் உள்ளே போக முயலும் ஒரு கிராமவாசியையும் அவனை உள்ளே விட மறுக்கும் வாயிற்காவலனையும் பாத்திரங்களாகக்கொண்ட கதை அது. சட்டப்புத்தகத்தின் முன்னுரைப் பகுதியில் அக்கதை உள்ளதென்றும் பலரும் அதை வெவ்வேறு விதமாக விளக்கியிருக்கிறார்கள் என்றும் பாதிரி சொல்கிறார். காஃப்காவின் உருவகக்கதைகளில் ஒன்றான அதன் மொழிபெயர்ப்பு இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. அதிகார வர்க்கத்தின் அர்த்தமற்ற நடைமுறையை மிகைஎதார்த்தத் தன்மையிலான விவரிப்பில் சொல்லும் நாவல் கோட்டை. அமைப்புக்கு எதிரான, தோல்வி நிச்சயமான ஒரு போராட்டத்தில் ஈடுபடும் கே. கோட்டையிலுள்ள உயர் அதிகார

வர்க்கத்தினரை, தன்னை அவர்கள் அங்கு வரவழைத்ததனால், சந்திக்க மேற்கொள்ளும் முயற்சிகள் தோல்வியுறுவதில் அடையும் விரக்தியும் சம்பவங் களின் அபத்தத்தன்மையுமே நாவலின் மையங்கள். ஆனால், இவை மேலோட்டமானவையே என்றும் புரிந்துகொள்ள முடியாத, குழப்பமூட்டும், மனித அனுபவத்தையும் பகுத்தறிவையும் கடந்த ஒன்றை அடைய முயலும் மனிதனின் எத்தனமே நாவலின் ஆழ்பிரதியில் உள்ளது என்றும் சிலர் சொல்கிறார்கள்.காஃப்காவின் படைப்புகளில் மிக அதிக வாசகக் கவனிபைப் பெற்றது உருமாற்றமே. நவீன மனிதனின் இருத்தலியல் கவலையையும் அந்நியமாதலையும் பூச்சியின் படிமத்தில் இக்கதை சித்திரிக்கிறது. குஸ்தாவ் ஜேனஜ் என்ற இளம் கவிஞர் காஃப்காவோடு நடத்திய தனிப்பட்ட உரையாடல் ஒன்றில் Lady into Fox [டேவிட் கார்னட் (1892—1981) என்ற பிரிட்டிஷ் எழுத்தாளர் 1922இல் வெளியிட்ட நாவல். இதில் ஒரு குடும்பப்பெண் திடீரென்று நரியாக மாறிவிடுகிறார். தொடக்கத்தில் மனித உணர்வுகள் கொண்டிருந்தவர் நாளடைவில் நரியின் குணங்களைப் பெறுகிறார். நரிக் குழந்தைகளையும் ஈன்று இறுதியில் வேட்டைநாய்களால் கொல்லப்படுகிறார்] உருமாற்றத்தின் செயல்வடிவத்தை நகலெடுத்திருக்கிறது என்று சொன்னபோது, ‘‘இல்லை. அவர் என்னிடமிருந்து எடுக்கவில்லை. அது தற்போது நிகழும் காலத்தில் இருக்கிறது. நாங்கள் இருவருமே அதிலிருந்துதான் நகலெடுத்திருக்கிறோம்... மனிதர்களைவிடவும் விலங்குகளோடு உறவுகொள்வது அதிக எளிது’’ என்று காஃப்கா பதில் கூறினாராம். தனிமை தரும் துயரம், சக மனிதத் தோழமைக்கான ஏக்கம், உணவு தராத உலகத்தைப் பட்டினிகிடத்தல் என்ற கலை மூலம் பழிவாங்கும் துயர சாகசம், ஒரு மண்வாரி அளவு நிலக்கரி வாங்கப் பணம் இல்லாததால் ஒரு மனிதன் இறந்துபோகும் அவலம், சட்டத்துக்குள்ளே நுழையமுடியாமல் போன ஓர் எளியவனின் மரணம் போன்றவை இத்தொகுப்பின் பிற கதைகளில் வெளிப்படுகின்றன. இக்கதைகளின் நாயகப் பாத்திரங்களுக்குப் பதிலாக அந்த இடத்தில் எழுத்தாளனை வைத்துப்பார்க்கலாம். ஃப்ராய்டிய விளக்கத்துக்கும் முதலாளித்துவம் விளைக்கும் அந்நியமாதல் தொடர்பான மார்க்ஸிய விளக்கத்துக்கும் அடிப்படை மனிதத்துயர் சார்ந்த விளக்கத்துக்கும்

இக்கதைகள் அனைத்திலும் இடம் உண்டு. நவீனத்துவ எழுத்தின் உச்சங்களில் ஒன்று கா.ஃப்காவின் கதையுலகம்.

தத்துவம் தொடர்பான எண்ணங்கள், கதைகளுக்கான முன்குறிப்புகள், கண்ட கனவுகளின் விவரிப்புகள் ஆகியவற்றை நாட்குறிப்புகளாக 1910 முதல் 1923 வரை கா.ஃப்கா எழுதியிருக்கிறார். படைப்பூக்கம் தடைபட்டபோதெல்லாம் அதைத் தூண்டும் முயற்சியாக அவ்வடிவத்தைக் கைக்கொண்டிருக்கிறார். 'என்னைக் கண்டு ஏன் இத்தனை பயப்படுகிறாய்?' என்று கா.ஃப்காவைப் பார்த்து அவர் அப்பா கேட்ட கேள்விக்கு விடைசொல்லும் முயற்சியாக இரண்டு மாத காலம் எடுத்துக்கொண்டு கா.ஃப்கா எழுதிய மிக நீண்ட கடிதத்தில் உணர்வுரீதியாகத் தன்னை அவர் அவமதித்ததாகக் குற்றம் சாட்டுகிறார். தன் அம்மாவிடம் அக்கடிதத்தைக் கொடுத்து அப்பாவிடம் சேர்க்கச் சொல்லியிருக்கிறார். ஆனால், சில நாட்கள் வைத்திருந்துவிட்டு அவருடைய அம்மா அதை கா.ஃப்காவிடமே திருப்பிக்கொடுத்துவிட்டார். அக்கடிதம் கடைசிவரை உரியவரை அடையவே இல்லை. அக்கடிதத்தின் இறுதிப் பகுதியில் தனக்கு அப்பா இப்படிப் பதில் சொல்வார் என்று யூகித்து கா.ஃப்கா எழுதிய பகுதியின் மொழிபெயர்ப்பு இத்தொகுப்பில் பின்னிணைப்பாக உள்ளது.

யூதர் ஒருவர் எழுதிய இலக்கியம் என்பதால் கா.ஃப்காவின் எழுத்தை நாஜிகள் தடைசெய்தார்கள். பூர்ஷ்வாக்களின் நசிவு இலக்கியம் என்று சொல்லி பிறகு சோவியத்பாணி மார்க்ஸீயர் கள் அதைக் கண்டித்துப் புறக்கணித்தார்கள். உண்மையில் மார்க்ஸியத் தத்துவத்துக்கு கா.ஃப்காவின் எழுத்து வலுசேர்க் கிறது. கா.ஃப்காவின் எண்பதாவது பிறந்த நாளை முன்னிட்டு ப்ராக் அருகில் உள்ள லிப்லிஸ் என்ற ஊரில் 1963 ஆம் ஆண்டு நடந்த பன்னாட்டு மாநாடு ஒன்றில் சார்த்தர், மிலன் குந்தெரா, எர்ன்ஸ்ட் ஃபிஷர் போன்ற பெரும் ஆளுமைகள் கா.ஃப்காவின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்கள். தன்னை மார்க் ஸித்தின்பால் ஈர்த்தவர்கள் ஃப்ராய்ட், ஜாய்ஸ், கா.ஃப்கா ஆகியோர்தான் என்று சார்த்தர் அப்போது சொன்னார். அதிகாரவர்க்கத்தை கா.ஃப்கா சித்திரித்ததன் சமகால முக்கியத்துவத்தை அம்மாநாடு மறுஉறுதி செய்தது. காமுவும் மார்க்கேஸும் கா.ஃப்காவின் தாக்கத்துக்கு ஆளானவர்களே.

ஆர். சிவகுமார்

உருமாற்றம்

1

ஒருநாள் காலை கெட்ட கனவுகளிலிருந்து திடுக்கிட்டு விழித்தெழுந்த க்ரகர் சேம்சா தன் படுக்கையில் தான் ஒரு பிரம்மாண்டமான பூச்சியாக மாறியிருப்பதைக் கண்டான். போர்க் கவசத்தின் தகடு பொருத்தப்பட்டதைப்போல விறைப்பாக முதுகுப்புறம் கீழிருக்க அவன் படுத்துக் கொண்டிருந்தான். தலையைச் சிறிது தூக்கிப் பார்த்தபோது வளைந்த முகடு போன்றிருந்த அவனுடைய பழுப்புநிற வயிறு விறைப்பாகவும் வில்போல வளைந்திருந்த பிரிவுகளையுடையதாகவும் இருந்ததைக் கவனித்தான். வயிற்றின் உச்சியின் மீதிருந்த தடிமனான போர்வை தன் உரிய இடத்தில் இருக்க முடியாமல் முழுக்க சரிந்து விழ இருந்தது. அவனுடைய உடலின் மற்றப் பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பரிதாபகரமாக மெலிந்து போயிருந்த அவனுடைய எண்ணற்ற கால்கள் அவன் கண் முன்னால் அனிச்சையாக அலையாடிக்கொண்டிருந்தன.

எனக்கு என்ன ஆயிற்று? அது ஒன்றும் கனவல்ல. அவனுடைய அறை இயல்பான ஒரு மனிதப் படுக்கை அறைதான். அது மிகவும் சிறியதாக, அதிகம் பரிச்சயப்பட்ட நான்கு சுவர் களுக்கிடையில் அமைதியாக இருந்தது. சேம்சா ஊர் ஊராகப்போகும் ஒரு விற்பனைப் பிரதிநிதி. பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட துணி மாதிரிகள் பரப்பப்பட்டிருந்த மேஜையை ஒட்டிய சுவரில், விளக்கப்படங்கள் நிறைந்த பத்திரிகை ஒன்றிலிருந்து சமீபத்தில் சேம்சா கத்திரித்து எடுத்த படம் ஒன்று மெருகூட்டப்பட்ட சட்டம் போடப்பட்டு தொங்கிக் கொண்டிருந்தது. ஃபர் தொப்பியும் ஃபர் தோளங்கியும் அணிந்திருந்த ஒரு பெண்ணின் படம் அது; பார்வையாளருக்கு ஒரு மிகப்பெரிய ஃபர் கம்பளிக் கையுறையைக் காட்டியபடி அவள் விறைப்பாக உட்கார்ந்திருந்தாள்; அந்தக் கம்பளிக் கையுறையில் அவளுடைய முன்னங்கை முழுவதும் மறைந்திருந்தது.

அடுத்து ஜன்னலை நோக்கி க்ரகரின் கண்கள் திரும்பின. மூட்டமான வானம் அவனை சோகமுறச் செய்தது. மழைத்துளிகள் ஜன்னல் மீது மோதி விழுவதைக் கேட்க முடிந்தது. இந்த அபத்தத்தையெல்லாம் மறந்துவிட்டு இன்னும் கொஞ்சநேரம் தூங்கினால் என்ன என்று அவன் நினைத்தான்.

ஆனால் அப்படிச் செய்ய முடியாது. காரணம் வலது பக்கம் படுத்தே அவன் பழகியிருந்தான். இப்போதுள்ள நிலையில் அவனால் உடலைத் திருப்பிப் படுக்க முடியாது. எவ்வளவு சிரமப்பட்டு அவன் தன்னை வலதுபக்கம் திருப்ப முயன்றாலும் மீண்டும் உருண்டு முதுகு கீழே இருக்கும்படியே படுக்க நேர்ந்தது. குறைந்தது நூறு முறையாவது இந்த முயற்சியில் அவன் ஈடுபட்டிருப்பான்; அப்படிச் செய்யும்போதெல்லாம் போராடும் தன் கால்களைப் பார்ப்பதைத் தவிர்க்கக் கண்களை மூடிக்கொண்டான். இதற்கு முன் அனுபவித்திராத ஒரு மந்தமான, மெல்லிய வலியை விலாவில் உணர ஆரம்பித்ததும் திரும்பிப் படுக்க முயன்றதைக் கைவிட்டான்.

‘கடவுளே! என்ன ஒரு களைப்படையச் செய்யும் வேலையைத் தேர்ந்தெடுத்து விட்டேன்!’ என்று அவன் நினைத்தான். தினந்தோறும் ஊர் சுற்றும் வேலை. நேரிடையான வியாபாரத்தைப் பண்டகசாலையில் செய்வதைக் காட்டிலும் இது அதிகம் எரிச்சலூட்டும் வேலை. இடைவிடாத பிரயாணத் தின் அலுப்பு; அடுத்தடுத்து சரியான நேரத்தில் ரயில்களைப் பிடிக்கவேண்டிய கவலை; நேரந்தவறிய சாப்பாடு; மனதுக்குப் பிடிக்காத படுக்கை; எப்போதும் புதிதாக ஏற்பட்டு, எக்காலத் திலும் நெருக்கமான நட்பாக மாறாத தற்செயலான தொடர்புகள் ஆகியவை இவ்வேலையின் மோசமான அம்சங்கள். வயிற்றின் மேல் ஒரு லேசான அரிப்பை உணர்ந்தான். மல்லாந்து, படுத்தவாறே கட்டிலின் தலைப்பகுதியை நோக்கி மெதுவாக தன்னைப் பின்னுக்குத் தள்ளினான்; அதனால் தலையைத் தூக்கிப் பார்ப்பதில் உண்டான சிரமம் குறைந்தது. நிறைய சின்னஞ்சிறு வெள்ளைப் பகுதிகளால் — இவற்றின் இயல்பை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை — சூழப்பட்டிருந்த அரிப்பெடுக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அதை கால் ஒன்றால் தொட்டான். அந்த ஸ்பரிசம் அவன் உடலில் உண்டாக்கிய ஒரு குளிர்ச்சியான நடுக்கம் காரணமாகக் காலை சட்டென்று இழுத்துக்கொண்டான்.

சரிந்து மீண்டும் பழைய நிலைக்கு வந்தான். அதிகாலையில் படுக்கையிலிருந்து எழுவது ஒருவனை மந்தமானவனாக ஆக்குகிறது என்று நினைத்தான். மனிதனுக்குத் தூக்கம் அவசியம். மற்ற விற்பனைப் பிரதிநிதிகள் அந்தப்புரப் பெண்களைப்போல வாழ்கிறார்கள். உதாரணமாக, எனக்குக் கிடைத்த ஆர்டர்களை எழுதுவதற்காகக் காலையில் நான் ஹோட்டலுக்குத்

திரும்பும்போதுதான் மற்ற பிரதிநிதிகள் காலை உணவைச் சாப்பிட உட்கார்கிறார்கள். என்னுடைய மேலதிகாரியிடம் அப்படி நான் ஒருமுறை செய்து பார்த்தால் அதே இடத்திலேயே வேலையிலிருந்து நீக்கப்படுவேன். எப்படியிருந்தாலும் அது ஒருவேளை எனக்கு நல்லதாகக்கூட இருக்கலாம். யார் சொல்ல முடியும்? என்னுடைய பெற்றோருக்காக நான் பொறுமையாக இருக்கவேண்டியிருக்கிறது. இல்லாமலிருந்தால் நான் எப்போதோ பணிவிலகல் அறிவிப்பைக் கொடுத்திருப்பேன். என்னுடைய அதிகாரியிடம் போய் அவரைப்பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பதை முகத்துக்கு நேராகச் சொல்லியிருப்பேன். என்னுடைய அபிப்பிராயம் அவரை அவருடைய இருக்கையிலிருந்து பக்கவாட்டில் தள்ளியிருக்கும். உயரமான இருக்கையில் உட்கார்ந்துகொண்டு வேலையாட்களிடம் அவர் குனிந்து பேசிக்கொண்டிருப்பது — அவருக்குக் காது வேறு சரியாகக் கேட்காது — விசித்திரமான காட்சியாக இருக்கும். நல்லது, இன்னும் நம்பிக்கை இருக்கிறது; அவரிடம் என் பெற்றோர் பட்ட கடனை அடைக்குமளவுக்குப் பணத்தை சேமித்த பிறகு — அதற்கு இன்னும் ஐந்து அல்லது ஆறு வருடங்கள் பிடிக்கும் — நிச்சயம் அதை செய்யத்தான் போகிறேன். அப்போது இந்தவேலையிலிருந்து என்னை முழுதாக விடுவித்துக் கொள்வேன். ஆனாலும் இப்போது நான் எழுவது நல்லது; ஐந்து மணிக்குக் கிளம்பும் ரயிலைப் பிடிக்கவேண்டும்.

மேஜையின் மேலிருந்த அலாரம் கடிகாரத்தைப் பார்த்தான். கடவுளே! ஆறரை மணி ஆகியிருந்தது. கடிகார முட்கள் ஓசையில்லாமல் நகர்ந்து கொண்டிருந்தன. மணி ஆறரைக்கும் அதிகமாகவே, ஆறே முக்காலை நெருங்கிக் கொண்டிருந்தது. அலாரம் அடிக்கவில்லையா? நான்கு மணிக்கு அடிக்கும்படி அலாரம் வைத்திருப்பதைப் படுக்கையிலிருந்தே பார்க்க முடிந்தது. நிச்சயம் அலாரம் அடித்திருக்க வேண்டும். காதைப் பிளக்கும் அந்த சத்தத்தில் அமைதியாகத் தூங்குவது சாத்தியம்தானா? அவன் நிம்மதியாகத் தூங்கியிருக்கவில்லை; ஆனால் விசித்திரமாக அவன் ஆழ்ந்தும் தூங்கியிருக்கிறான். இப்போது என்ன செய்வது? அடுத்த ரயில் ஏழு மணிக்குக் கிளம்புகிறது. அதைப் பிடிக்கவேண்டுமானால் அவன் அவசரம் அவசரமாகக் கிளம்ப வேண்டும். அவனடைய துணி மாதிரிகள் அடுக்கப்படாமல் கிடக்கின்றன. மேலும் அவன் உற்சாகமாகவும் இல்லை. ஏழு மணி ரயிலைப்

பிடித்தாலும் அவனுடைய அதிகாரியோடு சண்டைபிடிப்பதைத் தவிர்க்க முடியாது. ஏனென்றால் போர்ட்டர் ஐந்து மணி ரயிலைப் பார்த்துவிட்டு அவன் வராததை அதிகாரியிடம் இந்நேரத்திற்குள் சொல்லியிருப்பான். அந்தப் போர்ட்டர் அதிகாரியின் ஆள்; முதுகெலும்பில்லாத முட்டாள். உடம்பு சரியில்லையென்று காரணம் சொன்னால்? ஆனால் அது மிகவும் சங்கடமாகவும், சந்தேகப்படும்படியாகவும் இருக்கும். ஏனென்றால் இந்த ஐந்து வருடப் பணியில் அவன் ஒரு தடவைகூட நோயுற்றதில்லை. உடல்நலமில்லையென்று சொன்னால் அதிகாரி நிச்சயம் இன்ஷ்யூரன்ஸ் டாக்டரைக் கூட்டிவந்து விடுவார். அந்த டாக்டரோ, உலகின் எல்லா மனிதர்களும் ஆரோக்கியமானவர்கள் என்றும் கடமையிலிருந்து தப்பிக்கவே நோயுற்றவர்கள்போல பாசாங்கு செய்கிறவர்கள் என்றும் நம்புகிறவர். டாக்டர் சொல்வதைச் சுட்டிக்காட்டி அவனுடைய சோம்பேறித்தனத்திற்காக அவனுடைய பெற்றோரை அதிகாரி திட்டுவார். எந்தக் காரணத்தையும் அவர் ஒப்புக்கொள்ள மாட்டார். அப்படி தான் செய்வது இந்தச் சூழ்நிலையில் தவறா? தான் தற்போது நன்றாக இருப்பதாகவே க்ரகருக்குப் பட்டது. நீண்ட தூக்கத்திற்குப் பிறகு உண்டாகக்கூடாத மந்தமும் அபரிமிதமான பசியும் மட்டுமே இப்போது அவனுக்கு இருந்தன.

இப்படியான எண்ணங்கள் அவன் மனத்தில் அதிவேகமாக ஓடிக்கொண்டிருந்தன. படுக்கையிலிருந்து எழுவதற்குத் தீர்மானிக்கவும் அவனால் முடியவில்லை. கடிகாரத்தில் ஆறே முக்கால் மணி அடித்தபோது படுக்கையின் பின்புறமிருந்த கதவை மென்மையாகத் தட்டும் சத்தம் வந்தது. “க்ரகர்” என்று ஒரு குரல் வந்தது. அது அவனுடைய அம்மாவின் குரல். “மணி ஆறே முக்கால். ரயிலை விட்டுவிட்டாயா?” என்ன மென்மையானகுரல்! அவளுக்குப் பதில் சொன்ன தன் குரலைக் கேட்டபோது அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. சந்தேகமேயில்லாமல் அது அவனடைய குரல்தான். ஆனால் அதோடு சேர்ந்து நாராசமாகக் கிறீச்சிடும் ஒரு பறவையின் ஒலியும் கேட்டது. இந்தக் கிறீச்சிடும் ஒலி முதலில் வார்த்தைகளைத் தெளிவான உருவில் காட்டினாலும், அடுத்த கணத்திலேயே அவ்வொலி மேலெழுந்து வார்த்தைகளைச் சுற்றி எதிரொலித்தது. அவற்றின் அர்த்தத்தைச் சிதைத்து கேட்பவரை சரியாகக் கேட்டோமா என்று சந்தேகப்படும்படி வைத்துவிட்டது.

க்ரகர் நடந்த எல்லாவற்றையும் விரிவாக விளக்கத்தான் ஆசைப்பட்டான். ஆனால், ‘‘ஆமாம் அம்மா, நன்றி. இதோ எழுந்துவிடுகிறேன்’’ என்று மட்டும் சொல்லி சூழ்நிலை காரணமாக நிறுத்திக்கொண்டான். அவனுக்கும் அவனுடைய அம்மாவுக்கும் இடையிலிருந்த மரக்கதவு அவனுடைய குரலில் இருந்த மாற்றத்தை வெளியிலிருப்பவர்கள் உணர முடியாமல் செய்துவிட்டிருக்க வேண்டும். ஏனென்றால், அவனுடைய அம்மா அவன் சொன்ன பதிலில் திருப்தியடைந்து சப்தம் எழ நடந்துபோய்விட்டாள். ஆனாலும் இந்தச் சிறிய உரையாடல் க்ரகர் இன்னும் வீட்டில்தான் இருக்கிறான் என்பதை வீட்டிலிருந்த மற்றவர்கள் உணரச்செய்தது. அவர்கள் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய அறையின் பக்கவாட்டுக் கதவுகளில் ஒன்றை அவனுடைய அப்பா கைமுட்டியால் மென்மையாகத் தட்டிக்கொண்டிருந்தார். ‘‘க்ரகர், க்ரகர், என்ன ஆயிற்று உனக்கு?’’ என்று கேட்டார். கொஞ்சம் கழித்து இன்னும் குரலை சற்று உயர்த்தி, ‘‘க்ரகர், க்ரகர்’’ என்று கூப்பிட்டார். அடுத்த பக்கத்துக் கதவருகில் நின்றுகொண்டு அவனுடைய தங்கை க்ரீட் வருத்தம் தோய்ந்த மெல்லிய குரலில், ‘‘உனக்கு உடம்பு சுகமில்லையா? உனக்கு ஏதும் வேண்டுமா?’’ என்று கேட்டாள். அவர்கள் இருவருக்கும் சேர்த்து அவன் உடனே பதில் சொன்னான். ‘‘இதோ தயாராகிவிட்டேன்.’’ இதைச் சொல்லும்போது வார்த்தைகளுக்கிடையே இடைவெளி விட்டும் தெளிவாக உச்சரித்தும் தன்னுடைய குரல் இயல்பாக ஒலிக்குமாறு முயற்சி செய்தான். எனவே அவனுடைய அப்பா காலை உணவு சாப்பிடப் போய்விட்டார். ஆனால் அவனுடைய தங்கை மெதுவாகப் பேசினாள்: ‘‘க்ரகர், தயவுசெய்து கதவைத் திற.’’ ஆனால் அவன் கதவைத் திறப்பதைப் பற்றி யோசிக்கவே இல்லை. பயணங்களின்போது இரவு நேரங்களில் தங்கும் அறைகளின் எல்லாக் கதவுகளையும் உள்பக்கம் பூட்டிவைக்கும் விவேகமான பழக்கத்தை வீட்டிலும் கடைப்பிடிப்பது பற்றி தனக்குத்தானே நன்றி சொல்லிக்கொண்டான்.

எந்தத் தொந்தரவும் இல்லாமல் அமைதியாக எழுந்து உடையணிந்து கொண்டு, அதற்கும் மேலாகக் காலை உணவைச் சாப்பிட்ட பிறகே வேறு என்ன செய்யவேண்டும் என்று யோசிப்பது அவனுடைய உடனடித் திட்டமாக இருந்தது. இப்படிப் படுக்கையில் படுத்துக்கொண்டு தீவிரமாகச் சிந்திப்பதன்

மூலம் எந்த புத்திசாலித்தனமான முடிவுக்கும் வரமுடியாது என்பது அவனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. படுக்கையிலிருந்து எழும்போது சின்னச்சின்ன வலியும் தசைப்பிடிப்பும் அவனுக்கு அவ்வப்போது இருந்திருக்கின்றன. பெரும்பாலும் அலங்கோலமான நிலைகளில் தூங்குவதால் அவை உண்டாகியிருக்கலாம். ஆனால், படுக்கையிலிருந்து எழுந்தவுடன் அவை முற்றிலும் கற்பனையானவை என்று தெரியவரும். அதேபோல இன்று காலை ஏற்பட்டிருக்கும் பிரமைகளும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடுமா என்று ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருந்தான். அவனுடைய குரலில் ஏற்பட்டுள்ள மாற்றம், ஊர்சுற்றும் வியாபாரப் பிரதிநிதிகளுக்கு அடிக்கடி ஏற்படும் ஒரு மோசமான குளிர்க்காய்ச்சலுக்கு ஒரு முன்னோட்டமே என்பதில் அவனுக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

போர்வையை விலக்குவது எளிதாகவே இருந்தது; காற்றை உள்ளிழுத்து உடம்பை உப்ப வைத்தவுடன் அது தானாகவே விழுந்துவிட்டது. அவன் அசாதாரண அளவில் அகலமாக இருந்ததால் அடுத்த அசைவு சிரமமாக இருந்தது. தன்னைத் தூக்கி நிறுத்திக்கொள்ள அவனுக்குத் தேவைப்பட்டவை மேல் கைகளும் உள்ளங்கைகளும்; மாறாக, அவனுக்கு இருந்தவை ஏராளமான சிறிய கால்கள் மட்டுமே. அவனால் கொஞ்சமும் கட்டுப்படுத்த முடியாதபடி எல்லாத் திசைகளிலும் அலைபாய்ந்தவாறு அவை இருந்தன. அவற்றில் ஏதாவதொன்றை அவன் வளைக்க முயன்றால் அந்தக் கால்தான் முதலில் நேராக நீட்டிக் கொண்டது. ஒரு கட்டத்தில் மற்றக் கால்களெல்லாம் முன்னைவிட மூர்க்கமாகவும் அலங்கோலமாகவும் அலைபாய்ந்தன. ‘இப்படி சோம்பேறித்தனமாகப் படுத்து கிடப்பதால் என்ன பயன்?’ என்று க்ரகர் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

இன்னும் அவன் பார்க்காத, அதைப்பற்றி எந்த அபிப்பிராயமும் ஏற்படுத்திக் கொள்ள முடியாத அவனுடைய உடலின் கீழ்ப்பாகத்தை முதலில் அசைத்து அதன்மூலம் படுக்கையிலிருந்து எழுந்து கொள்ள முடியும் என்று நினைத்தான். ஆனால் அதை அசைப்பது மிகக் கடினமாக இருந்தது. மிக மெதுவாக அது உயர்ந்தது. கடைசியாக, அந்தத்தொந்தரவு கொடுத்த எரிச்சலில் தன்னுடைய சக்தியையெல்லாம் திரட்டி முரட்டுத்தனமாக கீழ்ப்பாகத்தை அசைத்துத் தள்ளினான். அசைத்த திசையைத் தவறாகக் கணித்ததால் படுக்கையின்

கால்மாடு மீது பலமாக மோதிக்கொண்டான். அதனால் ஏற்பட்ட கடுமையான வலி, அவன் உடலின் கீழ்ப்பாகமே அந்தக் கணத்தில் அதீதமான உணர்ச்சியுடையது என்பதை அவனுக்கு உணர்த்தியது.

எனவே உடலின் மேல்பாகத்தை முதலில் உயர்த்த முயன்றான். படுக்கையின் விளிம்புக்குத் தலையை ஜாக்கிரதையாக நகர்த்தினான். இது எளிதாகவே இருந்தது. அகலமாகவும் கனமாகவும் இருந்தும் அவனுடைய உடலின் பருமன் முழுவதும் அவனுடைய தலையின் போக்கில் நகர்ந்தது. படுக்கையின் விளிம்புக்கு வெளியே தலயை நகர்த்தியபிறகு மேலும் நகர அவன் பயந்தான். தலை படுக்கைக்கு வெளியே இருக்கும் நிலையில் கீழே விழுந்தால் தலையில் அடிபட்டு விடுமே என்று நினைத்ததால் உண்டான பயமாகவும் அது ஒருவேளை இருக்கலாம். என்ன நடந்தாலும் அவன் தன்னுடைய சுயஉணர்வை மட்டும் இந்த நேரத்தில் நிச்சயம் இழக்கக்கூடாது. அதற்குப் பதிலாக பேசாமல் படுக்கையிலேயே கிடக்கலாம்.

முன்பு செய்த மாதிரியே மீண்டும் ஒருமுறை முயன்றபிறகு பழைய நிலையிலேயே கிடந்தான். தன்னுடைய சிறிய கால்கள் முன்பு எப்போதையும்விட அதிக மூர்க்கத்துடன் ஒன்றோடொன்று போராடியவாறு இருந்ததைப் பெருமூச்சு விட்டபடி கவனித்தான். இந்தத் தான்தோன்றித்தனமான குழப்பத்தை எவ்வித ஒழுங்குக்கும் கொண்டுவர முடியாது என்பதை அறிந்துகொண்ட அவன், எந்த ஆபத்தையும் எதிர்கொண்டு படுக்கையிலிருந்து எழுவதற்கு முயல்வதே புத்திசாலித்தனமான செயலாக இருக்கும் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். அதேசமயம், ஆழ்ந்த அமைதியான சிந்தனை, முரட்டுத் தீர்மானங்களைவிட சிறந்தது என்பதைத் தனக்குத்தானே நினைவூட்டிக் கொள்ளவும் அவன் தவறவில்லை. இப்படி யோசித்துக்கொண்டே அதிகபட்ச துல்லியத்தோடு ஜன்னலின் மீது தன் பார்வையைக் குவித்தான். ஆனால் துரதிருஷ்டவசமாக அந்தக் குறுகிய தெருவின் மறுபக்கத்தைக்கூட திரையிட்டு மறைத்திருந்த காலைநேர மூடுபனியின் காட்சிப்பரப்பு எந்தவித நம்பிக்கையையும் ஆறுதலையும் அவனுக்கு அளிக்கவில்லை. கடிகாரத்தின் மணி அடித்தபோது ‘ஏழுமணி ஆகியும் அடர்ந்த மூடுபனி’ என்று சொல்லிக்கொண்டான். இவ்வகையான முழு ஓய்வு, சூழ்நிலையை

இயல்புக்குக் கொண்டுவந்துவிடும் என்று எதிர்பார்ப்பவனைப்போல அவன் மெலிதாக சுவாசித்துக்கொண்டு அமைதியாகப் படுத்துக்கிடந்தான்.

ஆனால் அதன்பிறகு தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்: ‘ஏழே கால் மணி ஆவதற்குள் கண்டிப்பாக நான் படுக்கையைவிட்டு எழுந்திருக்க வேண்டும். எப்படியிருந்தாலும், பண்டகசாலை ஏழு மணிக்கு முன்பாகவே திறப்பதால் அதற்குள்ளாக யாராவது என்னைத் தேடி வந்துவிடுவார்கள்.’ முன்னும் பின்னுமாக ஆட்டி தன்னுடைய உடலை படுக்கையிலிருந்து இறக்கிவிடும் எண்ணத்துடன் சீரான தாளகதியோடு உடலை அசைக்கத் தீர்மானித்தான். இந்த முறையில் கீழே விழுந்தால் தன்னுடைய தலையைக் குறுங்கோண நிலையில் வைத்துக்கொள்வதன் மூலம் காயம்படுவதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். முதுகுப்புறம் கடினமாக இருப்பதாகத் தோன்றுவதால் தரைவிரிப்பின் மீது விழுவதால் காயம் ஏற்பட வழியில்லை. அப்படி விழும்போது நிச்சயமாக ஏற்படப்போகும் பலத்த ஓசை கதவுகளுக்கு அப்பாலுள்ள தன் குடும்பத்தவர்க்கு என்னவோ ஏதோ என்ற கலக்கத்தை உண்டுபண்ணிவிடுமே என்பதுதான் அவனுடைய பெரிய கவலையே. இருந்தாலும் அவன் அந்த அபாயத்தை சந்தித்துத்தான் ஆகவேண்டும்.

இந்தப் புதுத்திட்டம் ஒரு முயற்சி என்பதை விடவும் முன்னும் பின்னும் அசைத்துத் தன் உடலைத் தூக்கி நகர்த்திக்கொள்ளும் ஒரு விளையாட்டாகவே அவனுக்குப் பட்டது. படுக்கையிலிருந்து ஏறத்தாழ பாதி வெளிவந்துவிட்ட நிலையில், யாராவது உதவினால் எவ்வளவு எளிதாக எழுந்துவிட முடியும் என்று அவனுக்குத் தோன்றியது. அப்பாவையும் வேலைக்காரப் பெண்ணையும் போன்ற திடகாத்திரமான இரண்டு பேர் உதவினால் போதும். அவனுடைய குவிந்த முதுகின் கீழ் அவர்கள் தங்கள் கைகளை நுழைத்து அவனை அப்படியே தூக்கித் தரையில் கிடத்திவிட்டால் போதும். பிறகு அவனாகவே வலதுபுறமாகத் தன்னைத் திருப்பிக்கொண்டால், கால்கள் தங்கள் வேலையைக் கிரமமாக செய்யத் தொடங்கிவிடும். எல்லாக் கதவுகளும் உள்பக்கம் பூட்டியிருப்பதைப் பொருட்படுத்தாமல் அவன் உதவிக்கு யாரையாவது உண்மையில் கூப்பிடவேண்டுமா? அத்தனை துன்பத்திலும் இந்த எண்ணம் வரவழைத்த புன்னகையை அவனால் அடக்க முடியவில்லை.

தன்னை அசைத்துக்கொண்டே தன் சமநிலையை இழந்து விடும் அளவுக்குப் படுக்கையின் விளிம்புக்கு வந்துவிட்டான். கடைசியும் உறுதியுமுமான ஒரு முடிவை எடுக்கும் துணிச்சல் இப்போது அவனுக்குத் தேவை. ஏனென்றால் இன்னும் ஐந்து நிமிடங்களில் மணி ஏழே கால் ஆகிவிடும். அப்போது வாயில் மணி அடித்தது. ‘பண்டக சாலையிலிருந்து யாரோ வந்து விட்டார்கள்’ என்று சொல்லிக்கொண்டான். அவன் உடல் விறைப்பானது. அவனுடைய சிறியகால்கள் மேலும் வேகமாக அசைந்தாடின. ஒருகணம் எல்லாமே நிசப்தமாகிப் போனது. கண்மூடித்தனமான ஒரு நம்பிக்கையுடன், ‘அவர்கள் யாரும் கதவைத் திறக்கப்போவதில்லை’ என்று சொல்லிக்கொண்டான். ஆனால் வேலைக்காரப் பெண் தன் வழக்கமான கனத்த காலடிச் சத்தத்தோடு நடந்துபோய் கதவைத் திறந்தாள். வந்தது தலைமை எழுத்தர் என்பதை அவர் சொன்ன காலை வணக்கத்திலிருந்தே க்ரகர் தெரிந்துகொண்டான். ஒரு சிறிய தவறுகூட ஒரு மிகப்பெரிய, ஆபத்து நிறைந்த சந்தேகத்திற்கு இட்டுச்செல்லும் ஒரு நிறுவனத்தில் பணியாற்ற வேண்டியிருந்த தன் விதியை அவன் நொந்துகொண்டான். எல்லாப் பணியாளர்களும் ஒட்டுமொத்தமாக ஓர் அயோக்கியக்கூட்டமா? விசுவாசமும் அர்ப்பணிப்பும் கொண்ட ஒரே ஒரு பணியாளனாகத் தான் இல்லையா? நிறுவனத்தின் காலைப்பொழுதில் ஒரு மணி நேரத்தை அவன் விரயம் செய்திருந்தாலும், மனச்சாட்சியால் சித்திரவதைப்பட்டு படுக்கையிலிருந்து எழ இயலாமல் இருப்பது உண்மை இல்லையா? அவனுடைய தாமதத்தை விசாரிக்க அவசியம் நேர்ந்திருந்தால் பயிற்சி பெறும் ஒருவனை அனுப்பியிருந்தால் போதாதா? இது ஏதோ மிகப்பெரிய சந்தேகத்திற்கிடமான குற்றம் என்று அவனுடைய கள்ளங்கபடமற்ற குடும்பத்திற்கு உணர்த்துவதுபோல அதை விசாரிக்க அனுபவம் வாய்ந்த தலைமை எழுத்தர் போன்ற ஒருவரே வரவேண்டுமா என்ன? தன் மனஉறுதியின் செயல் என்பதைவிடவும் மேற்கூறிய சிந்தனைகள் உண்டாக்கிய கலவரத்தால் அதிகம் உந்தப்பட்டு, தன் முழுவலிமையோடு படுக்கையிலிருந்து வெளியே தன்னை வீசி எறிந்துகொண்டான். ஒரு பெருத்த ஓசை உண்டானது; ஆனால் எந்த முறிவும் இல்லை. அவன் விழுந்ததால் உண்டான ஓசையையும் வலியையும் தரைக்கம்பளம் கொஞ்சம் மட்டுப் படுத்தியது. அவன் நினைத்ததைப்போல அவன் முதுகு அதிக விறைப்புடன்

இல்லை. எனவே, தெளிவாகக் கேட்காத ஒரு மோதல் ஓசை அதிர்ச்சி ஏற்படுத்தாத வகையில் உண்டானது. கவனமாகத் தலையை உயர்த்தாததால் தலை தரையில் மோதி விட்டது. வலியாலும் எரிச்சலாலும் தலையை அசைத்துத் தேய்த்துக் கொண்டான்.

இடதுபுற அறையிலிருந்த தலைமை எழுத்தர், 'அங்கு ஏதோ விழுந்தது போலிருக்கிறது' என்று சொன்னார். இன்று தனக்கு நிகழ்ந்ததைப் போலத் தலைமை எழுத்தருக்கு என்றாவது ஒருநாள் நிகழக்கூடும் என்ற கற்பிதத்தை நம்ப முயன்றான். ஆனால் இந்தக் கற்பிதத்திற்கு வேகமாக பதிலளிப்பதைப்போல தலைமை எழுத்தர் மெருகூட்டப்பட்ட தோலால் ஆன தன் பூட்சுகள் சத்தமிட அடுத்த அறையில் உறுதியான இரண்டு காலடிகள் எடுத்துவைத்தார். வலப்புற அறையிலிருந்து அவனுடைய தங்கை சூழ்நிலையை அவனுக்குத் தாழ்ந்த குரலில் தெரிவித்தாள். "க்ரகர்! தலைமை எழுத்தர் வந்திருக்கிறார்," க்ரகர் தனக்குத்தானே, 'எனக்குத் தெரியும்' என்று முணுமுணுத்தான். அவனுடைய தங்கைக்குக் கேட்கும் அளவுக்குத் தன் குரலை உயர்த்திப்பேச அவனுக்குத் தைரியமில்லை.

இப்போது இடதுபுற அறையிலிருந்து அவனுடைய அப்பா சொன்னார். "க்ரகர்! தலைமை எழுத்தர் வந்துள்ளார். வழக்கமான ரயிலைப் பிடித்து நீ ஏன் வரவில்லை என்று கேட்கிறார். அவருக்கு என்ன பதில் சொல்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை. மேலும் அவர் உன்னிடம் நேரிடையாகப் பேச விரும்புகிறார். தயவுசெய்து கதவைத் திற; அலங்கோலமான உன் அறையை அவர் சகித்துக் கொள்வார்."

இதற்கிடையில் தலைமை எழுத்தர் இணக்கமான குரலில், "காலை வணக்கம், மிஸ்டர் சேம்சா," என்று சொன்னார். அவனுடைய அப்பா கதவின் ஊடாகப் பேசிக்கொண்டிருக்கும்போதே அவனுடைய அம்மா, "அவனுக்கு உடம்பு சரியில்லை," என்று தலைமை எழுத்தரிடம் சொன்னாள். தொடர்ந்து அவள், "என்னை நம்புங்கள் ஐயா, அவனுக்கு உடல் நலமில்லை. இல்லையென்றால் அவன் நிச்சயம் காலை ரயிலைத் தவறவிட்டிருக்க மாட்டான். என் பையன் வேலையைத் தவிர வேறு எதையும் நினைப்பது கிடையாது. மாலை நேரங்களில்கூட அவன்வெளியே போகாமல் இருப்பதுபற்றி எனக்கும் கோபம்தான். கடந்த எட்டு நாட்களாக இங்குதான் இருக்கிறான்.

ஒருநாள் மாலைகூட அவன் வெளியே போனது கிடையாது. மேஜை முன்னால் அமைதியாக உட்கார்ந்துகொண்டு தினப்பத்திரிகைகளைப் படித்துக்கொண்டோ ரயில் கால அட்டவணையைப் பார்த்துக்கொண்டோதான் இருக்கிறான். சித்திர வேலைப்பாடு செய்வதுதான் அவனுடைய ஒரே பொழுதுபோக்கு. இரண்டு மூன்று மாலை நேரங்களைச் செலவழித்து அவன் தயாரித்த ஒரு சின்ன அழகான படச்சட்டத்தைப் பார்த்தால் நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். அந்தப் படம் அவனுடைய அறையில்தான் மாட்டப்பட்டிருக்கிறது. ஒரு நிமிஷம் பொறுத்தால் க்ரகர் கதவைத் திறக்கும்போது நீங்கள் அதைப் பார்க்கலாம். நீங்கள் வந்தது பற்றி எனக்கு சந்தோஷம். எங்களால் அவனைக் கதவைத் திறக்கவைக்க முடிந்திருக்காது. மிகவும் பிடிவாதமாக இருக்கிறான். அவன் ஒன்றுமில்லை என்று சொன்னாலும் நிச்சயம் அவனுக்கு ஏதோ உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது என்பதில் எனக்கு சந்தேகமில்லை,'' என்றாள். உரையாடலில் ஒரு வார்த்தையைக்கூட தவறவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு நிதானமாகவும் கவனமாகவும், ''இதோ வருகிறேன்,'' என்று க்ரகர் சொன்னான்.

''என்னாலும் வேறு எந்த காரணத்தையும் யோசிக்க முடிய வில்லை அம்மா,'' என்று சொன்ன தலைமை எழுத்தர் தொடர்ந்து கூறினார். ''கவலைப்படக்கூடிய அளவுக்கு எதுவும் இருக்காது என்று நம்புகிறேன். ஆனாலும், அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ எங்களைப் போன்ற வியாபாரிகள் சிறு உடல்நலக்குறைவைப் பொருட்படுத்தக் கூடாது; ஏனென்றால் வியாபாரம்தான் முக்கியம்.'' கதவைத் தட்டிக்கொண்டே க்ரகரின் அப்பா பொறுமையிழந்து, ''சரி, தலைமை எழுத்தர் இப்போது உள்ளே வரலாமா?'' என்று கேட்டார். ''வேண்டாம்'' என்றான் க்ரகர். இந்த மறுப்புக்குப் பிறகு இடதுபுற அறையில் ஒரு சோகமான அமைதி நிலவ ஆரம்பித்தது. வலதுபுற அறையில் அவனுடைய தங்கை தேம்பி அழ ஆரம்பித்தாள்.

ஏன் அவனுடைய தங்கை இதுவரை மற்றவர்களோடு சேர்ந்துகொள்ளவில்லை? இப்போதுதான் அவள் படுக்கையி லிருந்து எழுந்திருக்க வேண்டும்; இன்னும் உடைகளைக்கூட அவள் அணிய ஆரம்பிக்கவில்லை போலிருக்கிறது. ஏன் அவள் அழுகிறாள்? அவன் எழுந்து தலைமை எழுத்தரை உள்ளே அனுமதிக்காததாலா? அவன் வேலையை இழந்துவிடும் ஆபத்திலிருப்பதாலா?

பழைய கடன்களுக்கு அவனுடைய முதலாளி அவர்களுடைய பெற்றோரை நெருக்க ஆரம்பிப்பார் என்பதாலா? இப்போதைக்கு இந்த விஷயங்கள் பற்றி நிச்சயம் யாரும் கவலைப்பட வேண்டாம்தான். க்ரகர் இன்னும் வீட்டில் தான் இருக்கிறான்; குடும்பத்தைப் புறக்கணிக்கும் எண்ணம் அவனிடம் எள்ளளவும் இல்லை. இந்த நிமிடத்தில் அவன் உண்மையிலேயே தரைவிரிப்பில் படுத்துக்கொண்டிருக்கிறான். அவனால் தலைமை எழுத்தரை உள்ளே விடமுடியும் என்று அவனுடைய நிலை தெரிந்த யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். பிறிதொரு சமயத்தில் நம்பும்படியாக விளக்கம் தரமுடிகிற இந்த ஒரு சிறிய அவமரியாதைக்காக க்ரகரை அதே இடத்தில் வேலைநீக்கம் செய்யமுடியாது. கண்ணீராலும் கெஞ்சல்களாலும் அவனைத் தொல்லைப்படுத்துவதைவிட இப்போதைக்கு அவனை நிம்மதியாக அப்படியே விட்டுவிடுவது புத்திசாலித்தனம் என்று க்ரகருக்குத் தோன்றியது. ஆனாலும் இந்தக் குழப்பமான சூழல் மற்றவர்களை நிலைகுலைய வைத்து அவர்களின் நடத்தையையும் நியாயப்படுத்தியது.

தலைமை எழுத்தர் உரத்த குரலில், “சேம்சா, உனக்கு என்ன ஆயிற்று? அறையில் உன்னை அடைத்துக்கொண்டு, எங்கள்கேள்விகளுக்கு வெறும் ‘உண்டு’ ‘இல்லை’ என்று மட்டும் பதில்சொல்லிக்கொண்டு, உன் பெற்றோருக்குத் தேவையில்லாமல் நிறைய தொல்லையையும் கொடுத்துக் கொண்டிருக்கிறாய். பேச்சு வாக்கில்தான் இதைச் சொல்கிறேன் — நம்பமுடியாதபடி உன்னுடைய வியாபாரக் கடமைகளையும் புறக்கணித்துக் கொண்டிருக்கிறாய். உன் பெற்றோர் சார்பாகவும் உன் முதலாளி சார்பாகவும் நான் இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன். உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன், உன் நடத்தைக்கு சரியான காரணம் சொல். என்னைத்தான் மிகவும் திகைக்க வைக்கிறாய். அமைதியான, நம்பிக்கைக்குரிய ஆளாக உன்னை நினைத்திருந்தேன். ஆனால் திடீரென்று இப்போது உனக்கு அவமதிப்பு ஏற்படும் வகையில் நடந்துகொள்கிறாய். இன்று காலை நீவேலைக்கு வராமல் காணாமல் போனதுக்கு பண விவகாரங்களில் உனக்கு பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருப்பது ஒரு சாத்தியமான காரணமாக இருக்கலாம் என்று முதலாளி மறைமுகமாகச் சொன்னார். நான் என்னுடைய கண்ணியத்தின் மீது மனமார ஆணையிட்டு அப்படி இருக்காது என்று சொன்னேன். ஆனால் இப்படி

நீ அநியாயத்துக்குப் பிடிவாதமாக இருப்பதைப் பார்க்கும்போது உனக்காகப் பரிந்து பேச எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. நம்முடைய நிறுவனத்தில் உன்னுடைய நிலை அப்படி ஒன்றும் வலுவானதாகவும் இல்லை. இதையெல்லாம் உன்னிடம் தனியாகச் சொல்லும் எண்ணத்துடன்தான் வந்தேன். ஆனால் என்னுடைய நேரத்தை நீ இப்படித் தேவையில்லாமல் வீணடிப்பதைப் பார்க்கும்போது, உன்னுடைய பெற்றோரும் ஏன் இவற்றைத் தெரிந்துகொள்ளக் கூடாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. சில நாட்களாகவே உன்னுடைய வேலை திருப்திகரமாக இல்லை. வியாபாரம் நன்றாக நடக்கும் சீசன் இல்லை இது என்பதை ஒத்துக்கொள்கிறோம். என்றாலும், வியாபாரம் கொஞ்சமும் நடக்காத காலம் என்று ஒன்று இல்லவே இல்லை, இருக்கவும் கூடாது, சேம்சா.''

தன்னுடைய கலவர நிலையில் எல்லாவற்றையும் மறந்துபோய் க்ரகர் குரலை உயர்த்திச் சொன்னான்: ''சார், அப்படி ஒன்றும் இல்லை. இந்த நிமிடத்திலேயே கதவைத் திறக்கிறேன். கொஞ்சம் உடல்நலமின்மையும் மயக்கமும் என்னை எழ விடாமல் செய்துவிட்டன. இன்னும் படுக்கையில்தான் இருக்கிறேன். ஆனால் இப்போது நன்றாகத்தான் இருக்கிறேன். இப்போது படுக்கையிலிருந்து எழுந்துகொண்டிருக்கிறேன். ஓரிரு நிமிட அவகாசம் கொடுங்கள். நான் நினைத்துக் கொண்டிருந்த அளவுக்கு ஆரோக்கியமாக இல்லை. உண்மையில் இப்போது நான் நன்றாகத்தான் இருக்கிறேன். நோய் எப்படி ஒருவனைத் தாக்கிப் படுக்கவைத்துவிடுகிறது! நேற்றிரவு நன்றாகத்தான் இருந்தேன். என் பெற்றோரை வேண்டுமானால் கேட்டுப்பாருங்கள். ஒருவேளை நேற்றே ஏதாவது அறிகுறியும் தெரிந்திருக்கலாம். பண்டகசாலையிலேயே ஏன்தான் சொல்லாமல் போனேனோ! ஆனால் வீட்டில் படுக்காமலேயே சுகவீனத்தைப் போக்கி விடலாம் என்றுதானே எல்லாரும் நினைக்கிறோம். தயவுசெய்து என்னுடைய பெற்றோரைத் தொந்தரவு செய்யாதீர்கள். நீங்கள் என்மீது சுமத்தும் குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித அடிப்படையும் கிடையாது. இதுவரை யாரும் அதைப்பற்றி என்னிடம் ஒரு வார்த்தைகூட சொன்னது கிடையாது. நான் கடைசியாக அனுப்பிய ஆர்டர்களை நீங்கள் பார்க்கவில்லை போலிருக்கிறது. எட்டுமணி ரயிலை என்னால் இதன்பிறகும்கூடப் பிடிக்க முடியும் என்று நம்புகிறேன். சில மணி நேரத் தூக்கத்துக்குப் பிறகு இப்போது நலமாகத்தான்

இருக்கிறேன். எனக்காகக் காத்திருக்காதீர்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் வேலைக்கு வந்துவிடுகிறேன். முதலாளியிடம் இதைச் சொல்லுங்கள்; தாமதத்திற்கு நான் வருந்துவதாகவும் அவரிடம் சொல்லுங்கள்.''

என்ன சொல்கிறோம் என்பதைச் சரிவர உணராமலேயே இவை எல்லாவற்றையும் வேகமாக உளறிக்கொண்டே இழுப்பறைகள் கொண்ட மேஜைக்கருகே எளிதாக நகர்ந்துசென்றுவிட்டான். படுக்கையில் முன்பு அசைந்து கொண்டிருந்ததால் கிடைத்த பயிற்சி இதை சாத்தியமாக்கியது. மேஜையை ஆதரவாகக் கொண்டு தன்னை உயர்த்திக்கொள்ள முயன்றான். கதவைத் திறந்து வெளியே வந்து தன்னை எல்லாரும் பார்க்குமாறு செய்து, தலைமை எழுத்தரிடம் பேசுவதுதான் இப்போது அவனுடைய நோக்கம். தான் வெளியே வரவேண்டும் என்று மிகவும் வற்புறுத்தியவர்கள் தன்னைப் பார்க்கும்போது என்ன சொல்வார்கள் என்று கேட்க அவனுக்கு ஆர்வமாக இருந்தது. அவனைப் பார்த்து பீதியடைந்தார்களென்றால் அவனுக்கு ஒரு கவலையும் இருக்காது; ஒன்றும் செய்யாமல் அமைதியாக இருந்துவிடலாம். ஆனால் அவர்கள் அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டாலும் அவன் கலக்கமடையக் காரணம் ஏதுமில்லை; அவசரமாகக் கிளம்பினால் எட்டு மணி ரயிலுக்கு ஸ்டேஷனுக்குப் போய்விட அவனால் முடியும். இழுப்பறைகளின் மெருகிடப்பட்ட மேற்பரப்பு வழுக்கியதால் சிலமுறை அவன் சறுக்கினான். ஆனால் கடைசியாக எம்பியதில் நேராக நின்றுகொண்டான்; அடிவயிற்றில் எவ்வளவு வலித்தாலும் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. பிறகு பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியின் முதுகுப்பக்கத்தில் வேகமாக சாய்ந்து அதன் விளிம்புகளைத் தன் சிறிய கால்களால் பற்றிக்கொண்டான். தன் உடல்மீது இப்போது அவனுக்கு ஒரு கட்டுப்பாடு வந்தது. தலைமை எழுத்தர் பேசுவதைச் சரியாகக் கேட்கவேண்டி தான் பேசுவதை நிறுத்திக்கொண்டான்.

தலைமை எழுத்தர் கேட்டுக்கொண்டிருந்தார்: ''அவன் பேசியதில் ஒரு வார்த்தையாவது உங்களுக்குப் புரிந்ததா? நம்மையெல்லாம் முட்டாள்களாக்க முயல்கிறானா, என்ன?'' கண்ணீர் வழிய அவனுடைய அம்மா, ''ஐயோ, கடவுளே! அவனுக்கு உடல்நிலை ரொம்பவும் மோசமாக உள்ளது போலிருக்கிறது; நாம் அவனை சித்திரவதைப் படுத்துகிறோம். க்ரீட்! க்ரீட்!'' என்று கூப்பிட்டாள். ''என்ன அம்மா?'' என்று மறுபக்கத்திலிருந்து அவனுடைய

தங்கை கேட்டாள். க்ரகரின் அறை ஊடாக அவர்கள் இருவரும் பேசிக்கொண்டார்கள். "நீ இந்த நிமிடமே போய் டாக்டரை அழைத்து வா, க்ரகருக்கு உடல்நிலை சரியில்லை. சீக்கிரம் ஓடு. அவன் எப்படிப் பேசினான் என்பதைக் கேட்டாயா?" அம்மாவின் கீச்சுக்குரல் கத்தலைவிட சற்று அடங்கிய குரலில் தலைமை எழுத்தர், "அது மனிதக்குரலே இல்லை," என்று சொன்னார். சமையலறையை நோக்கி, "அன்னா, அன்னா" என்று அவனுடைய அப்பா கைதட்டி கூப்பிட்டு, "பூட்டு ரிப்பேர்க்காரன் ஒருவனை உடனே கூட்டிக்கொண்டு வா," என்றார். இரண்டு பெண்களும் குட்டைப்பாவாடைகள் சரசரக்கக் கூடத்தின் வழியாக ஓடி முன்கதவை வேகமாகத் திறந்தார்கள். அவனுடைய தங்கை எப்படி அவ்வளவு விரைவாக உடுத்திக்கொண்டாள்? முன்கதவு மீண்டும் மூடப்படும் சத்தமே கேட்கவில்லை. பெரிய துயர சம்பவம் ஏதாவது நடந்த வீடுகளில் செய்வது போல அவர்கள் முன்கதவைத் திறந்து போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் போலிருக்கிறது.

ஆனால், க்ரகர் இப்போது முன்னைவிட சாந்தமாக இருந்தான், அவன் உச்சரித்த வார்த்தைகள் மற்றவர்களுக்குப்புரியாமல் போய்விட்டன. ஆனால் அவனுக்கு அவை முன்னெப்போதையும்விட தெளிவாக இருப்பதாகத் தோன்றியது. ஒருவேளை, அவற்றின் ஒலிக்கு அவனுடைய காதுகள் பழக்கப்பட்டுப் போயிருக்கலாம். எது எப்படியோ, அவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டது என்பது அங்குள்ளவர்களுக்குத் தெரிந்துவிட்டது. அவனுக்கு உதவ அவர்கள் தயாராக இருந்தார்கள். அவனுக்கு உதவுவதற்காக சரியான திசையில் எடுக்கப்பட்டிருக்கும் முதல்கட்ட நடவடிக்கைகள் அவனுக்கு ஆறுதல் அளித்தன. மனித வளையத்திற்குள் மீண்டும் நுழைந்துவிட்டதுபோல உணர்ந்தான். டாக்டரிடமிருந்தும் பூட்டு ரிப்பேர்க் காரனிடமிருந்தும் — உண்மையில் இவர்கள் இருவரையும் நுட்பமாக அவன் பிரித்துப் பார்க்கவில்லை — தனக்கு மிகப்பெரிய உதவி கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அவனுக்குத் தோன்றின. நிச்சயம் உடனடியாக நிகழப்போகும் ஒரு முக்கிய உரையாடலுக்காகத் தன்னுடைய குரலைத் தெளிவாக்கிக்கொள்ள மிகச் சிரமப்பட்டு சத்தமில்லாமல் லேசாக ஒருமுறை இருமிக்கொண்டான். ஏனென்றால், இந்த இருமல்கூட மனித இருமலாக ஒலிக்குமா என்பதை அவனால் தீர்மானிக்க முடியாமலிருந்தது. இதற்கிடையில்

அடுத்த அறையில் பூரண அமைதி நிலவியது. ஒருவேளை அவனுடைய பெற்றோர் தலைமை எழுத்தருடன் மேஜை முன் உட்கார்ந்து முணுமுணுத்த குரலில் பேசிக்கொண்டிருக்கலாம்; இல்லையென்றால், அவர்கள் எல்லாரும் கதவின்மீது சாய்ந்துகொண்டு தன் அறையில் நடப்பதைக் கேட்டுக் கொண்டிருக்கலாம்.

கதவை நோக்கி நாற்காலியை க்ரகர் மெல்ல நகர்த்தினான். பிறகு நாற்காலியை விட்டுவிட்டு கதவை ஆதாரமாகப் பற்றிக் கொண்டு அதன் மீது சாய்ந்து கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டான். அவனுடைய சிறிய கால்களின் பாதங்கள் பசைபோல ஒட்டிக்கொள்ளும் தன்மையுடனிருந்தன. பிறகு தன் வாயைக்கொண்டு பூட்டிலிருந்த சாவியைத் திருப்ப ஆரம்பித்தான். தனக்குப் பல் என்பதே இல்லை என்பதை அவன் அப்போதுதான் வருத்தத்துடன் உணர்ந்தான். எதைக் கொண்டு சாவியைப் பற்றுவது? ஆனால் நல்லகாலமாக அவனுக்குத் தாடைகள் வலிமையாக இருந்தன. அவற்றின் உதவிகொண்டு சாவியைத் திருப்பினான். அப்படிச் செய்வதால் சந்தேகமே யில்லாமல் தாடைகளை எங்கேயோ சேதப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை அவன் பொருட்படுத்தவில்லை. அதன் காரணமாக அவன் வாயிலிருந்து ஒரு பழுப்புநிற திரவம் வெளிப்பட்டு சாவியை நனைத்துத் தரையில் சொட்டியது. கதவின் அருகிலிருந்து தலைமை எழுத்தர், ‘‘அதைக் கவனியுங்கள், அவன் சாவியைத் திருப்பிக் கொண்டிருக்கிறான்,’’ என்றார். அவர் சொன்னது க்ரகருக்கு ஒரு பெரிய ஊக்கத்தைத் தந்தது; ஆனால் அவர்கள் எல்லாரும், அப்பாவையும் அம்மாவையும் உள்ளிட்டு, அவனை ஊக்கப்படுத்தும் வகையில் ‘‘க்ரகர், தொடர்ந்து முயற்சி செய், சாவியைப் பற்றிக்கொள்,’’ என்று உரக்கச் சொல்லியிருக்க வேண்டும். அவர்கள் எல்லாரும் அவனுடைய முயற்சியைத் தீவிரமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் தன்னுடைய முழு சக்தியையும் ஒன்றுதிரட்டித் தன் தாடைகளால் சாவியை வெறியுடன் கவ்வினான். சாவி திரும்புவதற்கு ஏற்பத் தன் பளு முழுவதையும் கொண்டு தன் உடலையும் சுழற்றி, சாவியைப் பூட்டின் உள்ளே தள்ளியோ தேவைப்பட்டால் அதை மீண்டும் கீழே இழுத்தோ முயற்சி செய்தான். கடைசியாக திறந்துகொள்ள ஆரம்பித்த பூட்டின் ‘க்ளிக்’ சத்தம் க்ரகரை வெளிப்படையாகச்

சுறுசுறுப்படைய வைத்தது. முயற்சி வெற்றிபெற்றதால் உண்டான பெருமூச்சுடன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்: “பூட்டு ரிப்பேர்க்காரன் எனக்குத் தேவைப்படவில்லை.” பிறகு கதவைத் திறப்பதற்காகத் தன் தலையைக் கைப்பிடியின் மீது சாய்த்தான்.

கதவைத் தன்னை நோக்கியே உள்பக்கம் இழுத்துத் திறக்கவேண்டியிருந்ததால், கதவின் ஒரு பகுதி நன்றாகத் திறக்கப்பட்ட பிறகும் அவனை யாராலும் பார்க்க முடியவில்லை. இரட்டைக் கதவில், தனக்கு அருகிலிருந்த பாதிக்கதவைச் சுற்றி மெல்ல நகரவேண்டியிருந்தது. இதை அவன் மிகுந்த கவனத்துடன் செய்தான். இல்லையென்றால் வாசற்படி மீது செங்குத்துக் கோணத்தில் மல்லாக்க விழவேண்டியிருக்கும். வேறு எதையும் கவனித்துப் பார்க்க அவகாசமின்றி இந்தச் சிக்கலான திட்டத்தை அவன் செயல்படுத்திக் கொண்டிருந்தான். அப்போது தலைமை எழுத்தர் ‘ஆ’ என்று புயல் வீச்சைப் போல அலறியதைக் கேட்டான். கதவிற்கு மிக அருகில் நின்றுகொண்டிருந்த அவர் திறந்த வாயை ஒரு கையால் அழுத்தி மூடிக்கொண்டு கண்ணுக்குத் தெரியாத நிலையான ஒரு அழுத்தத்தால் உந்தித் தள்ளப்படுபவர்போல மெதுவாகப் பின்னால் நகரத் தொடங்கியதைப் பார்த்தான். அவனுடைய அம்மா — தலைமை எழுத்தர் அங்கிருந்தும் கூட, வாராமலும், நாலாபக்கமும் பரட்டையாக நீட்டிக்கொண்டும் இருந்த தலைமுடியுடன் அவள் இருந்தாள் — முதலில் கைகளைப் பிணைத்துக்கொண்டு அவனுடைய அப்பாவைப் பார்த்தாள்; பிறகு, க்ரகரை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தவள் தரைமீது தன் குட்டைப் பாவாடை விரிய விழுந்தாள்; அவளுடைய தலை அவளுடைய மார்பின் மீது புதைந்திருந்தது. க்ரகரைத் தாக்கி அவனை அவனுடைய அறைக்குள் தள்ள எண்ணியவர் போன்ற சீற்றம் முகத்தில் பரவியிருக்க அவனுடைய அப்பா தன் கைமுட்டியைக் குவித்தார். பிறகு கூடத்தைச் சுற்றி ஒரு பதற்ற மான பார்வையைச் செலுத்திவிட்டு, கண்களை மூடிக்கொண்டு தன் விரிந்த மார்பு பொங்கியெழ ஓங்கரித்து அழுதார்.

க்ரகர் கூடத்துக்குப் போகாமல் இறுக்க மூடியிருந்த பாதிக்கதவின் மீது சாய்ந்துகொண்டு தன் உடம்பின் ஒரு பாதி மட்டும் வெளியில் தெரியும்படி நின்றுகொண்டான். அவ னுடைய தலை ஒரு பக்கமாகச் சாய்ந்திருந்த

நிலையில் எல்லாரையும் பார்த்தான். இதற்கிடையில் ஒளி பரவிக் கூடியது; தெருவின் அடுத்த பக்கத்தில் முடிவில்லாமல் நீண்டிருந்த சம்பல்நிற மருத்துவமனை தெளிவாகத் தெரிந்தது; மருத்துவமனையின் சுவரில் சீரான இடைவெளிவிட்டு ஜன்னல்கள் வரிசையாக இருந்தன. மழை இன்னும் பெய்துகொண்டிருந்தது; தனித்தனியாகவும் வீரியமாகவும் பெய்த துளிகளாக அது இருந்தது. உணவு மேஜையில் காலை உணவு பல பாத்திரங்களில் பரப்பப்பட்டிருந்தது. க்ரகரின் அப்பாவுக்குக் காலை உணவு மிகவும் முக்கியமானது; பலவித செய்தித்தாள்களைப் படித்தபடி நீண்டநேரம் சாப்பிட்டுக் கொண்டிருப்பார். க்ரகருக்கு நேர் எதிராக இருந்த சுவரில் அவனுடைய அப்பா லெஃப்டினன்ட்டுக்குரிய ராணுவ உடையில் இருந்த புகைப்படம் மாட்டப்பட்டிருந்தது. இடைவாளின் மீது கையும் முகத்தில் ஓர் அநாயாச புன்முறுவலும் இருக்க, அவருடைய சீருடையும் ராணுவ மிடுக்கும் பார்ப்பவர் மனத்தில் மரியாதையை ஏற்படுத்தும். கூடத்துக்குப் போகும் கதவும், வீட்டின் முன்கதவும் திறந்தே இருந்தன; அவற்றுக்கு அப்பால் கீழே இறங்கும் படிக்கட்டும் அதன் இடைநிலையும் தெரிந்தன.

தான் ஒருவன் மட்டுமே நிலைதடுமாறாமல் இருப்பதை நன்றாக அறிந்த க்ரகர், ‘‘சரி, நான் உடை அணிந்துகொண்டு, மாதிரிகளை அடுக்கிக்கொண்டு கிளம்பப் போகிறேன். என்னை அனுமதிப்பீர்களா? தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள். நான் பிடிவாதம் பிடிக்கவில்லை. வேலைக்குப் போக விரும்புகிறேன். ஊர் ஊராகச் சுற்றுவது கடினமான வாழ்க்கைதான். ஆனால் அதில்லாமல் என்னால் வாழமுடியாது. எங்கே போகிறீர்கள்? அலுவலகத்துக்கா? இங்கு நடந்ததை உள்ளபடியே சொல்வீர்களா? ஒருவனுக்குத் தற்காலிகமாக வேலை செய்ய இயலாமல் போகலாம். ஆனால் அதுதான், அவனுடைய பழைய பணிகளை நினைவுகூர்வதற்கும், உடல்நிலை சீரானபிறகு பழைய உத்வேகத்துடனும் ஆர்வத்துடனும் நிச்சயம் மீண்டும் வேலை செய்வான் என்பதை நம்புவதற்குமான தருணம். முதலாளிக்கு விசுவாசமாக வேலைசெய்ய நான் கடமைப்பட்டவன். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். மேலும், என் பெற்றோரையும் தங்கையையும் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் எனக்கிருக்கிறது. நான் பெரிய இடர்ப்பாடுகளில் சிக்கியுள்ளேன். ஆனால் அவற்றிலிருந்து விரைவில் மீண்டு விடுவேன். என்னுடைய துன்பத்தை

அதிகப்படுத்திவிடாதீர்கள். எனக்காக நம் நிறுவனத்தில் வாதாடுங்கள். ஊர் சுற்றும் வியாபாரப் பிரதிநிதிகளுக்கு அங்கு மதிப்பில்லை என்பது எனக்குத் தெரியும். அவர்கள் பை பையாகப் பணம் சம்பாதிக்க முடியும் என்றும் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்றும் எல்லாரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தப்பான அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை. ஆனால் நீங்கள், நம் நிறுவனத்திலுள்ள மற்றெல்லாரையும்விட, முதலாளியையும் விடக்கூட, நடப்புகளைப் பற்றி பூரணமான, சமச்சீரான பார்வை உடையவர். நம் முதலாளியோ, தொழிலாளிகள் விஷயத்தில் தன்னுடைய மதிப்பீட்டை அவர்களுக்கெதிராகப் பயன்படுத்தி விடுகிறார். அநேகமாக ஒரு வருடம் முழுவதும் வெளியிலேயே சுற்றிக் கொண்டிருக்கும் விற்பனைப் பிரதிநிதி மிக எளிதாக கிசுகிசுக்களுக்கும் துரதிர்ஷ்டத்திற்கும் அடிப்படையில்லாத புகார்களுக்கும் பலியாகிவிடுகிறான். அவற்றைப் பற்றி அவனுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. பயணங்களினால் முற்றிலும் சோர்வடைந்து திரும்பி வந்தபிறகுதான் அவற்றின் தீயவிளைவுகளால் நேரிடையாகத் துன்பப்படுகிறான். தன் துன்பத்தின் மூலக் காரணங்களை தெரிந்துகொள்ள அவனால் முடிவதுமில்லை. சார், என் நிலையைப் பற்றி ஓரளவாவது சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதைக் காட்ட ஒரு வார்த்தையாவது என்னிடம் சொல்லாமல் இங்கிருந்து போய்விடாதீர்கள்!” என்றான்.

ஆனால் க்ரகர் பேச ஆரம்பித்தவுடனேயே தலைமை எழுத்தர் பின்னால் ஒதுங்கிப்போய் வெட்டியிழுத்துக்கொண்ட தோளுடனும் பிரிந்த உதடுகளுடனும் அவனையே திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். மேலும் க்ரகர் பேசிக்கொண்டிருந்தபோது அவர் ஒரே இடத்தில் நிற்காமலும் அதே சமயம் அவன் மீதிருந்த தன்னுடைய கண்களை அகற்றாமலும் ஒவ்வொரு அங்குலமாக கதவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார். அறையை விட்டு வெளியேறுமாறு இட்ட ஏதோ ஒரு ரகசியக் கட்டளைக்குக் கீழ்ப்படிபவர் போல அவர் தோன்றினார். அவர் இப்போது கூடத்திற்குப் போய்விட்டார். முன்பு தான் இருந்த அறையிலிருந்து அவர் எடுத்து வைத்த கடைசி அடியின் அவசரம், தீயை மிதித்துவிட்டார் போலிருக்கிறது என்று பார்ப்பவரை நினைக்கவைத்தது. கூடத்திற்குள் நுழைந்தபிறகு அவர் தன்னுடைய வலதுகையை

மாடிப்படிக்கட்டை நோக்கி நீட்டியபடியே நகர்ந்து கொண்டிருந்தார். அங்கு ஏதோ ஓர் அமானுஷ்ய சக்தி அவரைக் காப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்த மாதிரி அது தோன்றியது.

நிறுவனத்தில் தன்னுடைய நிலை ஆபத்திற்குள்ளாகக் கூடாது என்றால் இந்த மனநிலையிலேயே தலைமை எழுத்தரை அலுவலகத்திற்குப் போய்விட எந்த வகையிலும் அனுமதிக்கக்கூடாது என்பது க்ரகருக்குப் புரிந்தது. அவனுடைய பெற்றோருக்கு இது அவ்வளவாகப் புரியவில்லை. க்ரகர் அந்த நிறுவனத்திலேயே வாழ்நாள் முழுவதும் பணிபுரியப் போகிறான் என்ற நம்பிக்கை அவர்களுக்குக் காலப்போக்கில் ஏற்பட்டிருந்தது. மேலும், அவர்களுக்கு ஏற்பட்டிருந்த அப்போதைய துன்பங்கள் எதிர்காலம் பற்றிய சிந்தனையைப் போக்கியிருந்தன. ஆனாலும் க்ரகருக்கு இந்த சிந்தனை இருந்தது. தலைமை எழுத்தரை இருக்க வைத்து சாந்தப்படுத்தி, கடைசியில் தங்கள் வழிக்குக் கொண்டுவர வேண்டும். இதில்தான் அவனுடையதும் அவன் குடும்பத்துடையதுமான எதிர்காலம் அடங்கியிருக்கிறது. தன் தங்கை அங்கிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தான். அவள் புத்திசாலி. க்ரகர் அமைதியாகப் படுத்துக்கொண்டிருக்கும்போதே அவள் அழ ஆரம்பித்துவிட்டாள். பெண்களிடம் வசப்படும் மனம் கொண்ட தலைமை எழுத்தரை நிச்சயம் அவள் இந்தப் பிரச்சினையில் வழி நடத்தியிருப்பாள். வீட்டின் கதவை மூடிவிட்டு அவரிடம் நிதானமாகப் பேசி அவருடைய திகிலைப் போக்கியிருப்பாள். ஆனால் அவள் அங்கு இல்லையென்பதால் அவனாகவேதான் இந்தச் சிக்கலைக் கையாளவேண்டும். இயங்குவதற்குத் தனக்கு எந்த அளவுக்கு சக்தி இருக்கிறது என்பதையும் தான் பேசும் வார்த்தைகள் அங்கிருப்பவர்களுக்கு மீண்டும் எந்த விதத்திலும் புரியப்போவதில்லை என்பதையும் மறந்தவனாக திறந்திருந்த ஒரு பக்கக் கதவின் வழியாகத் தன்னை அழுத்தி வெளியேறி தலைமை எழுத்தரை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவரோ மாடிப் படிக்கட்டு ஆரம்பிக்கும் இடத்திலிருந்த கைப்பிடியைத் தன்னுடைய இரண்டு கைகளாலும் ஒருவித அசட்டுத்தனம் கலந்த பயத்துடன் பற்றியிருந்தார். க்ரகர் தொடர்ந்து நடக்கமுடியாமல் ஆதரவு தேடி, அது முடியாமல் தன்னுடைய எண்ணற்ற கால்கள் கீழே படிய ஒரு சிறிய கதறலுடன் விழுந்தான். விழுந்தவுடன், இந்தக்

காலையில் முதன்முதலாக ஓர் உடல்ரீதியான சௌகரியத்தை அனுபவித்தான். அவனுடைய கால்களை நிலத்தில் உறுதியாக ஊன்ற முடிந்தது. கால்கள் தனக்குக் கீழ்ப்படிவது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவன் விரும்பிய திசைக்கு அவனை ஏந்திச்செல்ல அவை தயாராக இருந்தன. தன்னுடைய எல்லாத் துன்பங்களுக்கும் விடிவு வந்துவிட்டது என்று அவன் நம்பத் தொடங்கினான். நகர்ந்து செல்வதற்கான தன்னுடைய ஆசையை அடக்கிக்கொண்டு இருந்த அவனுக்குப் பக்கத்திலேயே, உண்மையில் அவனுக்கு முன்னாலேயே, துவண்டு படுத்திருந்த அவனுடைய அம்மா வேகமாக எழுந்து கைகளையும், விரல்களையும் விரித்துக்கொண்டு, ''உதவி உதவி... கடவுளே!'' என்று கத்தினாள். க்ரகரைச் சரியாகப் பார்க்க விரும்பியவள் போலத் தன் தலையை கீழ்நோக்கி வளைத்திருந்தாலும் அவள் தன்னுணர்வின்றி அப்படியே பின்னோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். பின்னாலிருந்த சிறிய மேஜையில் மோதிக் கொண்டு ஞாபகமறதியாக அவசரத்தில் அதில் உட்கார்ந்துவிட்டாள். மேஜையிலிருந்த காபிக்குவளை கவிழ்ந்து தரைவிரிப்பில் வெள்ளமாக ஊற்றி யதைக் கூட அவள் கவனிக்கவில்லை.

மெல்லிய குரலில், ''அம்மா அம்மா'' என்று க்ரகர் கூப்பிட்டு அவளை அண்ணாந்து பார்த்தான். ஒருசில நொடிகள் தலைமை எழுத்தர் தன்னை மறந்திருந்தார்; அதே சமயம்கொட்டியிருந்த காபியைப் பார்த்து அவருடைய தாடைகள் ஒன்றோடொன்று மோதிப் பிரிந்துகொண்டிருந்ததை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதைப் பார்த்த க்ரகரின் அம்மா மீண்டும் கத்தினாள். மேஜைப் பக்கத்திலிருந்து ஓடி க்ரகருடைய அப்பாவின் கைகளில் விழுந்தாள். அவரும் வேகமாக வந்து அவளைத் தாங்கிக்கொண்டார். பெற்றோருக்காக ஒதுக்க க்ரகருக்கு இப்போது நேரமில்லை. தலைமை எழுத்தர் ஏற்கனவே மாடிப்படிக்குப் போய்விட்டார். படிக்கட்டின் கைப்பிடியில் தன்னுடைய தாடையை வைத்துக்கொண்டு கடைசியாக ஒருமுறை திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தார். அவரைத் தாண்டிப்போய் வழிமறிக்கும் எண்ணத்துடன் க்ரகர் தாவினான்; அவனுடைய நோக்கத்தை அவர் கண்டுபிடித்திருக்க வேண்டும்; ஏனென்றால் அவர் பல படிகளை ஒரே தாவலில் கடந்து மறைந்து போனார். ''ஊ...''வென்று அவர் இன்னும்

கத்திக்கொண்டிருந்தது படிக்கட்டு முழுவதும் எதிரொலித்தது. இவ்வளவு நேரம் மற்றவர்களைப்போல அவ்வளவாகப் பதற்றப்படாத க்ரகரின் அப்பாவை, தலைமை எழுத்தர் ஓடிவிட்டது துரதிருஷ்டவசமாக நிலைகுலையச் செய்துவிட்டது. தலைமை எழுத்தருக்குப் பின்னால் ஓடவோ க்ரகரை வழி மறிக்கவோ தோன்றாமல், தலைமை எழுத்தர் மறந்துவிட்டுப் போய்விட்ட கைத்தடி, தொப்பி, கோட் ஆகியவற்றை வலது கையில் பிடித்துக் கொண்டு, மேஜையிலிருந்த செய்தித்தாளை சடக்கென்று இடதுகையில் எடுத்துக்கொண்டு, கால்களைத் தரையில் ஓங்கி மிதித்து கைத்தடியையும் செய்தித்தாளையும் சுழற்றி வீசியும் க்ரகரை அவனுடைய அறைக்குள் துரத்திக்கொண்டிருந்தார். க்ரகர் கெஞ்சுவது பயனற்றுப் போனது; உண்மையில் அவனுடைய கெஞ்சல்கள் புரிந்துகொள்ளப்படவேயில்லை. அவன் எவ்வளவுதான் பணிவுடன் தன் தலையைத் தாழ்த்திக் கெஞ்சினாலும் அதைவிட அதிக சத்தத்துடன் அவர் காலால் தரையை ஓங்கி மிதித்தார். அப்பாவுக்குப் பின்னாலிருந்த அம்மா ஒரு ஜன்னலை வேகமாகத் திறந்து, குளிரையும் பொருட் படுத்தாமல் கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு வெளியே சாய்ந்தபடி இருந்தாள். தெருவிலிருந்து ஒரு பலமான காற்று படிக்கட்டுகள் வழியே உள்ளே வீசியது; ஜன்னலின் திரைச் சீலைகள் உட்பக்கமாகப் பறந்தன; மேஜையிலிருந்த செய்தித் தாள் படபடத்து பல பக்கங்கள் வெளியே தெரிய தரையில் சிதறியது. ஈவிரக்கமின்றி க்ரகரின் அப்பா, ஒரு காட்டு மிராண்டியைப் போல 'ஷ்ஷூ' என்று கத்திக்கொண்டு அவனை உள்ளே துரத்தினார். பின்புறமாக நடப்பதற்குப் பழக்கப்படாத க்ரகர் மிகவும் மெதுவாகவே நகரவேண்டியிருந்தது. பின்புறம் திரும்ப வாய்ப்புக் கிடைத்தால் அவனுடைய அறையை வேகமாக அடைந்துவிட முடியும். அப்படித் திரும்ப ஆகும் காலதாமதம் அவனுடைய அப்பாவை எரிச்சலுறச் செய்யுமே என்றும் பயந்தான். மேலும் அவனுடைய அப்பாவின் கையிலிருக்கும் தடி அவனுடைய முதுகிலோ அல்லது தலையிலோ மரண அடியை எந்த நேரத்திலும் கொடுத்துவிடலாம். பின்புறமாக நகரும்போது தான் போகவேண்டிய திசையைக் கணித்துப் போவது மிகவும் சிரமமாக இருந்ததால் உடலையே திருப்பி நகர்வதைத் தவிர வேறுவழி அவனுக்கு இல்லை. எனவே தன் அப்பாவை ஓரக்கண்ணால் கவனித்தபடியே முடிந்த அளவுக்கு வேகமாகத்

திரும்ப ஆரம்பித்தான். ஆனால் உண்மையில் அது மெதுவாகத் தான் நிகழ்ந்தது. அவனுடைய நல்ல எண்ணத்தை அவனுடைய அப்பா ஒருவேளை புரிந்துகொண்டிருக்கக்கூடும். ஏனென்றால் அவனுடைய நகர்தலுக்கு அவர் இடைஞ்சல் ஏதும் கொடுக்க வில்லை. ஆனால் தூரமாக நின்றுகொண்டு அவ்வப்போது தடியின் நுனியால் அவனுடைய உடலியக்கத்திற்கு உதவி செய்தார். 'உஷ்', 'உஷ்' என்று அவர் போடும் சகிக்கமுடியாத சத்தத்தை நிறுத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அந்த சத்தம் க்ரகரை நிலைகுலையச் செய்தது. அநேகமாக அவன் முழுக்கத் திரும்பிவிட்டபோது அந்த சத்தம் அவனுடைய கவனத்தை சிதைத்ததால் கொஞ்சம் தவறாகக்கூட திரும்பி விட்டான். அதிர்ஷ்டவசமாகக் கடைசியில் அவனுடைய தலை கதவுக்கு நேராக இருந்தபோது, கதவின் வழியாக நுழைய முடியாத அளவுக்கு அவனுடைய உடல் அகலமாக இருந்தது போலத் தோன்றியது. மூடியிருந்த மறுபாதிக் கதவைத் திறந்து க்ரகரை எளிதாக உள்ளே அனுப்பிவிட முடியும் என்பது அவனுடைய அப்பாவுக்கு அவர் அப்போதிருந்த நிலையில் தோன்றவில்லை. க்ரகரை எவ்வளவு விரைவாக உள்ளே அனுப்பமுடியும் என்பதிலேயே அவர் குறியாக இருந்தார். தரையிலிருந்து எழுந்து நின்ற வாகில் பாதி மூடிய கதவின் வழியே நுழைவதற்கு க்ரகருக்குத் தேவயாக இருந்த எந்த முயற்சிகளையும் அனுமதிக்க அவர் தயாராக இல்லை. எந்தத் தடையும் க்ரகருக்கு இல்லாதது போல முன்னைவிட அதிக சத்தத்துடன் அவர் அவனைத் துரத்திக்கொண்டிருந்தார். அவனுக்குப் பின்னாலிருந்து வந்த சத்தம் ஒரு தனிப்பட்ட தந்தையின் சத்தமாக க்ரகருக்கு ஒலிக்கவில்லை. என்ன நடந்தாலும் சரியென்று கதவின் வழியாக க்ரகர் தன்னைத் திணித்துக் கொண்டான். அவனுடைய உடலின் ஒரு பகுதி உயர்ந்தது; கதவின் வழியே அவன் உடல் ஒரு கோணத்தில் சாய்ந்தது; அவனுடைய இடுப்புப்பகுதி புண்ணானது. அருவருப்பான கறைகள் வெள்ளைக் கதவின்மீது ஏற்பட்டன. கதவின் வழியே இறுகப் பொருந்திக்கொண்டுவிட்ட க்ரகரால் நகரவே முடியவில்லை. அவனுடைய ஒருபக்கக் கால்கள் காற்றில் நடுங்கிப் படபடத்தன; இன்னொரு பக்கக்கால்கள் தரையோடு அழுந்தி நசுங்கியிருந்தன. பின்புறமிருந்து அவனுடைய அப்பா மிகவும் வலுவுடன் அவனை உள்ளே தள்ளினார். அறைக்குள் தள்ளிப்போய் அவன் விழுந்தான்.

உண்மையில் அது அவனுக்கு ஒரு விடுதலை. அவன் உடலிலிருந்து ரத்தம் பெருக்கெடுத்தது. தடியினால் கதவு அறைந்து சாத்தப்பட்டது. பின்பு எங்கும் அமைதி கவிந்தது.

2

சூரியன் மறையும்வரை ஆழ்ந்த தூக்கத்திலிருந்து க்ரகரால் விழிக்க முடியவில்லை. தூக்கம் என்பதைவிட அது ஒரு மயக்க நிலையாகத்தான் இருந்தது. போதுமான ஓய்வும் நல்ல தூக்கமும் கிடைத்ததுபோல அவன் உணர்ந்தால் அவனாகவே இன்னும் சற்று நேரத்தில விழித்திருப்பான். ஆனால், யாரோ வேகமாக நடந்து கூடத்துக்குப் போகும் பாதையில் இருந்த கதவை ஜாக்கிரதையாக மூடும் சத்தம் அவனை எழுப்பிவிட்டது.தெருவிலிருந்து மின்சார விளக்குகள் அறையின் கூரைமீதும் மேஜை நாற்காலிகளின் மீதும் அங்குமிங்குமாக மங்கலான ஒளியைப் பாய்ச்சின. ஆனால், அவன் இருந்த தரையில் இருட்டாக இருந்தது. மெதுவாகவும் தடுமாற்றத்துடனும் தன்னுடைய உணரிழைகள் மூலம் — அவற்றின் உபயோகம் இப்போதுதான் முதன்முறையாக அவனுக்குத் தெரிந்தது – வழி தெரிந்துகொண்டு, என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ள கதவை நோக்கித் தன்னை நகர்த்தினான். தன்னுடைய இடது பாகம் ஒரு தனியான, நீண்ட விறைப்பான தழும்பு மாதிரி இருப்பதாக அவன் உணர்ந்தான். உண்மையில் அவன் தன்னுடைய இரண்டு வரிசைக் கால்களை நொண்டித்தான் நகரமுடிந்தது. அன்று காலை நடந்த சம்பவங்களினால் பலத்த சேதமடைந்த ஒரு சிறிய கால் — ஒரு கால் மட்டும் சேதமானது. உண்மையில் அதிசயம்தான் — எந்தப் பயனும் இல்லாமல் அவனுக்குப் பின்னால் தொங்கிக்கொண்டு போனது.

கதவை அடையும் முன்பாகவே தான் எதனால் அங்கு ஈர்க்கப்பட்டோம் என்பதை அவன் கண்டுகொண்டான். உணவின் வாசம். அங்கு வெள்ளை ரொட்டித் துணுக்குகள் மிதக்கும் புதிய பால் நிரம்பிய கிண்ணம் ஒன்று இருந்தது. காலையிலிருந்ததை விடவும் இப்போது பசி அதிகரித்திருந்ததால் அந்த பாலைப் பார்த்ததும் சந்தோஷத்தால் அவன் சற்றேறக்குறைய சிரித்தான். கண்கள் அமிழத் தன் தலையைப் பாலுக்குள் விட்டான். ஆனால், ஏமாற்றத்தால் தலையைப் பின்னுக்கிழுத்துக்கொண்டான். நைந்துபோன அவனுடைய உடலின் இடதுபாகம் உணவருந்த இடைஞ்சலாக இருந்தது. நடுங்கும் தன் உடலின் ஒட்டுமொத்த ஒத்துழைப்புடன்தான் அவனால் அருந்த முடியும். மேலும் அவனுக்குப் பாலும் பிடிக்கவில்லை. ஆனால், முன்பு பால்தான் அவனுக்குப் பிடித்த பானம். அதனால்தான் அவனுடைய தங்கை

அதை அங்கு வைத்திருந்தாள். வெறுப்புடன் கிண்ணத்திலிருந்து விலகி அறையின் மையப்பகுதிக்கு தவழ்ந்துபோனான்.

கூடத்தில் கியாஸ் விளக்கு ஏற்றப்பட்டிருப்பதை கதவின் இடுக்கு வழியாக அவனால் பார்க்க முடிந்தது. வழக்கமாக இந்தநேரத்தில் அவனுடைய அப்பா பிற்பகல் செய்தித்தாளை அவனுடைய அம்மாவுக்கும் சில சமயங்களில் அவனுடைய தங்கைக்கும் உரக்க வாசித்துக்காட்டிக்கொண்டிருப்பார். ஆனால் இப்போது அங்கு எந்த சத்தமும் இல்லை. ஒருவேளை சமீபத்தில் இந்தப் பழக்கத்தை அவர் கைவிட்டிருக்கக்கூடும். அவர் வாசித்துக்காட்டுவது பற்றி அவனுடைய தங்கை நேர்ப்பேச்சிலும் கடிதங்களிலும் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறாள். வீட்டில் ஆட்கள் இருந்தும் எல்லாம் ஒரே அமைதியாக இருந்தது. 'என்ன அமைதியான வாழ்க்கையை நம் குடும்பம் நடத்தி வருகிறது' என்று க்ரகர் தனக்குள் சொல்லிக்கொண்டான். இருளை உற்றுப்பார்த்தவாறு அசைவின்றி அவன் உட்கார்ந்துகொண்டிருந்தபோது, அந்த அழகிய வீட்டில் பெற்றோருக்கும் தங்கைக்கும் இம்மாதிரியான நல்ல வாழ்க்கையைத் தன்னால் தரமுடிந்தது பற்றி எண்ணி அதிகமும் பெருமைப்பட்டுக்கொண்டான். இந்த அமைதியும் சௌகரியமும் திருப்தியும் விபரீதமாக முடிந்துபோனால் என்னாவது? இம்மாதிரியான எண்ணங்களிலிருந்து தன்னை மீட்டுக்கொள்வதற்காக அறையின் குறுக்கும் நெடுக்குமாக அவன் தவழ ஆரம்பித்தான்.

அந்த நீண்ட மாலை நேரத்தில் பக்கவாட்டுக் கதவுகளில் ஒன்று ஒருமுறை லேசாக திறக்கப்பட்டு மீண்டும் வேகமாக மூடப்பட்டது; சற்று நேரம் கழித்து அடுத்த பக்கக் கதவும் திறக்கப்பட்டு உடனே மூடப்பட்டது. யாரோ ஒருவர் உள்ளே வர விரும்பி பின்னர் அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டிருக்க வேண்டும். க்ரகர் உடனே கூடத்தின் அறைக்கதவுக்கு அருகில் தன்னை இருத்திக்கொண்டு உள்ளே வரத் தயங்கும் நபரை உள்ளே வரத்தூண்டத் தீர்மானித்தான்; அல்லது குறைந்தபட்சம் அப்படி வரத் தயங்குபவர் யார் என்று கண்டுபிடிக்கக் காத்திருந்தான். ஆனால் கதவு மீண்டும் திறக்கப்படவே இல்லை. அவனுடைய காத்திருத்தலும் வீணானது. அதிகாலையில் கதவு பூட்டப்பட்டிருந்தபோது அவர்கள் எல்லாரும் உள்ளே வர விரும்பினார்கள். இப்போது ஒரு கதவை அவன் திறந்திருந்தும் மற்றொரு கதவை பகலில்

அவர்கள் திறந்திருந்தும் யாரும் உள்ளே வரவில்லை. சாவிகள் கூட கதவுகளின் அடுத்த பக்கத்தில்தான் இருந்தன.

இரவு நீண்டநேரம் கழித்தே கூடத்தில் விளக்கு அணைந்தது. அப்பா, அம்மா, தங்கை மூவரும் மிக மெல்லிய காலடி ஓசையுடன் அங்கிருந்து ரகசியமாக வெளியேறியதைக் கேட்க முடிந்த க்ரகர், விளக்கை அணைத்தது வரை அவர்கள் விழித்துக்கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதை எளிதாகத் தெரிந்துகொண்டான். நிச்சயமாகக் காலைவரை யாரும் வந்து அவனை பார்க்கப்போவதில்லை. எனவே தன்னுடைய வாழ்க்கையை எப்படி புதிதாக சீரமைத்துக் கொள்ளவேண்டும் என்பதைப் பற்றி யோசிக்க நிறைய அவகாசம் இருந்தது. ஆனால், அந்தப் பெரிய, வெறுமையான அறையில் அவன் இப்படித் தரையில் மல்லாக்கப் படுத்துக்கொண்டிருந்தது புரிந்து கொள்ளமுடியாத ஒரு பயத்தை அவனுக்கு உண்டாக்கியது. ஏனென்றால் கடந்த ஐந்து ஆண்டுகளாக அதுதான் அவனுடைய அறையாக இருந்தது. பாதி உணர்வற்ற செயலாகி, லேசான அவமான உணர்வு மேலிட விரைந்துசென்று சோ.ஃபாவுக்கு அடியில் நுழைந்துகொண்டான். முதுகில் கொஞ்சம் பிடிப்பு இருந்தாலும் தலையை உயர்த்த முடியாமலிருந்தாலும் அவனுக்கு ஒரு சௌகரிய உணர்வு தோன்றியது. சோ.ஃபாவுக்கு அடியில் முழுமையாக நுழைத்துக்கொள்ள முடியாத அளவுக்குத் தன் உடல் அகலமாக இருந்ததே அப்போதைய அவனுடைய ஒரே வருத்தம்.

அந்த இரவின் ஒரு பகுதியை பசியால் அடிக்கடி தடைப்பட்ட தூக்க மயக்கத்தாலும் இன்னொரு பகுதியைக் கவலையாலும் தெளிவற்ற நம்பிக்கைகளை உருவகித்தும் கழித்தான். ஆனால் இவையெல்லாம் அவனை ஒரே முடிவுக்குத் தான் இட்டுச் சென்றன. அதாவது, இப்போதைக்கு அமைதியாக இருந்து, பொறுமையையும் அதிகபட்ச கவனத்தையும் கைக்கொண்டு குடும்பத்துக்குத் தன்னுடைய இப்போதைய நிலை உண்டாக்கப்போகும் அசௌகர்யத்தை அவர்கள் தாங்கிக்கொள்ள உதவ வேண்டும் என்பதே அந்த முடிவு.

பொழுது புலராத அதிகாலையில் தன்னுடைய தீர்மானங் களின் வலிமையைச் சோதித்துப் பார்ப்பதற்கு க்ரகருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. முழுமையாக உடுத்திக்கொண்டிருந்த அவனுடைய தங்கை கூடத்திலிருந்து அவனுடைய

அறைக்கு வரும் கதவைத் திறந்து உள்ளே உற்றுப்பார்த்ததே அந்த சந்தர்ப்பம். அவளால் அவனை உடனே பார்த்துவிட முடியவில்லை; ஆனால் சில விநாடிகளுக்குப் பிறகு சோஃபாவுக்கு அடியிலிருந்த அவனைப் பார்த்தபோது — அவன் அங்கு எங்காவது இருந்துதான் தீரவேண்டும். அவனால் பறந்துபோயிருக்க முடியுமா என்ன? — அவள் அதிர்ச்சியடைந்து வேறு வழியின்றிக் கதவை மீண்டும் அறைந்து மூடிவிட்டாள். ஆனால் தன் செயலுக்கு வருந்துபவள்போல உடனே மீண்டும் கதவைத் திறந்து, ஒரு நோயாளியையோ அந்நியரையோ பார்க்கப்போவதுபோல நுனிக்காலில் மெதுவாக உள்ளே வந்தாள். சோஃபாவின் நுனிவரை தன்னுடைய தலையை முன்னுக்குத் தள்ளி க்ரகர் அவளைக் கவனித்தான். பசியிருந்தும் பிடிக்காததால் தான் குடிக்காமல் விட்டுவிட்ட பாலை அவள் கவனிப்பாளா? தனக்குப் பிடித்த வேறு ஏதாவது உணவை அவள் கொண்டு வருவாளா? சோஃபாவின் அடியிலிருந்து வேகமாக வெளியேறி அவளுடைய காலடியில் விழுந்து சாப்பிடுவதற்கு ஏதாவது தரும்படி கெஞ்சலாமா என்ற ஒரு வெறி உணர்வு இருந்தும், அவளாகவே அதைச் செய்யாவிட்டால் அவளுடைய கவனத்தை அதுகுறித்து ஈர்ப்பதைவிட தான் பட்டினியாக இருந்து விடுவதையே அவன் விரும்பினான். கிண்ணத்தைச் சுற்றி கொஞ்சம் சிந்தியிருந்ததைத் தவிர கிண்ணம் முழுக்க பால் அப்படியே இருந்ததை அவனுடைய தங்கை ஆச்சரியத்துடன் உடனே கண்டுகொண்டாள். வெறும் கைகளால் அல்லாமல் ஒரு துணியை வைத்து அந்தக் கிண்ணத்தைத் தூக்கி எடுத்துக்கொண்டு போய்விட்டாள். அதற்குப் பதிலாக அவள் என்ன எடுத்துக்கொண்டு வருவாள் என்பதை அறிந்துகொள்ள அவன் மிகவும் ஆவலாக இருந்தான். அது பற்றி பலவித யூகங்கள் செய்தான். அவளுடைய நல்ல மனத்தின் காரணமாக அவள் அடுத்து என்ன செய்தாள் என்பதை அவனால் நிச்சயமாக யூகித்திருக்க முடியாது. அவன் என்ன விரும்புவான் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக எல்லா உணவுவகைகளையும் ஒரு பழைய செய்தித்தாளில் பரப்பி அவள் கொண்டுவந்தாள். பாதி அழுகிப்போன பழைய காய்கறிகள், கெட்டியாகிப் போய்விட்ட சாஸுடன் கலந்த, நேற்றைய இரவு உணவில் மீந்துபோன எலும்புகள், கொஞ்சம் உலர்ந்த திராட்சைகள், வாதுமைப் பருப்புகள்; இரண்டு நாட்களுக்கு முன்பு க்ரகர் சாப்பிடவே முடியாது

என்று சொல்லியிருக்கக்கூடிய ஒரு பாலாடைக்கட்டி; காய்ந்துபோன ஒரு ரொட்டித்துண்டு, வெண்ணெய் தடவப்பட்ட ரொட்டித்துண்டு ஒன்று ஆகியவை செய்தித் தாளின் மீதிருந்தன. இவை அன்றிப் பழைய கிண்ணத்தை அருகில் வைத்து அதில் தண்ணீரை ஊற்றினாள். அந்தக் கிண்ணம் அவனுடைய உபயோகத்திற்கு மட்டும் என்று ஒதுக்கப்பட்டுவிட்டது வெளிப்படையாகத் தெரிந்தது. தன்னுடைய முன்னிலையில் க்ரகர் சாப்பிடமாட்டான் என்பதைப் புரிந்துகொண்டு அவள் சாதுரியமாக வெளியே போய்விட்டாள். சாவி திருகப்படும் சத்தம் அவனுக்குக் கேட்கும்படி கதவைப் பூட்டியதன் மூலம் அவன் சாவகாசமாகவும் பூரண சுதந்திரத்துடனும் சாப்பிடலாம் என்பதை அவனுக்கு உணர்த்தினாள். க்ரகரின் கால்கள் உணவை நோக்கி இரைச்சலோடு ஓடின. எவ்வித உடல் ஊனத்தையும் உணராததால் தன்னுடைய காயங்கள் முழுமையாக ஆறியிருக்க வேண்டும் என்று அவன் நம்பினான். இதுகுறித்து அவன் ஆச்சரியமடைந்தான். ஒரு மாதத்துக்கு முன்பு ஒரு விரலில் ஏற்பட்ட ஒரு சிறு கத்திக்காயம் நேற்றைக்கு முதல்நாள் வரை எப்படி வலித்தது என்பதையும் அவன் யோசித்துப்பார்த்தான். தான் இப்போது உணர்ச்சி குறைந்தவனாக மாறிவிட்டோமா என்று நினைத்தான். எல்லா உணவுவகைகளையும்விட அவனை அதிகம் ஈர்த்த பாலாடைக் கட்டியை வெறியோடு உறிஞ்சினான். திருப்தியால் உண்டான கண்ணீர்த்துளிகளோடு பாலாடைக்கட்டி, காய்கறிகள், சாஸ் என்று ஒன்றன்பின் ஒன்றாக ஆசையோடு கடித்து விழுங்கினான். புதிதாகச் சமைக்கப்பட்ட உணவின்மீது அவன் நாட்டம் கொள்ளவில்லை; அதனுடைய வாசத்தைக்கூட அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னால் சாப்பிட முடிந்த உணவுவகைகளைக் கொஞ்ச தூரம் இழுத்துக்கொண்டு போய் வைத்துக்கொண்டான். சாப்பிட்டு முடித்தபின் அப்படியே அதே இடத்தில் ஓய்வாகப் படுத்துக்கொண்டான். அப்போது அவனுடைய தங்கை சாவியைத் திருகிய சத்தத்தின் மூலம் அவன் பின்வாங்கி அவனுடைய இடத்துக்குப் போகவேண்டியதை உணர்த்தினாள். தூக்கக்கலக்கத்திலிருந்தாலும் அவனை அந்தச் சத்தம் எழுப்பிவிட்டதால் அவன் வேகமாக மீண்டும் சோ.ஃபாவின் கீழ் புகுந்துகொண்டான். நிறைய சாப்பிட்டதால் பெருத்து விட்ட உடலை அவனுடைய தங்கை அங்கிருந்த சற்றுநேரத்துக்குக்கூட சோ.ஃபாவின் கீழ் வைத்திருப்பதற்கு மிகவும்

சிரமப்பட்டான். சோஃபா அழுத்தியதால் மூச்சுவிடவும் சிரமமாக இருந்தது. மூச்சுவிடுவதில் ஏற்பட்ட சிரமமும் தலையிலிருந்து கண்கள் வெளியே வந்துவிடுவதைப் போலிருந்த அழுத்தமும் அவனை மிகவும் பாதித்தன. அவனுடைய அவஸ்தைகளை அறியாத அவனுடைய தங்கை செய்துகொண்டிருந்ததை அவன் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் சாப்பிட்டது போக மீதியிருந்தவற்றை மட்டுமல்லாமல் அவன் தொடாமலே விட்டுவிட்டதையும்கூட — வேறு யாருக்கும் அவை பயன்படாது என்பதுபோல — அவள் துடைப்பத்தால் பெருக்கிச்சேர்த்து அவசரமாக வாரி மரமூடியுடன் கூடிய ஒரு வாளியில் போட்டுத் தூக்கிக்கொண்டு போய்விட்டாள். அவள் வெளியே போகத் திரும்பியவுடன் க்ரகர் சோஃபாவை விட்டு வெளியே வந்து உடலை நன்றாக நீட்டி ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

அவனுடைய பெற்றோரும் வேலைக்காரப் பெண்ணும் தூங்கிக்கொண்டிருக்கும் அதிகாலையில் ஒருமுறையும் பிற்பகல் சாப்பாட்டுக்குப் பின்னர் அவனுடைய பெற்றோர் கொஞ்சநேரம் தூங்கும்போது — அப்போது வேலைக்காரப் பெண்ணை ஏதோ ஒரு வேலை கொடுத்து வெளியே அனுப்பிவிடுவாள் அவனுடைய தங்கை — ஒருமுறையும் என்று ஒரு நாளைக்கு இரண்டு முறை க்ரகருக்கு உணவு தந்தார்கள். அவனைப் பட்டினிபோட்டுவிட அவனுடைய பெற்றோர் விரும்பவில்லை. அவனுடைய உணவையும் அதை அவன் உண்ணும் முறையையும் பற்றி நேரடியாகப் பார்த்துத் தெரிந்துகொள்வதை அவர்களால் சகித்துக்கொள்ள முடியாது. கேட்டுத்தெரிந்து கொள்வதைவேண்டுமானால் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியலாம். மேலும் ஏற்கனவே அதிகத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் அவர்களுக்கு இம்மாதிரியான சில்லறைக் கவலைகளையும் தர அவனுடைய தங்கை விரும்பவில்லை.

அந்த முதல் காலையில் என்ன காரணம் சொல்லி டாக்டரையும் பூட்டு ரிப்பேர்க்காரனையும் திருப்பி அனுப்பினார்கள் என்பதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் பேசுவது மற்றவர்களுக்குப் புரியவில்லை என்பது உண்மையானாலும், அவனால் அவர்கள் பேசுவதைப் புரிந்துகொள்ள முடியும் என்பது எப்படி அவர்கள் யாருக்குமே, அவனுடைய தங்கைக்கும்கூட, தோன்றாமல் போயிற்று என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது. எனவே

அவனுடைய தங்கை அவனுடைய அறைக்குள் வரும்போதெல்லாம் அவ்வப்போது அவள் விடும் பெருமூச்சுகளையும் புனிதர்களை நோக்கி அவள் எப்போதாவது விடுக்கும் கோரிக்கைகளையும் கேட்பதோடு அவன் திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. சிலநாட்கள் கழித்து, புது சூழ்நிலைக்கு அவள் பழக்கப்பட்டுவிட்டபோது — நிச்சயமாக அவளால் முழுக்கவும் அதற்கு எப்போதும் பழக்கப் பட்டுவிட முடியாது — சில சமயங்களில் அவள் ஓரிரு வார்த்தைகள் பேசினாள். அவை அன்பு நிறைந்தவை அல்லது அதுபோன்றவைதான் என்று விளக்கமளித்துக் கொள்ளலாம். வைக்கப்பட்ட உணவை முழுவதுமாக க்ரகர் சாப்பிட்டு விட்டபோதெல்லாம், ‘இன்றைக்கு அவனுக்கு உணவு பிடித் திருந்தது போலிருக்கிறது’ என்பாள்; அவன் சாப்பிடாமல் விட்ட நாட்களில் — கொஞ்சம் கொஞ்சமாக இது அதிகரித்தது – அவள் வேதனையுடன் சொல்வாள் : ‘திரும்பவும் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டானே.’

க்ரகரால் நேரடியாக எந்த செய்தியையும் தெரிந்துகொள்ள முடியவில்லையே தவிர பக்கத்து அறைகளில் நடக்கும் உரையாடல்களை அவனால் கேட்க முடிந்தது. குரல்கள் காதில் விழ ஆரம்பித்தவுடன் சம்பந்தப்பட்ட அறையின் கதவருகே ஓடி தன் முழு உடலையும் அதனுடன் இறுகப் பொருத்திக்கொள்வான். முதல் கொஞ்ச நாட்களில் மறைமுகமாவாவது அவனைக் குறித்தே எல்லா உரையாடல்களும் நடந்தன. சாப்பாட்டு நேரத்தில் இரண்டு முழு நாட்கள் அடுத்து என்னசெய்ய வேண்டும் என்பது பற்றி குடும்ப ஆலோசனைகள் நடந்தன. இரண்டு உணவுக்கு இடைப்பட்ட நேரத்திலும் அதே விஷயமே விவாதிக்கப்பட்டது. ஏனென்றால் எல்லா நேரத்திலும் குறைந்தபட்சம் இரண்டு பேர் வீட்டிலிருந்தனர்; காரணம், தனி ஆளாக வீட்டில் இருக்க யாரும் விரும்பவில்லை; மேலும் வீட்டைக் காலியாக விட்டுவிட்டுச் செல்வது பற்றி நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. புது சூழ்நிலை உண்டான முதல் நாளன்றே வீட்டுச் சமையல்காரி — மாறிய சூழ்நிலை என்ன, அவளுக்கு அது எந்த அளவு புரிந்திருக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை — க்ரகரின் அம்மா முன்பாக முழங்காலிட்டுத் தன்னை அனுப்பிவிடும்படி கெஞ்சினாள். கால் மணி நேரம் கழித்து அவள் விடைபெற்றபோது, கண்களில் நீர் மல்க, தனக்கு ஏதோ ஒரு பெரிய விடிவு ஏற்பட்டுவிட்டது போல நன்றி சொன்னாள்.

என்ன நடந்தது என்பது பற்றி யாரிடமும் ஒரு வார்த்தையும் சொல்வதில்லை என்று யாரும் கேட்டுக்கொள்ளாமலேயே சத்தியம் செய்துவிட்டுப் போனாள்.

க்ரகரின் தங்கை அம்மாவுக்கு ஒத்தாசையாக இப்போது சமைக்கவும் வேண்டியிருந்தது. அது ஒரு பெரிய வேலையாக இல்லை; காரணம், யாரும் சரியாகச் சாப்பிடவில்லை. குடும்பத்தின் ஒரு நபர் அடுத்தவரை சாப்பிடும்படி வற்புறுத்து வதையோ அதற்கு அவர், 'நன்றி, விரும்பியதெல்லாம் நன்றாக சாப்பிட்டுவிட்டேன்,' என்ற பதிலையே திரும்பத் திரும்ப சொல் வதையோ அல்லது இதையே வேறு வடிவத்தில் சொல்வதையோ க்ரகர் திரும்பத்திரும்பக் கேட்டுக்கொண்டேயிருந்தான். அடிக்கடி அவன் தங்கை, அவன் அப்பாவுக்கு பீர் வேண்டுமா என்று கேட்பதும் அவர் விரும்பினால் தானே போய் வாங்கி வருவதாகச் சொல்வதுமாக இருந்தாள். அவர் பதில் ஏதும் சொல்லாதபோது காவலாளியை அனுப்பி வாங்கிவரச் சொல்லவா என்றும் கேட்டாள். அவனை அனுப்புவதால் அவர் எவ்வித நன்றி உணர்வும் பாராட்ட வேண்டியதில்லை என்பதையும் உணர்த்தி னாள். ஆனால், அவரிடமிருந்து திட்டவட்டமாக 'வேண்டாம்' என்ற பதிலே வந்தது. பிறகு அதைப்பற்றி யாரும் பேசவில்லை.

அந்த முதல் நாளிலேயே க்ரகரின் அப்பா, அவனுடைய அம்மாவிடமும் தங்கையிடமும் குடும்பத்தின் பொருளாதார நிலைமையையும் வாய்ப்புகளையும் பற்றி விவரமாகச் சொன்னார். அப்போது அவர் அடிக்கடி தன் மேஜையிலிருந்து எழுந்துபோய் ஒரு சிறிய பெட்டகத்திலிருந்து ஏதாவது ஒரு பதிவுக்குறிப்பையோ பற்றுச்சீட்டையோ எடுத்து வந்தார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய வியாபாரம் நொடித்துப்போனபோது அவரால் மீட்கமுடிந்த ஒரு பொருள்தான் அந்தப் பெட்டகம். அதனுடைய சிக்கலான பூட்டைத் திறந்து, சில காகிதங்களை சரசரக்கத் தேடி வெளியே எடுத்து மீண்டும் அதை அவர் மூடிக்கொண்டிருப்பதைக் கேட்க முடிந்தது. க்ரகர் அடைபட்டுக் கிடக்க ஆரம்பித்த பின்னால் அவனால் கேட்கமுடிந்த முதல் உவப்பான தகவல் அவனுடைய அப்பா குடும்பப் பொருளாதார நிலைபற்றி பேசியதுதான். அப்பாவுடைய வியாபாரத்தில் மீதியாக எதுவுமே இல்லை என்றுதான் அவன் நினைத்திருந்தான். அவரும் அதை மறுக்கும் விதமாகப் பேசியதில்லை; இவனும் அதைப்பற்றி நேரிடையாகக் கேட்டதுமில்லை. அவருடைய வியாபாரம் நொடித்துப்போனபோது தன்னால் இயன்றதைச் செய்து, குடும்பத்தையே

நிலைகுலையச் செய்து துயரத்தில் அமிழச் செய்த அந்த வீழ்ச்சியை விரைவில் அவர்கள் மறக்கும்படி செய்யவேண்டும் என்பதுதான் அவனுடைய ஒரே ஆசையாக இருந்தது. ஓர் அசாதாரண ஆவேசத்தோடு உழைக்க ஆரம்பித்து, கீழ்நிலை எழுத்தர் பதவிக்குப் பதிலாக, கூடுதல் வருமானத்தைத் தரும் ஊர் சுற்றும் விற்பனைப் பிரதிநிதியாகி தன்னுடைய வெற்றியை உடனடியான ரொக்கப்பணமாக மாற்றி தன் குடும்பத்திற்குக் கொடுத்தான். அனைவரும் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தனர். ஆனால் இந்த அற்புதமான காலம், குடும்பச் செலவு முழுவதற்கும் பின்வந்த நாட்களில் க்ரகர் சம்பாதித்தும், பழைய செழிப்போடு எப்போதும் திரும்பி வரவில்லை. குடும்பத்திலுள்ள மற்றவர்க்கும் க்ரகர்க்கும் இது பழகிப்போய்விட்டது. மகிழ்ச்சியோடு கொடுக்கப்பட்ட பணம் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், எவ்வித பிரத்யேக வாஞ்சையும் இருதரப்பாலும் உணரப்படவில்லை. க்ரகர் தன் தங்கையுடன் மட்டுமே பிரியமுடன் இருந்தான். அவனைப் போலன்றி அவள் இசையில் ஆர்வம் காட்டினாள். வயலினை நெகிழ்ச்சியுடன் வாசிக்கும் திறமை அவளுக்கிருந்தது.எப்படியாவது வேறு வழியில் பணம் ஏற்பாடு செய்து அவளை அதிகச் செலவு பிடிக்கும் இசைப்பள்ளிக்கு அனுப்பிப் படிக்கவைக்க வேண்டுமென்பது அவனுடைய ரகசியத் திட்டமாக இருந்தது. பிரயாணங்களிலிருந்து சிறு விடுமுறையில் அவன் வீடு திரும்பும்போதெல்லாம் இசைப்பள்ளி பற்றி தங்கையுடன் பேசுகையில் குறிப்பிடுவான். ஆனால் எப்போதும் நடைமுறைக்கு வராத ஓர் இனிய கனவாகவே அது இருந்தது. அவனுடைய பெற்றோரும் இத்திட்டம் பற்றிய அவர்களுடைய வெகுளித்தனமான பேச்சுக்களுக்குக்கூட ஊக்கம் அளிக்கவில்லை. இருந்தும், கிறிஸ்துமஸ் தினத்தன்று தன் இறுதியான முடிவை அறிவிக்கத் தீர்மானித்திருந்தான்.

செங்குத்து நிலையில் கதவைப் பற்றிக்கொண்டு அடுத்த அறையில் நடக்கும் உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தபோது அவனுடைய இன்றைய நிலையில் எந்தவிதப் பயனும் அற்ற இத்தகைய எண்ணங்கள்தாம் அவனுக்குத் தோன்றின. சில சமயங்களில் சோர்வின் காரணமாகக் கேட்பதைக் கைவிட்டு தன் தலையை சிரத்தையின்றி கதவின்மீது சாய விடுவான். ஆனால் உடனடியாகத் தன்னை மீண்டும் சரிப்படுத்திக் கொள்வான்.

ஏனென்றால், அவன் தலை உண்டாக்கிய சிறு சத்தம்கூட அடுத்த அறையில் ஒலித்து உரையாடலை நிறுத்திவிடும். அவனுடைய அப்பா கதவை நோக்கித் திரும்பி, ‘இப்போது, அவன் என்ன செய்துகொண்டிருக்கக்கூடும்?’ என்று கேட்பார். அதன் பிறகு தடைப்பட்ட உரையாடல் மீண்டும் தொடரும்.

குடும்பப் பொருளாதார நிலை பற்றிய விவரங்கள் க்ரகருக்குத் தற்போது அவன் விரும்பிய அளவுக்குக் கிடைத்திருந்தன. அவனுடைய அப்பா அம்மாதிரியான விஷயங்களைக் கையாண்டு நீண்ட நாட்களாகிவிட்டதாலும் அவனுடைய அம்மா அவற்றை எப்போதுமே உடனடியாகப் புரிந்துகொள்ளாததாலும் அவர் தன்னுடைய விளக்கங்களைத் திரும்பத் திரும்பச் சொன்னதால் க்ரகருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. வியாபார நசிவிலிருந்து மிஞ்சி சில முதலீடுகள், அவை குறைந்த தொகையாக இருந்தாலும், அவருக்கு இருந்தன. லாபப்பங்கீடுகள்பெறப்படாமலேயே இருந்ததால் அவை கொஞ்சம் பெருகியும் இருந்தன. அவையன்றி, தன் செலவுக்கு சொற்பமே எடுத்தது போக க்ரகர் வீட்டிற்குக் கொடுத்த பணத்திலிருந்து செலவழிக்கப்படாத மீதி ஒரு சிறிய தொகையாக வளர்ந்திருந்தது. எதிர்பார்த்து மேற்கொள்ளப்படாத இயல்பான சிக்கனமும் தொலைநோக்கும் நிரூபணமாகிவிட்டது பற்றி கதவுக்குப் பின்னிருந்த க்ரகர் மகிழ்ச்சியடைந்து தன் தலையை ஆர்வத்துடன் அசைத்தான். தன் செலவுபோக மீதமிருந்ததை முதலாளிக்குக் கொடுத்துத் தன் அப்பாவின் கடனை இன்னும் கொஞ்சம் அவனால் அடைத்திருக்க முடியும் என்பது உண்மைதான். அதன் மூலம் அந்த வேலையில் இருக்கும் காலத்தைக் குறைத்திருக்க அவனால் முடியும். ஆனாலும் சந்தேகமேயில்லாமல் அவனுடைய அப்பா பண நிர்வாகத்தைத் திருப்தியாகத்தான் செய்திருக்கிறார்.

வட்டியை மட்டும் வைத்து குடும்பத்தை நடத்தும் அளவுக்கு இருக்கும் முதல் போதாது. ஒரு வருடம், மிஞ்சிப்போனால் இரண்டு வருடங்களுக்கு அந்த முதலை வைத்து வாழலாம், அவ்வளவுதான். சிரமக் காலத்துக்கு என்று ஒதுக்கி வைக்கப்படவேண்டிய அப்பணத்தை இப்போது தொடக் கூடாது. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பணத்தை சம்பாதிக்கத்தான் வேண்டும். இப்போது அவனுடைய அப்பா ஓரளவு ஆரோக்கியமாக இருந்தாலும் வயதானவர்; கடந்த ஐந்து வருடங்களாக எந்த வேலையும் அவர்

செய்யவில்லை; அவரால் உழைக்க முடியும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. கடினமாக உழைத்தும் வெற்றியைக் காணாத அவருடைய வாழ்க்கையில் அவருக்குக் கிடைத்த முதல் ஓய்வான இந்த ஐந்து வருடங்களில் அவர் உடல் பெருத்து சோம்பேறியாக மாறி விட்டார். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை திறந்திருக்கும் ஜன்னலுக்கருகில் இருக்கும் சோ∴பாவில் படுத்துக்கொண்டு மூச்சுவாங்கிக் கொண்டு வீட்டுக்குள் நடக்கவே சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் ஆஸ்துமா நோயாளியான அவனுடைய வயதான அம்மா எப்படி சம்பாதிப்பாள்? பாங்கான உடையணிந்துகொண்டும் நீண்டநேரம் தூங்கிக்கொண்டும் வீட்டு வேலைகளில் உதவி செய்துகொண்டும் பகட்டில்லாத கேளிக்கை களில் பங்குபெற்றுக்கொண்டும் எல்லாவற்றுக்கும் மேலாக வயலின் வாசித்துக்கொண்டும் இதுநாள்வரை மகிழ்ச்சியாக இருந்த பதினேழு வயதுக் குழந்தையான அவனுடைய தங்கை அவளுடைய வாழ்க்கைக்கு இனி சம்பாதிக்க வேண்டுமா? ஆரம்பத்தில், பணத்தைச் சம்பாதிக்கவேண்டிய அவசியம் பற்றி குறிப்பிடப்படும் போதெல்லாம் க்ரகர் கதவைப் பற்றியிருந்த தன் கையை விடுவித்து பக்கத்திலிருந்த, தோலால் ஆன குளிர்ச்சியான சோ∴பாவில் விழுவான். அவமானத்தாலும் துக்கத்தாலும் தன் உடல் எரிவதுபோல உணர்வான்.

அடிக்கடி மணிக்கணக்காக சோ∴பாவின் தோலைத் தடவிக்கொண்டு இரவு முழுக்கத் தூங்காமலே படுத்துக் கிடந்தான். அப்படி இல்லையென்றால், கைவைத்த நாற்காலி ஒன்றை ஜன்னலருகில் தள்ளிக்கொண்டுபோய், ஜன்னலின் அடிக்கட்டைமீது ஊர்ந்து ஏறி, நாற்காலியை ஆதாரமாகக்கொண்டு ஜன்னலின் கண்ணாடி மீது சாய்ந்து கொள்ள கடும் முயற்சியில் ஈடுபடுவான். ஜன்னல் வழியே வெளியே பார்க்கும் செயல் முன்பு கொடுத்த விடுதலை உணர்வை மீட்டெடுக்கும் காரியமாக அந்த முயற்சி இருந்தது. ஏனென்றால், நடைமுறை நிகழ்வில் அண்மையில் இருந்த காட்சிகள்கூட நாள்பட நாள்பட அவனுடைய பார்வைக்கு மங்கிப்போக ஆரம்பித்தன. முன்பு அடிக்கடி கண்ணில் பட்டதால் அவனுடைய வெறுப்புக்கு ஆளானதும் தெருவின் எதிர்ப்பக்கம் இருந்ததுமான மருத்துவமனைகூட இப்போது அவனுடைய பார்வைப் பரப்புக்கு அப்பால் போய்விட்டது. ஒரு நகரத்தின் தெருவாக இருந்தும் அமைதி நிரம்பிய சார்லட் தெருவில் வசிக்கிறோம் என்பது

அவனுக்கு நினைவில் இல்லாமல் போயிருந்தால், சாம்பல்நிற வானமும் நிலமும் பிரிக்கமுடியாத அளவுக்கு ஒன்றிப்போயிருந்த ஒரு பாலைவனக் காட்சியைத்தான் ஜன்னல் வழியாகப் பார்க்கிறோம் என்று அவன் நம்பியிருப்பான். ஜன்னலுக்கு அருகில் நாற்காலி போடப்பட்டிப்பதை இரண்டு முறை கவனித்த அவனுடைய புத்திசாலித் தங்கை, பிறகு அறையை சுத்தம் செய்யமுடிந்த போதெல்லாம் நாற்காலியை ஜன்னலுக்கருகிலேயே நகர்த்தி வைத்தாள். ஜன்னலின் உள்பக்கக் கதவுகளையும் திறந்தே வைத்தாள்.

அவனால் அவனுடைய தங்கையுடன் பேச முடிந்திருந்தால் அவள் செய்யும் எல்லா ஊழியங்களுக்கும் நன்றி சொல்லியிருப்பான். அதன்மூலம் அவளுடைய சேவைகளை இன்னும் சிறந்த முறையில் ஏற்றுக்கொண்டிருக்க முடியும். ஆனால் இப்போதோ நன்றி சொல்லப்படாத அவளுடைய ஊழியங்கள் அவனுக்கு மிகுந்த துயரத்தை அளித்தன. சிக்கலான ஒரு புது சூழ்நிலையை இயல்பானதாகவும் எளிமையானதாகவும் ஆக்க அவனுடைய தங்கை செய்த முயற்சிகள் வெற்றியடையத் தொடங்கின. காலம் க்ரகருக்கும் அதிகத் தெளிவைத் தந்தது. அவள் அவனுடைய அறைக்குள் நுழைந்த விதமே அவனுக்குத் துயரத்தைத் தந்தது. அறைக்குள் நுழைந்த உடனேயே க்ரகரின் அறையை யாரும் பார்த்துவிடக்கூடாது என்பதில் அவளுக்கிருந்த வழக்கமான எச்சரிக்கை உணர்வையும் மீறி கதவைக்கூட சாத்தாமல் ஜன்னலருகில் ஓடி மூச்சுத்திணறல் ஏற்பட்டவள் போல வேகமாக அதன் கதவுகளைத் திறப்பாள். கடுமையான குளிரிலும் அங்கு நின்று வெளிக்காற்றை ஆழ்ந்து சுவாசிப்பாள். ஒரு நாளைக்கு இரண்டு முறை அவள் இப்படி பரபரப்புடன் நடந்துகொள்வது க்ரகரை பயப்பட வைத்தது. அவள் அறையில் இருக்கும் எல்லா நேரத்திலும் அவன் சோஃபாவுக்கு அடியில் நடுங்கியபடி பதுங்கியிருப்பான். ஜன்னலைத் திறக்காமல் அவனுடன் இருப்பது சாத்தியமாகியிருக்கும் பட்சத்தில் இந்தத் தொல்லையைக்கூட அவனுக்கு அவள் தந்திருக்க மாட்டாள் என்பது அவனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

க்ரகரின் உருமாற்றம் நிகழ்ந்து சுமார் ஒரு மாதம் கழித்து ஒரு சந்தர்ப்பத்தில், அவனுடைய தோற்றத்தைப் பார்த்து அவனுடைய தங்கை திடுக்கிடுவதற்கு எந்தக் காரணமும் நிச்சயமாக இல்லாதபோது, அவனுடைய அறையை சுத்தம் செய்ய அவள் வழக்கத்துக்கு மாறாக சற்று முன்னதாக அறைக்குள்

வந்தபோது அவன் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். அவன் எந்த அசைவும் இல்லாமல் ஒரு பேயைப்போலத் தோற்றமளித்தான். அவள் அறைக்குள் வராமல் போயிருந்தால் க்ரகர் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டான். ஏனென்றால் அவன் இருந்த நிலை அவள் உடனடியாக ஜன்னலைத் திறப்பதைத் தடுத்தது. ஆனால், அவள் திடுக்கிட்டு சரேலென பின்வாங்கியது மட்டுமின்றி கதவையும் அறைந்து சாத்தினாள். யாராவது ஓர் அந்நியன் இதைப் பார்க்க நேர்ந்திருந்தால் அவன் அவளை ஏதோ கடிப்பதற்குக் காத்திருந்ததைப்போல தோன்றியிருக்கும். க்ரகர் அப்போது உடனே சோஃபாவுக்கு அடியில் மறைந்துகொண்டான். ஆனால், அவள் மதிய நேரத்தில் திரும்ப வரும்வரை அவன் காத்திருக்க வேண்டியிருந்தது. இயல்புநிலை மாறி ஒரு சங்கடத்தில் இருந்ததைப்போலத் தோன்றினாள். இவ்வளவு நாள் கழித்தும் தான் அவளுக்கு எவ்வளவு அருவருப்புணர்வைத் தருகிறோம் என்பதை அவன் உணர்ந்தான். இது நிச்சயம் தொடரத்தான் போகிறது. தான் சோஃபாவுக்கு அடியில் மறைந்திருக்கும்போது வெளியே நீட்டிக்கொண்டிக்கும் தன் உடலின் ஒரு சிறு பகுதியைப் பார்த்து ஓடாமலிருக்க அவள் மிகுந்த பியாசைப்படுகிறாள் என்பதையும் அவன் உணர்ந்தான். அந்த சங்கடத்திலிருந்து அவளைக் காப்பாற்றுவதற்காக ஒரு நாள் அவன் ஒரு சிறு துணியைத் தன் பின்புறம் சுமந்துகொண்டு சோஃபாவுக்கருகில் போனான். இந்த முயற்சிக்கு அவன் நான்கு மணி நேரம் செலவழிக்க வேண்டியிருந்தது. தன்னை முழுவதும் மறைக்கும்படி அந்தத் துணியை சோஃபாவின் கீழ் தொங்கும்படி செய்தான். அவனுடைய தங்கை குனிந்துபார்த்தால்கூட இப்போது அவன் பார்வையில் படமாட்டான். அந்தத் துணி அநாவசியம் என்று கருதியிருந்தால் அவள் அதை சோஃபாவிலிருந்து நிச்சயம் நீக்கியிருப்பாள். ஏனென்றால் க்ரகர் இப்படி தன்னைத் துணியின் மூலம் மறைத்துக்கொள்வது அவனுக்கு அசௌகரியத்தைத்தான் தந்தது என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அவள் அந்தத் துணியை அது இருந்தபடியே விட்டுவிட்டாள். இந்தப் புது ஏற்பாட்டை அவள் எப்படி எடுத்துக்கொள்கிறாள் என்று தெரிந்துகொள்வதற்காகத் துணியைத் தன் தலையால் லேசாகத் தூக்கிப் பார்த்தபோது அவள் கண்களில் நன்றியுணர்வு தென்பட்டதாக அவனுக்குத் தோன்றியது.

அவனுடைய அறைக்குள் நுழைய வேண்டும் என்ற எண்ணமே முதல் பதினைந்து நாட்களுக்கு அவனுடைய பெற்றோருக்குத் தோன்றவில்லை. முன்பெல்லாம் உபயோகமில்லாத மகள் என்று அவர்கள் திட்டிய தன் தங்கையின் தற்போதைய செயல்களைத் தன்னுடைய பெற்றோரே பாராட்டுவதை க்ரகர் அடிக்கடி கேட்டான். அவள் அவனுடைய அறையை சுத்தம் செய்து கொண்டிருக்கும்போது க்ரகரின் அம்மாவும் அப்பாவும் கதவுக்கு வெளியே அடிக்கடி காத்திருந்தார்கள். அவள் வெளியே வந்தவுடன், அறையில் பொருள்கள் எப்படி இருந்தன, க்ரகர் என்ன சாப்பிட்டான், அந்த முறை எப்படி நடந்து கொண்டான், அவனுடைய நிலையில் ஏதாவது முன்னேற்றம் தென்படுகிறதா என்பவை பற்றி அவர்களுக்குச் சொல்லவேண்டும். அவளுடைய அப்பாவை விடவும் அம்மா சீக்கிரமாக அவனுடைய அறைக்குள் நுழையும் தன் ஆசையை வெளிப்படுத்தினாள். ஆனால் அவனுடைய அப்பாவும் தங்கையும் அவளைத் தடுத்தார்கள். தடுத்ததற்காக அவர்கள் சொன்ன காரணங்களை க்ரகர் முழுக்க ஒப்புக்கொண்டான். சில நாட்கள் கழித்து அவளைப் பலவந்தப்படுத்தித் தடுத்து நிறுத்த வேண்டியிருந்தது. ‘க்ரகரைப் பார்க்க என்னை விடுங்கள். துரதிருஷ்டம் பிடித்த என் மகனைப் பார்க்க வேண்டும் என்ற என்னுடைய ஆசையை உங்களால் புரிந்து கொள்ள முடியாதா?’ என்று அவள் கதறியபோது தினந்தோறும் என்றில்லாமல் வாரம் ஒருமுறையாவது அவள் தன்னுடைய அறைக்குள் வந்தால் நல்லது என்று க்ரகர் நினைத்தான். குழந்தைத்தனமான யோசனையின்மையில் தன் சக்திக்கு மீறிய ஒரு கடமையைத் தன் இளம்தோள்களில் சுமந்திருக்கும் தன் தங்கையைவிடவும் தன் அம்மா இப்போதுள்ள சூழ்நிலையைச் சரியாகப் புரிந்துகொண்டிருப்பாள் என்பதும் அப்படி அவன் நினைத்ததற்கு ஒரு காரணம்.

தன்னுடைய அம்மாவைப் பார்க்கவேண்டும் என்ற க்ரகரின் ஆசை விரைவிலேயே நிறைவேறியது. தன்னுடைய பெற்றோரின் நன்மை கருதி பகல் நேரத்தில் ஜன்னலோரத்தில் இருப்பதை அவன் விரும்பவில்லை. சில சதுர கஜங்களே இருந்த தரையில் சுற்றித் தவழவும் அவனால் முடியவில்லை. இரவு முழுக்க அமைதியாகப் படுத்துக்கிடப்பதையும் அவனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. உண்பதில் இருந்த ஆர்வத்தையும் வேகமாக இழந்து கொண்டிருந்தான். எனவே பொழுதுபோக்கிற்காக சுவர்களிலும் கூரையிலும்

குறுக்கும் நெடுக்குமாக தவழ்வதை ஒரு பழக்கமாகக் கைக்கொண்டான். குறிப்பாக, கூரையிலிருந்து தொங்குவதை அவன் ரசித்து அனுபவித்தான். தரையில் படுத்துக் கிடப்பதைவிடவும் அது அதிக சுவாரஸ்யமாக இருந்தது; சுவாசிப்பது எளிதாக இருந்தது; உடல் லேசாக ஊஞ்சலாடியது. இப்படித் தொங்குவதால் உண்டான பரவச மயக்கத்தில் அவனுக்கே ஆச்சரியமுண்டாகும் விதத்தில் கூரையிலிருந்த தன் பிடியை விட்டுவிட்டுத் தரையில் தொப்பென்று விழுவதும் நடந்தது. முன்பை விட இப்போது தன் உடலின்மீது அதிகக் கட்டுப்பாட்டை அவனால் செலுத்த முடிந்தது. கூரையிலிருந்து தொப்பென்று விழுவதுகூட அவனுக்கு எவ்வித வலியையும் தரவில்லை. அவன் தவழ்ந்து சென்ற இடங்களிலெல்லாம் அவன் பாதங்களிலிருந்த பசை போன்ற திரவத்தின் சுவடுகள் பதிந்திருந்ததால் க்ரகரின் புதிய பொழுதுபோக்கை அவனுடைய தங்கை உடனே கவனித்துவிட்டாள். அவன் தவழ்ந்து திரிவதற்கு சாத்தியமான ஒரு பெரிய பரப்பைத் தரும் முயற்சியாக அவனுக்கு இடைஞ்சலாக இருந்த எல்லா இருக்கைகளையும் குறிப்பாக இழுப்பறைகள் கொண்ட பெட்டியையும் எழுதும் மேஜையையும் அகற்ற முடிவு செய்தாள். அவள் தனி ஒருத்தியால் செய்யமுடியாத அவ்வேலைக்கு அப்பாவின் உதவியை நாட அவளுக்குத் துணிவில்லை. வேலைக்காரச் சிறுமியையும் உதவிக்குக் கூப்பிடமுடியாது. பதினாறு வயதான அவள், முன்பிருந்த சமையல்காரி போய்விட்டபிறகு தைரியமாக இங்கு தங்கியிருக்கிறாள். சமையலறைக்கதவை எப்போதும் பூட்டியே வைத்திருக்கவும் குறிப்பான தேவைக்கு மட்டுமே அதைத் திறந்து வெளியே வரவும் அச்சிறுமி ஒரு சிறப்புச் சலுகையைப் பெற்றிருந்தாள். எனவே அப்பா வெளியே போயிருக்கும் சமயத்தில் அம்மாவின் உதவியை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆர்வம் கொப்பளிக்க அவளுடைய அம்மாவும் வந்தாள். ஆனால் அவளுடைய ஆர்வமெல்லாம் க்ரகருடைய அறைக்கதவின் அருகே வந்தவுடன் மறைந்துபோனது. க்ரகருடைய அம்மாவை அவனுடைய அறைக்குள்ளே அனுமதிக்கும் முன்பாக அவனுடைய தங்கை முதலில் அறைக்குள் நுழைந்து எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்தாள். பதற்றம் கலந்த அவசரத்தில் தான் ஏற்பாடு செய்திருந்த திரைத்துணியை க்ரகர் இழுத்ததில் அது நிறைய மடிப்புக்களுடன், ஏதோ தவறுதலாக

சோஃபாவின் மீது எறியப்பட்டது போன்ற தோற்றத்தை அடைந்தது. அதனடியிலிருந்து இந்த முறை அவன் எட்டிப் பார்க்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் அம்மாவைப் பார்க்கும் ஆசையைத் துறந்தான். அம்மா இங்கு வந்ததே அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. க்ரீட், அம்மாவின் கையைப் பிடித்து வழி நடத்திக்கொண்டு, 'உள்ளே வா, அவன் பார்வையில் படவில்லை,' என்று சொல்லி உள்ளே அழைத்து வந்தாள். அந்தப் பெரிய, பழைய இழுப்பறைப் பெட்டியை அதனுடைய இடத்திலிருந்து நகர்த்த இரண்டு பெண்களும் போராடுவதை க்ரகரால் கேட்க முடிந்தது. அவள் அளவுக்கு மீறி சிரமப்படுகிறாள் என்று அம்மா கண்டித்தும் அவனுடைய தங்கையே பாரத்தின் பெரும்பகுதியை ஏற்று இழுத்துக்கொண்டிருந்தாள். பதினைந்து நிமிடநேரம் சிரமப்பட்டு பெட்டியை இழுக்க முயற்சி செய்த பிறகு, அது முன்பிருந்த இடத்திலேயே இருந்துவிட்டுப் போகட்டுமே என்று அவனுடைய அம்மா சொன்னாள். ஏனென்றால், அந்தப் பெட்டி மிகவும் கனமாக இருப்பதால் அவனுடைய அப்பா வருவதற்குள் அதை நகர்த்த முடியாதென்றும் மேலும் அப்பெட்டியை நகர்த்துவது க்ரகருக்கு செய்யும் சேவை என்று உறுதியாகச் சொல்லமுடியாது என்றும் சொன்னாள். ஆனால், அவளுடைய எண்ணம் இதற்கு நேர்மாறாக இருந்தது. இழுப்பறைப் பெட்டியும் இருக்கைகளும் நீக்கப்பட்டபிறகு வெறிச்சோடிப் போகப்போகும் சுவர்களின் காட்சி அவள் மனதை கனக்கச் செய்தது. அவற்றுக்குப் பலவருடங்கள் பழகிப்போன க்ரகருக்கும் அதே உணர்வு தோன்றுமே என்றும் கவலைப்பட்டாள். அவை இல்லாமல் க்ரகர் நிச்சயம் துக்கப்படுவான். அறையில் அவன் எங்கிருக்கிறான் என்று தெரியாத அவனுடைய அம்மா தன்னுடைய பேச்சை அவனால் புரிந்து கொள்ளமுடியாது என்ற நம்பிக்கையில் தொடர்ந்து கிசுகிசுக்கும் குரலில், தன் குரல் அவனுக்குக் கேட்கக்கூடாது என்ற எண்ணத்தில் முடிவாகச் சொன்னாள்: "அவனுடைய இருக்கைகளை நீக்குவது அவனுடைய நிலை சீராகும் என்ற நம்பிக்கையை நாம் கைவிட்டு விட்டோம் என்பதை அவனுக்குக் காட்டுவதுபோல இல்லையா? முன்பு அவனுடைய அறை எப்படி இருந்ததோ அப்படியே விட்டுவிடுவது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவன் நம்மிடம் திரும்பி வரும்போது எதுவும் மாறாதிருப்பதைப் பார்ப்பதற்கும் இடையில் நடந்ததை எளிதாக மறப்பதற்கும் அவனுக்கு அது உதவும்!"

கடந்த இரண்டு மாதங்களாக இல்லாதிருந்த நேரிடையான மனிதப்பேச்சோடு வெறுமையான குடும்ப வாழ்க்கையும் இணைந்து தன்னுடைய மனத்தைக் குழப்பியிருக்கிறது என்பதைத் தன் அம்மாவின் பேச்சைக் கேட்டபோது க்ரகர் உணர்ந்துகொண்டான். இல்லையென்றால், தன்னுடைய அறையிலிருக்கும் இருக்கைகளெல்லாம் நீக்கப்பட வேண்டும் என்று தான் மிகவும் ஆர்வமாக இருந்ததன் காரணம் எது என்று அவன் ஏன் குழம்ப வேண்டும்? குடும்பத்தின் பழைய இருக்கைகள் பொருத்தப்பட்ட தன்னுடைய சௌகரியமான அறை எல்லாத் திசைகளிலும் இடைஞ்சலில்லாமல் நகர்வதற்கு ஏற்ற வகையில், ஆனால் அதே சமயம் மனிதப் பின்புலமும் தடயமும் நீக்கப்பட்ட ஒரு காலிக் குகையாக மாற்றப்படவேண்டுமென்று அவன் உண்மையில் விரும்புகிறானா? சுய நினைவு அற்ற நிலையின் விளிம்புக்குச் சென்றுவிட்ட அவனை, அவன் நீண்ட நாட்களாகக் கேட்டிராத அம்மாவின் குரல் மீண்டும் நனவுலகுக்குக் கொண்டுவந்தது. அவனுடைய அறையிலிருந்து எதுவும் நீக்கப்படக்கூடாது; எல்லாம் முன்பிருந்த மாதிரியே இருக்கவேண்டும்; அறையிலுள்ள மேஜைகளும் பெட்டிகளும் அவன் மனநிலையின்மீது செலுத்தும் பாதிப்பை அவன் நிராகரிக்கக்கூடாது; நோக்கமில்லாமல் அவன் சுற்றிச் சுற்றித் தவழும்போது இருக்கைகள் தடுத்தாலும் அது ஒரு அனுகூலமே அன்றி பாதகமில்லை.

துரதிர்ஷ்டவசமாக அவனுடைய தங்கைக்கு இதற்கு எதிரான அபிப்பிராயம் தோன்றியது. க்ரகருடைய விஷயங்களில் தன்னுடைய பெற்றோருக்கு இல்லாத ஒரு பாண்டித்யம் தனக்கு இருப்பதான எண்ணம் அவள் மனதில் வலுப்பெற்றிருந்தது. இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. எனவே, அம்மாவின் அறிவுரைக்கு மாறாக க்ரகரின் அறையிலிருந்து இழுப்பறைப் பெட்டியையும் எழுதும் மேஜையையும் அந்த எல்லா அறைக்கலன்களையும் நிச்சயம் அகற்றியே தீரவேண்டும் என்று உறுதி கொண்டாள். வெளிப்படையான காரணங்களுக்காக சோ.ஃபாவை மட்டும் அங்கேயே விட்டுவிடவும் தீர்மானித்தாள். குழந்தைத்தனமான கீழ்ப்படியாமையாலும் அண்மைக் காலமாக எதிர்பாராமல் அவளுக்கு ஏற்பட்டிருந்த தன்னம்பிக்கையாலும் மட்டுமே அவள் இந்த முடிவுக்கு வரவில்லை. க்ரகர் தவழ்வதற்கு நிறைய இடம் வேண்டும் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். இன்னொரு வகையில் அவன் பெரும்பாலும் அந்த அறைக்கலன்களை

எப்போதும் உபயோகிக்கவில்லை என்பதையும் அவள் கவனித்திருந்தாள். எல்லா சாதகமான வாய்ப்புகளிலும் ஒன்றிவிடும் பேதைப் பருவத்திற்கே உரிய உற்சாக மனநிலையும் இன்னொரு காரணமாக இருக்கலாம். இந்த உற்சாகமே க்ரகரின் வாழ்வில் ஏற்பட்டுள்ள பயங்கரத்தை மிகைப்படுத்த க்ரீட்டைத் தூண்டியிருக்கலாம். தான் அவனுக்கு இன்னும் அதிகமாக சேவை செய்யவேண்டும் என்பதாலேயே இந்த மிகைப்படுத்தலையும் அவள் செய்திருக்கலாம். க்ரகர் தனியான ஆட்சி செய்துகொண்டிருந்த வெறுமையான சுவர்கள் கொண்ட அறைக்குள் தன்னைத்தவிர வேறு யாரும் காலடி எடுத்துவைக்கக் கூடாது. அம்மாவுக்காகத் தன் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளக்கூடாது. க்ரகரின் அறைக்குள் இருப்புக் கொள்ளாமலிருந்த அவளுடைய அம்மாவால் தன்னுடைய கருத்தை வலியுறுத்த முடியவில்லை. எனவே அவள் விரைவில் பேச்சற்றுப்போய் இழுப்பறைப் பெட்டியை வெளியே நகர்த்த தன் மகளுக்கு முடிந்த மட்டும் உதவினாள். இப்போது க்ரகர் இழுப்பறைப் பெட்டி இல்லாமல் இருக்கலாம். ஆனால் எழுதும் மேஜை நிச்சயம் அவனுக்கு வேண்டும். முக்கிமுனகி இரண்டு பெண்களும் இழுப்பறைப் பெட்டியைத் தன்னுடைய அறையிலிருந்து வெளியே நகர்த்திய உடனே க்ரகர் மிகவும் எச்சரிக்கையாகவும் அன்பு மேலிடும் பார்வையுடனும் சோஃபாவுக்குக் கீழிருந்து தன்னுடைய தலையை வெளியே நீட்டினான். அடுத்த அறையில் பெட்டியில் இழுப்பறைகளை க்ரீட் பொருத்திக்கொண்டிருக்க விட்டுவிட்டு துரதிருஷ்டவசமாக அவனுடைய அம்மா முதலில் அறைக்குள் திரும்பி வந்தாள். இதுவரை தன்னைப் பாக்காமலிருந்த அம்மாவுக்குத் தன்னுடைய தோற்றம் அருவருப்பைத் தரும் என்பதால் க்ரகர் பயத்தில் சோஃபாவின் மறுமுனைக்கு வேகமாக நகர்ந்தான். இருந்தும் சோஃபாவிலிருந்து தொங்கிய திரை லேசாக ஆடியதை அவனால் தடுக்க முடியவில்லை. அவளை உஷார்ப்படுத்த அதுபோதும். ஒரு கணம் அசையாமல் நின்ற அவள் க்ரீட்டிடம் திரும்பிப்போனாள்.

சில சிறிய அறைக்கலன்கள் மட்டுமே தன் அறையிலிருந்து கொண்டுபோகப்படுகின்றனவே அன்றி வேறெதுவும் அசாதாரணமாக நடக்கவில்லை என்று க்ரகர் தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டபோதும், இரண்டு பெண்களும் அங்குமிங்கம்

நடப்பதும் அவர்களின் பெருமூச்சுக்களும் அறைக்கலன்களைத் தரையில் நகர்த்தும் சத்தமும் நாலாபுறமிருந்தும் வந்து அவனைப் பெருத்தத் தொல்லைக்குள்ளாக்கின. அவன் எவ்வளவுதான் தன் தலையையும் கால்களையும் உள்ளடக்கித் தரையோடு தரையாக ஒடுங்கி இருந்தாலும் இந்தத் தொல்லையை நீண்ட நேரம் தன்னால் தாங்கிக்கொள்ள முடியாது என்று எண்ணிக்கொண்டான். அவன் நேசித்த எல்லாவற்றையும் வெளியே அகற்றி அவர்கள் அவனுடைய அறையைக் காலி செய்துகொண்டிருந்தார்கள். சித்திர வேலைப்பாட்டுக்கான ரம்பத்தையும் மற்ற சில கருவிகளையும் அவன் போட்டு வைத்திருந்த இழுப்பறைப் பெட்டி ஏற்கனவே இழுத்துச் செல்லப்பட்டுவிட்டது. இப்போது அவர்கள் அவனுடைய எழுதும் மேஜையைப் பிரித்துக்கொண்டிருந்தார்கள். அது அநேகமாகத் தரையில் அமிழ்ந்துபோயிருந்தது. அவன் தொடக்கப்பள்ளியில் படித்தபோதும் வணிகவியல் கல்லூரியில் படித்தபோதும் வீட்டுப்பாடம் செய்த மேஜை அது. இரண்டு பெண்களுடைய நல்லெண்ணங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு செலவிட அவனுக்கு நேரமில்லை. அவர்களிருவரின் இருப்பையே அவன் கிட்டத்தட்ட மறந்துபோயிருந்தான். ஏனென்றால், சோர்வினால் அவர்கள் அமைதியாக வேலைசெய்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய சரசரக்கும் காலடி ஓசையைத் தவிர வேறு எந்த சத்தமும் கேட்கவில்லை.

அவர்கள் அடுத்த அறையில் எழுதும் மேஜையின்மீது சாய்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தபோது அவன் சோஃபாவின் அடியிலிருந்து சரேலென்று வெளியேறி நான்குமுறை வெவ்வேறு திசையில் நகர்ந்தான்; ஏனென்றால் அவனுக்கு எதை முதலில் மீட்பது என்று புரியவில்லை; பிறகு தரையில் எதிர்த்திசையிலிருந்த சுவருக்கு ஓடினான்; அங்கு ஃபர்துணியால் தன்னை இறுக்க மூடிக்கொண்டிருந்த பெண்ணின் படம் அவனைக் கவர்ந்தது; அதை நோக்கி ஊர்ந்தான்; அதன் கண்ணாடிப் பரப்பின் மீது தன்னை இறுகப் பொருத்திக்கொண்டான்; அதன் பரப்பு, பிடித்துக்கொள்வதற்கு சௌகரியமாகவும் சூடாகிப்போயிருந்த அவனுடைய வயிற்றுக்கு இதமாகவும் இருந்தது. அவனுடைய உடலால் மறைக்கப்பட்டுவிட்ட இப்படத்தை யாரும் அகற்றமுடியாது. இரண்டு பெண்களும் உள்ளே வருவதைக் கவனிப்பதற்கு

வசதியாக தன் தலையைக் கூடத்தை நோக்கித் திருப்பி வைத்துக்கொண்டான்.

அவர்கள் அதிக நேரம் ஓய்வெடுக்காமல் திரும்பி வந்தார்கள். க்ரீட் தன் அம்மாவைக் கைகளில் ஆதரவாகப் பிடித்தபடி வந்தாள். க்ரீட் சுற்றுமுற்றும் பார்த்தபடி, “இப்போது எதை எடுக்கலாம்?” என்று கேட்டாள். சுவரிலிருந்த க்ரகரின் கண்களை அவளுடைய கண்கள் சந்தித்தன. அம்மா அங்கு இருந்ததால் அவள் பதற்றத்தை வெளிக்காட்டாமல், அம்மா மேல்நோக்கிப் பார்ப்பதைத் தடுக்கும் வகையில் அவளைநோக்கித் தன் தலையைத் தாழ்த்தி, “வா அம்மா, கொஞ்ச நேரம் கூடத்தில் இருப்போமா,” என்று சொன்னாள். அம்மாவைப் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பிவிட்டு பிறகு அவனைசுவரிலிருந்து கீழே துரத்தும் அவளுடைய நோக்கம் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. சரி, அவள் முயற்சி செய்யட்டும்! படத்தைவிட்டு கீழே இறங்கக்கூடாது என்று அவன் அதை இறுகப் பற்றிக்கொண்டான். க்ரீட் அவனை இறக்க முயன்றால் அவள் முகத்தின்மீது பறக்கவும் தீர்மானித்தான்.

ஆனால் க்ரீட்டின் வார்த்தைகள் அவளுடைய அம்மாவைப் பதற்றப்படவே வைத்தன. ஒரு பக்கமாக ஓர் அடி எடுத்துவைத்த அவளுடைய அம்மா, படத்தின் மீதிருந்த பெரிய பழுப்பு நிறத் திரட்சியைப் பார்த்துவிட்டாள். தான் பார்த்தது க்ரகர்தான் என்பதை உணரும் முன்பாகவே அவள், ‘ஓ, கடவுளே கடவுளே,’ என்று உரத்த கரகரத்த குரலில் அலறி, உயிர்போவது போல கைகளைப் பரப்பியபடி சோஃபாவின் மீது விழுந்து அசைவற்றுக் கிடந்தாள். அவனை வெறித்துப் பார்த்தபடி முஷ்டியை அசைத்துக்கொண்டு ‘க்ரகர்’ என்று அவனுடைய தங்கை கத்தினாள். அவனுடைய உருமாற்றத்திற்குப் பிறகு அவள் அவனிடம் நேரிடையாகப் பேசியது இதுதான் முதல்தடவை. தன் அம்மாவை மயக்கத்திலிருந்து எழுப்புவதற்காக ஒரு வாசனை திரவியத்தை எடுக்கவேண்டி அடுத்த அறைக்கு அவள் ஓடினாள். அந்தப் படத்தைக் காப்பாற்றிக்கொள்ள இன்னும் அவகாசம் இருந்ததால் க்ரகரும் தன் தங்கைக்கு உதவ விரும்பினான். ஆனால் கண்ணாடியோடு இறுக ஒட்டிக்கொண்டதால் அதிலிருந்து தன்னைப் பிய்த்துக்கொள்ள அவன் சிரமப்பட வேண்டியிருந்தது. முன்பெல்லாம் செய்ததுபோல தன் தங்கைக்கு அறிவுரை சொல்லமுடியும் என்பதுபோல அவன் அவள் பின்னால் அடுத்த அறைக்கு

ஓடினான்; ஆனால் அவள் பின்னால் செயலற்று நிற்கவேண்டியிருந்தது; இதற்கிடையில் அவள் பலவிதமான சிறிய பாட்டில்களுக்கிடையே சிலதைத் தேடி எடுத்துத் திரும்பியபோது அவனைப் பார்த்துத் திகிலடைந்தாள்; ஒரு பாட்டில் கீழே விழுந்து நொறுங்கியது; ஒரு கண்ணாடிச் சில்லு க்ரகரின் முகத்தை வெட்டியதோடு எரிச்சலை உண்டாக்கும் ஒரு வகையான மருந்து அவன் உடல்மீது தெறித்தது; ஒரு விநாடியும் தாமதிக்காமல், தன்னால் எடுத்துச் செல்லமுடிகிற அளவுக்கு பாட்டில்களை சேகரித்துத் தூக்கிக்கொண்டு க்ரீட் அவளுடைய அம்மாவிடம் ஓடினாள்; தன் காலாலேயே அறைக்கதவை பலத்த சத்தத்துடன் அறைந்து சாத்தினாள். அவன் காரணமாக அநேகமாக இறந்து கொண்டிருக்கும் அவனுடைய அம்மாவிடமிருந்து க்ரகர் இப்போது பிரிக்கப்பட்டுவிட்டான். அம்மாவுடன் இருக்கவேண்டிய தன் தங்கையை பயமுறுத்தி விரட்டி விடுவோமோ என்ற பயம் காரணமாக கதவைத் திறக்க க்ரகருக்கு மனமில்லை. காத்திருப்பதைத் தவிர செய்ய அவனுக்கு எதுவுமில்லை. சுயவெறுப்பாலும் கவலையாலும் அலைக்கழிக்கப்பட்ட அவன் சுவர்கள், அறைக்கலன்கள், கூரை என்று எல்லாவற்றின் மீதும் முன்னும் பின்னும் ஊர ஆரம்பித்தான். இறுதியாக அந்த முழு அறையும் தன்னைச் சுற்றிச் சுழல்வதுபோலத் தோன்றியபோது, துக்கத்தினால் பெரிய மேஜையொன்றின் நடுப்பகுதிமீது மேலிருந்து விழுந்தான். சிறிது நேரம் கழிந்தது; க்ரகர் வலுவற்றுத் தளர்ந்துபோய் இன்னும் படுத்துக்கிடந்தான்; சுற்றியுமிருந்த அமைதி ஒருவேளை நல்ல அறிகுறியாகவுமிருக்கலாம். வாசல்மணி ஒலித்தது. வேலைக்காரச் சிறுமி சமையலறையில் வைத்து பூட்டப்பட்டிருப்பதால் க்ரீட்டே கதவைத் திறக்க வேண்டியிருந்தது. வந்தது அவளுடைய அப்பா. ‘‘என்ன நடந்து கொண்டிருக்கிறது?’’ என்பதுதான் அவருடைய முதல் கேள்வி. க்ரீட்டினுடைய முகம் அவருக்கு எல்லாவற்றையும் சொல்லியிருக்க வேண்டும். தன்னுடைய முகத்தை அவருடைய மார்பில் மறைத்துக்கொண்டு அடங்கிய குரலில் பதில் சொன்னாள்: ‘‘அம்மா மயக்கமாயிருந்தாள். ஆனால் இப்போது தேவலை. க்ரகர் கட்டுப்பாடில்லாமல் திரிகிறான்!’’. ‘‘நான் எதிர்பார்த்ததுதான் நடந்திருக் கிறது. ஆனால் நீயும் உன் அம்மாவும்தான் நான் சொன்னதைக்கேட்கவில்லை,’’ என்றார் அவர். க்ரீட்டினுடைய மிகச்சிறிய பதிலுக்கு மிகமோசமான

அர்த்தத்தை அவனுடைய அப்பா கொடுத்துவிட்டார் என்பதும் தான் ஏதோ ஒரு வன்முறைச் செயலை செய்துவிட்டதாக அவர் கருதிக்கொண்டிருக்கிறார் என்பதும் க்ரகருக்குத் தெளிவாகப் புரிந்தன. விளக்கம் சொல்வதற்கு அவனுக்கு வழியும் நேரமும் இல்லாததால் க்ரகர் இப்போது அவனுடைய அப்பாவின் கோபத்தைத் தணிக்க முயலவேண்டும். கூடத்திலிருந்து அவனுடைய அப்பா உள்ளே வந்ததும், துரத்தப்படாமலேயே தன்னுடைய அறைக்குள் உடனடியாக நுழைந்துவிடும் நல்லெண்ணம் தன்னுடைய மகனுக்கு இருப்பதை அவர் அறியவேண்டும் என்பதற்காக க்ரகர் தன்னுடைய அறைக்கதவுக்கு ஓடி அதோடு தன்னை இறுகப் பொருத்திக்கொண்டான். ஆனால் கதவு திறக்கப்பட்டால்தான் அவனால் உடனடியாக மறையமுடியும்.

இவ்வளவு நுணுக்கமான வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளும் மனநிலையில் அவனுடைய அப்பா இல்லை. உள்ளே வந்ததும் கோபமும் பதற்றமும் தொனிக்க ‘ஆ!’ என்று அலறினார். க்ரகர் கதவிலிருந்து தன் தலையைப் பின்னுக்கிழுத்து, அண்ணாந்து அவனுடைய அப்பாவைப் பார்த்தான். தான் கற்பனை பண்ணியிருந்த அப்பா உண்மையில் இவர் இல்லை. கூரையில் அங்குமிங்கும் ஊர்ந்து செல்லும் பொழுதுபோக்கில் இருந்த அதே அளவு ஆர்வத்தை வீட்டில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதில் அவன் காட்டவில்லை என்பதால் அவன் சில மாற்றங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். இருந்தும், அது அவனுடைய அப்பாவாக இருக்க முடியுமா? க்ரகர் வியாபார நிமித்தமாக பிரயாணங்களைத் தொடங்கும்போதெல்லாம் படுக்கையில் சோர்ந்துபோய் படுத்துக்கிடந்தவரா இந்த மனிதர்? அவன் மாலையில் வீடு திரும்பும்போது வெறும் மேலங்கியோடு பெரிய நாற்காலியொன்றில் படுத்தவாறு அவனை வரவேற்றவரா இந்த மனிதர்? எழுந்து நிற்கமுடியாமல் கைகளை மட்டும் உயர்த்தி வாழ்த்துச் சொன்னவரா இந்தமனிதர்? நீண்ட விடுமுறையின் ஞாயிற்றுக்கிழமைகளில் அபூர்வமாக அவர்கள் வெளியே போகும்போது, சாதாரணமாகவே மெதுவாக நடக்கும் க்ரகருக்கும் அவனுடைய அம்மாவுக்கும் இடையில் ஒரு பழைய சாம்பல்வண்ணக் கோட்டை அணிந்துகொண்டு அவர்களைவிட மெதுவாக ஒவ்வொரு காலடியையும் மிகுந்த எச்சரிக்கையுடன் கைத்தடியின் உதவியோடு எடுத்துவைத்து நடந்தவரும் ஏதாவது சொல்ல விரும்பியபோதெல்லாம்

நடப்பதை நிறுத்திவிட்டு உடன் வருபவரை அருகே அழைத்துப் பேசியவரும் இந்த மனிதர்தானா? இப்போது அவர் அங்கே அற்புதத் தோற்றத்தில் நின்றுகொண்டிருக்கிறார். வங்கிகளில் பணியாற்றும் தகவல் சிப்பந்திகள் அணிவதைப்போன்று தங்கப் பொத்தான்களுடன் கூடிய நேர்த்தியான நீலவண்ணச் சீருடை அணிந்திருந்தார். அவருடைய ஜாக்கெட்டின் உயர்ந்த, விறைப்பான கழுத்துப்பட்டி மீது அவருடைய வலிமையான, இரட்டைநாடித் தாடை பிதுங்கி நின்றது. அடர்த்தியான புருவங்களின் கீழிருந்து அவருடைய கடுமையான கண்கள் துளைக்கும் பார்வையை எறிந்துகொண்டிருந்தன. ஒரு காலத்தில் தாறுமாறாக இருந்த அவருடைய வெள்ளைத் தலைமயிர், துல்லியமான நடுவகிடெடுத்து பளபளப்புடன் அழுந்த வாரப்பட்டிருந்தது. தங்க இலச்சினை ஒன்று பொருத்தப்பட்ட — அநேகமாக அது ஒரு வங்கியினுடையதாக இருக்கலாம் — தன் தொப்பியை அறையின் ஒரு மூலையி லிருந்த சோஃபாவின் மீது தூக்கியெறிந்துவிட்டு, ஜாக்கெட்டின் வால்முனைகளைப் பின்புறம் தள்ளிவிட்டுக் கொண்டும் கைகளை காற்சட்டையின் பைகளில் விட்டுக்கொண்டும் இறுக்கமான முகத்துடன் க்ரகரை நோக்கி நடந்தார். என்ன செய்யப்போகிறார் என்பது அவருக்கே தெரியாதது மாதிரி தோன்றியது. வழக்கத்துக்கு மாறாக அவர் கால்களை உயர்த்திவைத்து நடந்தார். அவருடைய பாதணிகளின் கீழ்ப்பாகங்களுடைய பிரம்மாண்ட அளவைப் பார்த்து க்ரகர் வாயடைத்துப்போனான். அவனுடைய உருமாற்றத்தின் முதல் நாளிலிருந்தே அவனைக் கட்டுப்படுத்த கடுமையான வழிமுறைகளே ஏற்றவை என்று அவர் நம்பியிருந்தது அவனுக்குத் தெரியும் என்பதால் அவருக்கு முன்னால் நிற்கும் தைரியம் அவனுக்கில்லை. எனவே அவர் நின்றால் நின்றும், அவர் நகர ஆரம்பித்தால் தப்பி ஓடவும் செய்தான். எந்தத் தீர்மானமான சம்பவமும் நடைபெறாமல் அவர்கள் அந்த அறையைப் பலமுறை சுற்றிவந்தார்கள். இந்தச் சுற்றல் மிக மெதுவாக நடந்ததால் அது ஒரு துரத்தல் மாதிரியே தோன்றவில்லை. சுவர்களிலோ கூரையிலோ ஏறினால் அதை ஓர் அவக்கேடான செயலாக அவர் எடுத்துக்கொள்ளக்கூடும் என்று பயந்து க்ரகர் தரையை விட்டு அகலவேயில்லை. இப்படியே மெதுவாகச் சுற்றிவந்தும் கூட அவனால் நீண்டநேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஏனென்றால் அவனுடைய அப்பாவின் ஒவ்வொரு காலடிக்கும் அவன் ஒரு

சங்கிலித்தொடரான இயக்கங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதற்கிடையில் அவனுக்கு மூச்சு இரைக்க ஆரம்பித்துவிட்டது. அவனுடைய பழைய வாழ்க்கையிலேயே அவனுடைய நுரையீரல்கள் அவ்வளவு ஆரோக்கியமாக இருக்கவில்லை. ஓடுவதிலேயே தன் சக்தியை ஒருமுகப்படுத்தியும் தலைக்கிறக்கத்துடன் தள்ளாடியும் அவன் ஓடிக்கொண்டிருந்தான். கண்களைத் திறந்து வைத்திருக்க முடியவில்லை. உணர்வு மங்கிய நிலையில் முன்னோக்கி ஓடுவதைத் தவிர வேறு எந்த விதத் தப்பித்தலையும் அவனால் யோசிக்க முடியவில்லை. குமிழ்களும் பிளவுகளும் நிரம்பியவையும் அழகாக செதுக்கப்பட்டவையுமான மரத்தாலான அறைக்கலன்களின் நெருக்கத்திலிருந்த சுவர்கள் தனக்கு விடுதலை அளிக்கும் என்பதை அநேகமாக மறந்துவிட்டு அவன் ஓடிக்கொண்டிருந்தான். லேசாகத் தூக்கியெறியப்பட்ட ஏதோ ஒரு பொருள் அவனுக்குப் பின்புறம் விழுந்து அவனுக்கு முன்னால் உருண்டோடியது. அது ஓர் ஆப்பிள். உடனடியாக இரண்டாவது ஆப்பிள் அதைத் தொடர்ந்தது. பீதியில் க்ரகர் நின்றுவிட்டான். அவனைத் தாக்குவதற்கு அவனுடைய அப்பா தீர்மானித்து விட்டபோது தொடர்ந்து ஓடுவதில் அர்த்தமில்லை. சமையலறை அடுக்கிலிருந்த வட்டிலிலிருந்து பழங்களையெடுத்து தன் சட்டைப்பைகளில் நிரப்பிக்கொண்டு இப்போது ஒவ்வொன்றாக அவனுடைய அப்பா எறிந்துகொண்டிருந்தார். ஆனால் குறி பார்த்து எறிவதில் அவர் கவனம் கொள்ளவில்லை. காந்தசக்தியால் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதைப் போல சிறிய, சிவந்த ஆப்பிள்கள் தரையெங்கும் உருண்டோடின. அதிக விசையுடன் எறியப்படாத ஆப்பிள் ஒன்று க்ரகரின் முதுகை உரசி விட்டு எந்த ஆபத்தையும் விளைவிக்காமல் தெறித்தோடியது. ஆனால் உடனடியாக எறியப்பட்ட மற்றொன்று அவன் முதுகுமீது நேராக விழுந்து அமிழ்ந்தது. இதனால் உண்டான தாங்கமுடியாத கடும் வலியைத் அதே இடத்தில் தன்னால் விட்டுவிட்டுப் போய்விடமுடியும் என்பதைப்போல க்ரகர் தன் உடலை முன்னோக்கி இழுத்துச்செல்லப் பிரயாசைப்பட்டான். ஆனால் ஆணியால் அறையப்பட்டதைப்போல, உணர்வுகளெல்லாம் முழுக்க சிதைந்த நிலையில் உடலைச் சமதளத்தில் பரப்பியபடி அதே இடத்தில் அவன் கிடக்க நேர்ந்தது. சுயஉணர்வை இழக்கும் முன் கடைசியாக அவன் பார்த்த பார்வையில், அலறிக்கொண்டிருந்த

அவனுடைய தங்கைக்கு முன்பாக அவனுடைய அறைக்கதவை வீசித் திறந்துகொண்டு அம்மா ஓடிவந்தது பட்டது. சுலபமாக மூச்சுவிடவும் மயக்கத்திலிருந்து விடுபடவும் அவனுடைய அம்மாவின் உடைகளை க்ரீட் தளர்த்திவிட்டிருந்ததால் அவள் ஓடியபோது அவளுடைய ஆடைகள் ஒவ்வொன்றாக நழுவிவிழ அவற்றை மிதித்துக்கொண்டே நேராக அவனுடைய அப்பாவிடம் ஓடிவந்து அவரை இறுக அணைத்து, அவருடைய கழுத்தைத் தன் கைகளால் வளைத்துப் பிடித்துத் தன் மகனுடைய உயிருக்காக மன்றாடினாள். இந்த நேரத்தில் க்ரகரின் பார்வை மங்கத் தொடங்கியது.

3

க்ரகருக்கு ஏற்பட்ட பலத்த காயம் அவனை ஒரு மாதத்துக்கு முடக்கிவிட்டது. அவன் முதுகின் மீது விழுந்து பதிந்து போயிருந்த ஆப்பிளை எடுக்க யாருக்கும் துணிவில்லை. அது அவனுடைய ஊனத்துக்குப் பார்வையில் படும் ஒரு நினைவூட்டலாக இருந்தது. க்ரகரின் இப்போதைய துரதிருஷ்டவசமான, அருவருப்பான உருவத்தையும் மீறி அவனும் குடும்பத்தின் உறுப்பினராக ஒரு காலத்தில் இருந்தவன்தான் என்ற உண்மையை அவனுடைய ஊனம் அவனுடைய அப்பாவுக்கு உணர்த்தியது. அவனை ஓர் எதிரிபோல நடத்தக்கூடாது என்பதையும், மாறாக, வெறுப்பை அடக்கிக்கொள்ளுதலும் மிகுந்த பொறுமையைக் கைக்கொள்ளுதலும் இப்போதைய குடும்பக் கடமைகள் என்பதையும் அவர் உணர்ந்தார்.

அவனுக்கு ஏற்பட்டிருந்த காயம் அவனுடைய இயங்கு சக்தியை, அநேகமாக நிரந்தரமாக சேதப்படுத்திவிட்டது. இப்போது அறையின் குறுக்காக நகர்ந்து செல்ல — ஒரு வயோதிகமான ஊனமுற்றவனைப் போல — அவனுக்கு நீண்டநேரம் தேவைப்பட்டது. சுவரில் ஏறுவது என்பதே சாத்தியமில்லாமல் போய்விட்டது. ஆனால் இந்தக் குறை வேறொரு வழியில் ஈடுகட்டப்பட்டுவிட்டதாக அவன் கருதினான். மாலை நேரங்களில் கூடத்தின் கதவுகள் திறந்தே இருந்ததால் தன்னுடைய அறையின் இருட்டில் இருந்துகொண்டு அந்த அறையின் மேஜை விளிக்கொளியில் மற்றவர்கள் பேசுவதைக் கேட்கவும் பார்க்கவும் அவனால் முடிந்தது. முன்பு நிகழ்ந்த ஒட்டுக்கேட்டலிலிருந்து இது வேறுபட்டது என்பது பொதுவாக உணரப்பட்டது.

வியாபாரப் பிரயாணங்களின் போது இரவு நேரங்களில் சிறிய விடுதி அறைகளின் குளிர்ந்த படுக்கையில் சோர்வுடன் படுத்துக்கொண்டு அவன் அசைபோடும் உற்சாகமான உரை யாடல்களாக இப்போதைய பேச்சுகள் இல்லை. பெரும்பாலும் அவை மௌனமாகவே இருந்தன. இரவு உணவுக்குப்பின் அவனுடைய அப்பா தன் நாற்காலியில் உட்கார்ந்தபடியே தூங்கிவிடுவார். அமைதி காக்கும்படி அவனுடைய அம்மாவும் தங்கையும் ஒருவரையொருவர் எச்சரித்துக்கொள்வார்கள். விளக்கருகில் குனிந்துகொண்டு அவனுடைய அம்மா ஓர் உள்ளாடை நிறுவனத்துக்காக நுணுக்கமான கைத்தையல் வேலை செய்துகொண்டிருப்பாள். விற்பனையாளர் வேலை

ஒன்றை ஏற்றுக்கொண்ட அவனுடைய தங்கை தன்னை மேம் படுத்திக்கொள்வதற்காக மாலை வேளைகளில் சுருக்கெழுத்தும் பிரெஞ்சு மொழியும் கற்றுக்கொண்டிருந்தாள். சில சமயங்களில் அவனுடைய அப்பா தூக்கத்திலிருந்து விழித்து தூங்கிக் கொண்டிருந்ததையே மறந்தவர்போல அவனுடைய அம்மாவிடம், ‘இன்றைக்கென்ன இவ்வளவு தையல் வேலை செய்கிறாய்!’ என்று சொல்லிவிட்டு மீண்டும் உடனே தூங்கிவிடுவார். பெண்களும் ஒரு அலுப்பான சிரிப்பைப் பரிமாறிக்கொள்வார்கள்.

வீட்டிற்குள்ளேயும் எப்போதும் சீருடை அணிவது என்ற வழக்கத்தை அவனுடைய அப்பா பிடிவாதத்துடன் மேற்கொண்டிருந்தார். அவருடைய மேலங்கி உபயோகமின்றி உடைகள் மாட்டும் முனையில் தொங்கிக்கொண்டிருந்தது. அவருடைய அதிகாரி கூப்பிட்ட மாத்திரத்தில் சேவை மேற்கொள்ளத் தயாராக இருப்பவரைப்போல முழுச்சீருடை அணிந்துகொண்டு உட்கார்ந்த இடத்திலேயே தூங்கினார். இதன் காரணமாக — ஆரம்பத்திலேயே புதிதாக இல்லாத அதை சுத்தமாக வைத்திருக்க அம்மாவும் தங்கையும் அக்கறையுடன் முயன்றும் — அது அழுக்கடைந்த தோற்றம் கொண்டிருந்தது. மெருகூட்டப்பட்ட, ஒளிவீசும் தங்கப் பித்தான்களையுடைய அவருடைய சீருடையின் மீதிருந்த பல எண்ணெய்க் கறைகளைப் பார்த்துக்கொண்டே க்ரகர் பல மாலைவேளைகளைக் கழித்தான். முதியவர் அசௌகரியமாக உட்கார்ந்தபடி அதே சமயம் அமைதியாகவும் தூங்கிக்கொண்டிருந்தார்.

பத்து மணி அடித்தவுடன் அவனுடைய அம்மா மென்மை யான வார்த்தைகள் சொல்லி அவனுடைய அப்பாவை எழுப்பவும் அதன்பிறகு படுக்கைக்குப்போக அவரை இணங்கவைக்கவும் முயன்றாள். நாற்காலியில் சரியாகத் தூங்கமுடியாதென்றும் காலை ஆறு மணிக்கு அவர் வேலைக்குக் கிளம்ப நல்ல தூக்கம் தேவை என்றும் அவள் சொன்னாள். வங்கியில் தகவல் சிப்பந்தி ஆன பிறகு அவரிடம் படிந்துவிட்ட பிடிவாதத்துடன் அவர் நாற்காலியிலேயே நீண்டநேரம் இருப்பேன் என்று அடம் பிடித்தார். அடிக்கடி தூங்கிவிழுந்த அவரை கடைசியாக மிகுந்த சிரமத்திற்குப் பிறகே படுக்கைக்கு இட்டுச்செல்ல முடிந்தது. க்ரகரின் அம்மாவும் தங்கையும் எத்தனைமுறை மென்மையாக வற்புறுத்தினாலும், கண்களை மூடிக்கொண்டு கால் மணி

நேரத்துக்குத் தலையை ஆட்டிக்கொண்டே எழுந்து நிற்க மறுத்தார். அவருடைய காதில் அவனுடைய அம்மா அன்பான வார்த்தைகளை முணுமுணுத்தபடி அவருடைய சட்டையின் கைப்பகுதியைப் பிடித்து இழுத்தாள். க்ரகரின் தங்கை தன்னுடைய பாடங்களை விட்டுவிட்டு தன் அம்மாவின் உதவிக்கு வந்தாள். ஆனாலும், அவரை எழுப்ப முடியவில்லை. அவர் நாற்காலியில் மேலும் சௌகரியமாக சரிந்து உட்கார்ந்தார். இரண்டு பெண்களும் அவரை அக்குளில் பிடித்துத் தூக்கி நிறுத்திய பின்தான் அவர் கண்களைத் திறந்து இருவரையும் பார்த்து வழக்கமாக சொல்வதைச் சொன்னார்: ''இது ஒரு வாழ்க்கை. என் வயோதிகத்தின் அமைதியும் சாந்தமும் இதுதான்.'' இரண்டு பெண்களின்மீதும் சாய்ந்துகொண்டு தனக்குத்தானே ஒரு பெரிய பாரம் என்பதைப்போல சிரமப்பட்டு தன்னைத்தானே தூக்கிக்கொண்டார். கதவுவரை அவர்களின் உதவியுடன் நடந்துவிட்டு அவர்களைப் போய்விடும்படி சைகை செய்துவிட்டு தனியே போக ஆரம்பித்தார். அம்மா தன் கைத்தையலையும் தங்கை தன் பாடங்களையும் விட்டுவிட்டு அவருக்குப் பின்னால் ஓடி அவர் நடக்க உதவினார்கள்.

க்ரகருக்கான அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதைத் தவிர அவனைப் பற்றிக் கவலைப்பட உழைத்துச் சோர்ந்த அந்த குடும்பத்தில் யாருக்கு நேரமிருக்கிறது? குடும்ப அமைப்பு மேலும் மேலும் சிறிதானது. வேலைக்காரச் சிறுமி பணியிலிருந்து நிறுத்தப்பட்டாள். தலையைச் சுற்றி வெள்ளைமுடி பறந்துகொண்டிருக்கும் உயரமான ஒல்லியான ஒரு வேலைக்காரி காலையும் மாலையும் வந்து கடினமான வேலைகளைச் செய்தாள். மீதி எல்லா வேலைகளையும் க்ரகரின் அம்மாவே, குவியல் குவியலாகத் தைத்துக்கொண்டே, செய்தாள். முன்பெல்லாம் அம்மாவும் பெண்ணும் விருந்துகளுக்கும் விழாக்களுக்கும் பெருமிதத்துடன் அணிந்துசென்ற நகைகளைக்கூட விற்க வேண்டியதாயிற்று. ஒரு நாள் மாலை விற்பனையில் கிடைத்த பணத்தைப் பற்றி அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்ததைக் கேட்டு க்ரகர் இவ்விஷயத்தைத் தெரிந்து கொண்டான். ஆனால், எல்லாவற்றையும்விட அவர்கள் அதிகம் துக்கப்பட்டது, இப்போதைய அவர்களின் தேவைக்கு மிகப்பெரிதாக இருந்த வீட்டைக் காலி செய்ய முடியாத நிலையைப் பற்றித்தான். க்ரகரை வேறு இடத்துக்கு கொண்டுசெல்ல

முடியாததுதான் இதற்குக் காரணம். இருந்தும், அவன் மீது அவர்களுக்கிருந்த அக்கறையே வீடு மாற்றுவதற்குப் பிரதானத் தடையாக இருந்தது என்பதை க்ரகரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் காற்றுத் துளைகள் உண்டாக்கப்பட்ட ஒரு பொருத்தமான பெட்டியில் அவனை எளிதாக எடுத்துச்சென்றிருக்கலாம். அவர்களுக்கிருந்த அவநம்பிக்கையும் அவர்களுடைய உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ எப்போதும் ஏற்பட்டிராத ஒரு பெரும் அவலம் அவர்களுக்கு மட்டுமே உண்டாகிவிட்டது என்ற வருத்தமும்தான் அவர்களை இடம் மாறுவதற்கு அனுமதிக்கவில்லை. ஏழை மக்களிடம் உலகம் நிர்ப்பந்தித்துப் பெறும் எல்லாவற்றையும் அவர்கள் அதிகபட்சமாகச் செய்தார்கள். வங்கியிலிருந்த கீழ்நிலை எழுத்தர்களுக்கு க்ரகரின் அப்பா காலை உணவு வாங்கி வந்து கொடுத்தார்; அம்மா தன் சக்தி முழுக்கச் செலவழித்து முகந்தெரியாதவர்களுக்கு உள்ளாடைகள் தைத்தாள்; தங்கை வாடிக்கையாளர்களின் தேவைகளுக்காக கவுண்ட்டருக்குப் பின்னால் ஓயாமல் நடந்தாள். ஆனால் மூன்று பேருக்குமே இவற்றைச் செய்யும் பலமும் இல்லையென்பதுதான் எல்லாவற்றையும்விட கொடுமையானது. க்ரகரின் முதுகில் ஏற்பட்ட காயம் மீண்டும் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. முதியவரைப் படுக்கவைத்த பிறகு அம்மாவும் பெண்ணும் திரும்பி வந்து, வேலையை அப்படியே போட்டுவிட்டு கன்னங்கள் உரச நெருங்கி உட்கார்ந்துகொண்டார்கள். அவனுடைய அறையைச் சுட்டிக்காட்டி அம்மா சொன்னாள்: ‘க்ரீட், இப்போது கதவைச் சாத்து.’ அவன் மீண்டும் இருளில் விடப்பட்டான். அடுத்த அறையில் பெண்கள் இருவரும் கண்ணீர் வழிய அழுதார்கள்; அல்லது, ஒருவேளை உலர்ந்த கண்களுடன் மேஜையை வெறித்துநோக்கியும் உட்கார்ந்திருக்கலாம்.

இரவு, பகல் எப்போதுமே க்ரகர் சரியாகத் தூங்கவில்லை. அடுத்த முறை அறைக்கதவு திறந்தவுடன் முன்பு நடந்ததைப் போலவே வீட்டு நிர்வாகத்தைத் தன் கைகளில் மீண்டும் எடுத்துக்கொள்வோம் என்ற எண்ணம் அவனுக்கு அடிக்கடி தோன்றியது. அவனுடைய எண்ணங்களில், இந்த நீண்ட இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் நிறுவனத் தலைவர், தலைமை எழுத்தர், வியாபாரப் பிரதிநிதிகள், தொழில் பயில்வோர், வெகுளியான சுமைதூக்கி, மற்ற நிறுவனங்களிலிருந்த ஓரிரு நண்பர்கள், கிராமப்புற ஹோட்டல் ஒன்றில் வேலை

செய்யும் ஒரு பணிப்பெண், இவன் உண்மையாக, ஆனால் மிக நிதானமாகக் காதலித்த, பெண்களுக்கான தொப்பிகள் விற்கும் ஒரு கடையின் காசாளர் — இது இனிமையான, கணநேரத்தில் மறைந்த ஒரு நினைவு — ஆகியோரின் உருவங்கள் தோன்றின. இவர்களோடு அவன் மறந்துபோன சிலரும் தோன்றினார்கள். அவர்களிட மிருந்து அவன் எந்த உதவியையும் பெற முடியாது; அவர்கள் அவனால் அணுகமுடியாத நிலையிலிருந்தனர்; அவர்களின் உருவங்கள் மறைந்து போனபோது அவன் மகிழ்ச்சியடைந்தான். மற்ற சமயங்களில் தன் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படும் மனநிலையில் அவன் இருக்கமாட்டான். அவர்கள் தன்னைப் புறக்கணிக்கும் விதம் பற்றி மிகுந்த கோபமடைந்தான். பசிக்காத நேரத்தில்கூட, தனக்கு என்ன சாப்பிடப் பிடிக்கும் என்றுதெளிவாகத் தெரியாதபோதுகூட தனக்குரிய பங்கை உணவு வைக்கப்படும் அலமாரியிலிருந்து எடுக்கத் திட்டங்கள் போடுவான். அவனுக்குப் பிடித்தமான உணவை அவனுக்கு வைப்பதில் க்ரீட் காட்டிய அக்கறை நின்றுபோயிற்று. காலையிலும் நண்பகலிலும் வேலைக்குப் போகும் அவசரத்தில் கிடைத்த உணவை அவனுடைய அறைக்குள் தன் காலால் தள்ளினாள். அவ்வுணவை அவன் சாப்பிட்டானா அல்லது அடிக்கடி நடப்பதுபோல அதை அவன் தொடவேயில்லையா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் மாலையில் துடைப்பத்தின் ஒரே வீச்சில் சுத்தப்படுத்தினாள். மாலை வேளைகளில் அவனுடைய அறையைச் சுத்தப்படுத்துவதை அவளைவிட யாரும் வேகமாகச் செய்துவிடமுடியாது. சுவர்களை ஒட்டி அழுக்குக்கோடுகளும் அங்குமிங்குமாகக் கழிவும் குப்பையும் அறை முழுக்கப் பரவியிருந்தன. ஆரம்பத்தில் அவனுடைய தங்கை சுத்தம் செய்ய வரும்போதெல்லாம் மிகவும் அழுக்காயிருந்த ஒரு மூலையில் தன்னை இருத்திக்கொள்வான். அவள் ஒழுங்காக சுத்தம் செய்யவில்லை என்பதைக் குத்திக்காட்டுவதே அவனுடைய நோக்கம். ஆனால் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் வாரக்கணக்கில் அவன் அங்கு உட்காரவேண்டியிருந்தது. அவன் பார்த்ததுபோலவே அவளும் அழுக்கையும் கழிவையும் பார்த்தாள். ஆனால் அவற்றை அப்படியே விட்டுவிடத் தீர்மானித்திருந்தாள். இருந்தாலும், குடும்பத்தையே பீடித்திருந்த சிடுசிடுப்புடன் — ஆனால் அவளுக்கு அது புதிது —க்ரகரின் அறைக்கு ஒரே பொறுப்பாளி என்ற தன் உரிமையை, அது

பறிபோய்விடுமோ என்ற பயத்துடன் பாதுகாத்தாள். ஒருமுறை அவனுடைய அம்மா பல வாளிகள் தண்ணீர்விட்டு அவனுடைய அறையை முழுக்க சுத்தம் செய்ய ஏற்பாடு பண்ணினாள். அந்த ஈரமும் தண்ணீரும் அவனை நிலைதடுமாறச் செய்தன. பிணங்கிக்கொண்டு சோஃபாவின் மீது கால்களைப் பரப்பியபடி அசைவின்றிப் படுத்திருந்தான். அறையைச் சுத்தம் செய்ததற்காக அவனுடைய அம்மாவுக்கு சரியான தண்டனையும் கிடைத்தது. அவனுடைய அறையில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை அன்று மாலை கவனித்த அவனடைய தங்கை உடனே கடுங்கோபத்துடன் கூடத்துக்கு ஓடி, உயர்த்திய கைகளுடன் மன்றாடிய அம்மாவைப் பொருட்படுத்தாமல் வெடிச்சீறலுடன் அழுதாள். அவளுடைய அப்பா அதிர்ச்சியால் நாற்காலியை விட்டு எழுந்தார். அம்மாவும் அப்பாவும் முதலில் என்ன செய்வதென்று தெரியாத குழப்பத்தில் வெறுமனே பார்த்திருந்தார்கள். பிறகு அவர்களும் செயல்பட ஆரம்பித்தார்கள். க்ரகரின் அறையைச் சுத்தம் செய்யும் வேலையை க்ரீட்டிடம் ஏன் விடவில்லையென்று அவனுடைய அம்மாவை அப்பா கடிந்துகொண்டார். க்ரகரின் அறையை சுத்தம்செய்ய அவனுடைய அம்மா அனுமதிக்கப்படமாட்டாள் என்று க்ரீட்டைப் பார்த்துக் கத்தினார். பதற்றத்தில் நிலைகுலைந்துபோன அவரைப் படுக்கையறைக்கு இழுத்துச்செல்ல அவனுடைய அம்மா முயன்றாள். தேம்பி அழுததால் க்ரீட்டின் உடல் நடுங்கியது. தன் சிறிய முஷ்டிகளால் மேஜையைக் குத்தினாள். அந்தக் கோபாவேசமான காட்சியிலிருந்தும் கூச்சலிலிருந்தும் அவனைக் காப்பாற்றும் பொருட்டு அவனுடைய அறைக்கதவை மூடிவைக்க யாருக்கும் தோன்றாததால் க்ரகர் கோபத்துடன் ‘உஸ்’ என்று உரக்க சத்தமிட்டான்.

அன்றாட வேலைப்பளுவின் அசதி காரணமாக க்ரகரைமுன்புபோல கவனிக்க க்ரீட்டால் முடியவில்லையென்றாலும்கூட அவனுடைய அம்மாவின் தலையீட்டிற்கோ அவனைப் புறக்கணிப்பதற்கோ எவ்விதக் காரணமுமில்லை. வயோதிக விதவையான வேலைக்காரிக்கு நீண்ட, அவலமான வாழ்க்கைக்கு ஈடுகொடுக்கும் உறுதியான உடலிருந்தும் க்ரகரைப் பார்த்து அதிர்ச்சியுடன் கூடிய வெறுப்பு கொண்டாள். ஒருமுறை எந்தவித ஆர்வமுமின்றித் தற்செயலாக அவள் க்ரகரின் அறைக்கதவைத் திறந்து அவனைப் பார்த்து கைகளைக் கட்டிக்கொண்டு வெறுமனே நின்றாள். அவளுடைய இந்தச் செய்கையால்

அதிர்ச்சியடைந்த க்ரகர், யாரும் துரத்தாமலேயே முன்னும் பின்னுமாக ஓட ஆரம்பித்தான். அன்றிலிருந்து காலையிலும் மாலையிலும் அவனுடைய அறைக்கதவை லேசாக திறந்து ஒரு கணம் அவனைப் பார்க்க அவள் தவறியதேயில்லை. ஆரம்பத்தில் அவனைத் தன் அருகே வரச்சொல்லி, ‘இங்கே வா, சாண வண்டே!’ என்றோ ‘அந்தச் சாண வண்டைப் பார்,’ என்றோ நட்பை வெளிப்படுத்தும் கொஞ்சலான சொற்கள் என்று தான் நம்பும் வார்த்தைகளில் பேசுவாள். இம்மாதிரியான நலமான வார்த்தைகளுக்கு க்ரகர் எவ்வித எதிர்வினையும் காட்டாமல் தன்னுடைய அறைக்கதவே திறக்கப்படவில்லை என்பதுபோல இருந்த இடத்திலேயே அசையாமல் நிற்பான். விரும்பியபோதெல்லாம் முட்டாள்தனமாக க்ரகரை அவள் தொல்லைப்படுத்தியதற்குத் தண்டனைபோல அவன் அறையை தினசரி சுத்தம் செய்யவேண்டும் என்று அவளுக்கு ஆணையிட்டிருக்க வேண்டும். ஒரு நாள் அதிகாலையில் — வசந்தம் வருவதற்கு அறிகுறி என்பதுபோல கனமழை ஜன்னல்களில் வீசியடித்துக் கொண்டிருந்தது — அவள் க்ரகரைப் பார்த்துப் பேசியபோது அவன் கடுமையாக எரிச்சலுற்று அவளைத் தாக்குவதுபோல அவளை நோக்கி ஓடினான். ஆனாலும், மெதுவாகவும் மென்மையாகவும்தான் ஓடினான். பயப்படுவதற்குப் பதிலாக அவள் திறந்த வாயுடன் கதவின் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியைத் தூக்கி க்ரகரின்மீது எறிபவளைப் போல, அதன் பிறகே தன் வாயை மூடப்போவது போல நின்றாள். க்ரகர் திரும்பி நகர்ந்ததும், ‘பக்கத்தில் வரமாட்டாய் இல்லையா?’ என்று சொல்லிவிட்டு அமைதியாக நாற்காலியை மூலையில் வைத்தாள்.

க்ரகர் இப்போது அநேகமாக எதுவும் சாப்பிடுவதில்லை. அவனுக்காக வைக்கப்படும் உணவைக் கடந்துசெல்லும்போது பொழுதுபோக்கு என்பதுபோல ஒரு சிறு துணுக்கை எடுத்து அதை ஒரு மணி நேரம் போல வாயில் வைத்திருந்துவிட்டு மீண்டும் அதை வெளியே துப்பினான். தன் அறை இருந்த நிலையால் உண்டான ஏமாற்றமும் எரிச்சலுமே தான் சாப்பிடாததற்குக் காரணம் என்று ஆரம்பத்தில் அவன் நினைத்தான். இருந்தும், தன் அறையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு விரைவிலேயே தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டான். ஒரு அறையை மூன்று குடித்தனக்காரர்களுக்கு வாடகைக்கு விட்டுவிட்டதால் வீட்டில் வேறெங்கும் வைக்க இடம் இல்லாத

பொருள்களையெல்லாம் அவனுடைய அறைக்குள் தள்ளிவிடுவது குடும்பத்தில் இப்போது ஒரு வழக்கமாகிவிட்டது. அப்படிப்பட்ட பொருட்கள் இப்போது அவனுடைய அறையில் நிறையச் சேர்ந்துவிட்டன. குடித்தனக்காரர்கள் மூன்றுபேரும் பொறுப்புணர்ச்சி மிக்க இளைஞர்கள். பொது ஒழுங்கில் அக்கறை கொண்டிருந்தார்கள். மூவருக்கும் தாடி இருந்ததை க்ரகர் ஒருமுறை கதவின் விரிசல் வழியாகப் பார்த்தான். அவர்களும் இப்போது குடும்ப உறுப்பினர்களாகிவிட்டதால் ஒழுங்கைத் தங்கள் அறையில் மட்டுமன்றி வீடு முழுவதிலும், குறிப்பாக சமையலறையில் எதிர்பார்த்தார்கள். அழுக்கடைந்த, தேவையற்ற பொருட்களை அவர்களால் சகித்துக்கொள்ள முடியாது. மேலும் அவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் அறைக்கலன்களையும் திரைச்சீலைகளையும் எடுத்து வந்திருந்தார்கள். இதன் காரணமாக வீட்டில் இப்போது பல பொருட்கள் தேவையற்றவை என்று ஆகிவிட்டன. அவற்றை விற்க முயல்வதில் பயனில்லை. அதே சமயம் அவற்றைத் தூக்கியெறியவும் முடியாது. அவையெல்லாம் க்ரகரின் அறைக்குள் தள்ளப்பட்டன. சாம்பல் கிண்ணமும் குப்பைக் கலமும் இப்படியாகத்தான் க்ரகரின் அறைக்குள் வந்தன. அந்த நேரத்தில் தேவைப்படாத எதுவும் எந்த வேலையையும் ஒரு பரபரப்புடனேயே செய்யும் வேலைக்காரியால் க்ரகரின் அறைக்குள் வீசப்பட்டது. அதிர்ஷ்ட வசமாக வீசப்பட்ட பொருளையும் வீசிய கையையும் மட்டுமே க்ரகர் வழக்கமாகப் பார்த்தான். நேரமும் சந்தர்ப்பமும் வாய்த்தால் அப்பொருட்களை அகற்றிவிடலாம் என்று அவள் ஒருவேளை நினைத்திருக்கலாம். அல்லது, அவை ஒரு குவியலாகச் சேர்ந்தபின் எடுத்துக்கொள்ளலாம் என்று எண்ணியிருக்க லாம். ஆனால், ஆரம்பத்தில் அவசியத்திற்காகவும் பிறகு பெருகும் மகிழ்ச்சிக்காகவும் க்ரகர் அப்பொருட்களிடையே நுழைந்து, நகர்ந்து, ஒரு கட்டத்தில் அவற்றைச் சிறிது நகர்த்தி ஊர்ந்த நேரங்கள் தவிர அவை வேலைக்காரி எறிந்த இடங்களிலேயே கிடந்தன. அம்மாதிரி ஊர்ந்து நகர்ந்ததற்குப் பிறகு வருத்தமும் மிகுந்த அயற்சியும் மேலிட மணிக்கணக்காக அசைவின்றிப் படுத்துக்கிடப்பான். வீட்டில் தங்கியிருந்த மூன்று இளைஞர்களும் அடிக்கடி இரவு உணவை வீட்டிலேயே அனைவர்க்கும் பொதுவான கூடத்தில் சாப்பிட்டதால் அதன் கதவுகள் பல மாலைவேளைகளில் மூடியே இருக்கும். அந்த அறை மூடியிருப்பதற்கு க்ரகர் எளிதாகத் தன்னைப் பழக்கப்படுத்திக்

கொண்டான். அது திறந்திருந்த வேளைகளில் அதைப் பொருட்படுத்தாமல் தன் அறையின் மிக இருளான மூலையில் தன் குடும்பத்தினர் பார்வையில் படாமல் படுத்துக்கிடந்தான். ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் வேலைக்காரி கதவை ஒருக்களித்தவாகில் திறந்துவிட்டுப் போனபோது மூன்று இளைஞர்களுமே இரவு உணவுக்காக உள்ளே வந்தனர். விளக்கும் போடப்பட்டது. முன்பு க்ரகரும் அவனுடைய பெற்றோரும் உட்கார்ந்து சாப்பிட்ட உணவு மேஜையின் மேல்முனையில் அவர்கள் உட்கார்ந்து சிறு துண்டை விரித்துக்கொண்டு கத்தியையும் கவைமுள்ளையும் எடுத்தார்கள். உடனே அடுத்த வாசல் வழியாக க்ரகரின் அம்மா இறைச்சி நிரம்பிய பாத்திரத்துடனும் அவளை ஒட்டி அவனுடைய தங்கை உருளைக்கிழங்குகள் உயரமாக அடுக்கப்பட்ட பாத்திரத்துடனும் உள்ளே வந்தார்கள். ஆவி பறக்கும் உணவைச் சோதிப்பவர்கள் போல அந்த இளைஞர்கள் அதைக் குனிந்து பார்த்தார்கள். மூன்று பேரில் மத்தியில் உட்கார்ந்திருந்தவன் — இவன் மற்ற இருவரின் மேலும் அதிகாரம் செலுத்துபவன்போலத் தோன்றினான் — இறைச்சித் துண்டம் ஒன்றை அது பாத்திரத்தில் இருந்தபோதே வெட்டினான். அது மிருதுவாக இருந்ததா அல்லது அது சமையலறைக்குத் திருப்பி அனுப்பப்படவேண்டுமா என்று கண்டுபிடிக்கத்தான் அப்படிச் செய்தான் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அவன் முகத்தில் திருப்திதெரிந்தபோது இதுவரை பதற்றத்துடன் அவனைக் கவனித்துக்கொண்டிருந்த க்ரகரின் அம்மாவும் தங்கையும் நிம்மதியாக மூச்சுவிடவும் சிரிக்கவும் தொடங்கினார்கள்.

குடும்பத்தின் சமையலறையில்தான் சாப்பிட்டார்கள். இருந்தும் க்ரகரின் அப்பா சமையலறைக்குப் போவதற்கு முன்னால் கூடத்திற்கு வந்து, ஒரு கையில் தொப்பியைப் பிடித்துக்கொண்டு ஒரு நீண்ட தலை தாழ்த்தலுடன் வணக்கம் சொல்லி விட்டு மேஜையை ஒரு சுற்று வந்தார். எழுந்து நின்ற மூன்று இளைஞர்களின் வாய்களும் தாடிகளுக்குள் ஏதோ முணுமுணுத்தன. பெரியவர் போனபிறகு அவர்கள் அமைதியாகச் சாப்பிட்டார்கள். உணவு மேஜையிலிருந்து வரும் பல்வேறு ஓசைகளுக்கிடையே அவர்களுடைய மெல்லும் பற்களின் ஓசையை மட்டும் தன்னால் வேறுபடுத்த முடிந்தது குறிப்பிடத்தக்க விஷயமாக க்ரகருக்குத் தோன்றியது. சாப்பிடுவதற்குப் பற்கள் தேவை என்பதையும் பற்களில்லாத தாடைகளால் — அவை எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும்

— ஒருவரால் எதுவும் செய்ய முடியாது என்பதை க்ரகருக்கு உணர்த்துவதுபோல அந்த ஓசை தோன்றியது. க்ரகர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்: 'எனக்குப் பசியாக இருக்கிறது ஆனால், அது இவர்கள் சாப்பிடும் உணவுக்கானதல்ல, குடியிருக்கும் இவர்கள் எப்படித் தங்கள் வயிற்றை நிரப்பிக்கொள்கிறார்கள். நான் இங்கே பட்டினியால் செத்துக்கொண்டிருக்கிறேன்!'

அன்று மாலை சமையலறையிலிருந்து வயலின் வாசிக்கும் ஓசை வந்தது. தன்னுடைய உருமாற்றத்திற்குப் பிறகு வயலின் ஓசையைக் கேட்ட நினைவு க்ரகருக்கு இல்லை. வாடகைக்கு இருந்த மூவரும் தங்கள் இரவு உணவை ஏற்கனவே முடித்திருந்தார்கள். நடுவில் உட்கார்ந்திருந்த இளைஞன் தான் கொண்டு வந்திருந்த செய்தித்தாளின் பக்கங்களில் மற்ற இருவர்க்கும் தலா ஒரு பக்கத்தைக் கொடுத்துவிட்டு தானும் ஒரு பக்கத்தை வைத்துக்கொண்டான். இப்போது மூவரும் பின்னால் சாய்ந்து சௌகரியமாக உட்கார்ந்துகொண்டு படிக்கவும் புகைக்கவும் செய்தார்கள். வயலின் இசை கேட்டவுடன் மூவரும் காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டு, எழுந்து மெதுவாக நடந்துபோய்க் கூடத்தின் கதவருகில் நெருக்கமாக நின்றார்கள். இளைஞர்களின் அசைவுகள் உண்டாக்கிய சத்தம் சமையலறைக்குள் கேட்டிருக்கவேண்டும். ஏனென்றால் க்ரகரின் அப்பா, "வயலின் வாசிப்பது உங்களுக்குத் தொல்லையாக இருக்கிறதா? சொன்னால் உடனே நிறுத்திவிட முடியும்," என்றார். நடுவிலிருந்த இளைஞன், "இல்லை, ஃப்ராலின் சேம்சா இந்த அறைக்கு வந்து எங்களுக்கருகில் வாசிக்கக்கூடாதா?" என்று சொன்னான். "நிச்சயமாக," என்று க்ரகரின் அப்பா அவரே வயலின் வாசிப்பவரைப் போல உரக்கச் சொன்னார். இளைஞர்கள் கூடத்துக்கு வந்து காத்திருந்தார்கள். உடனே க்ரகரின் அப்பா இசைக்குறிப்புத் தாளை வைக்கும் தாங்கியையும் அவனுடைய அம்மா இசைக்குறிப்புத் தாளையும் அவனுடைய தங்கை வயலினையும் எடுத்து வந்தார்கள். க்ரீட் வாசிப்பதற்கான ஏற்பாடுகளை மௌனமாக செய்தாள். இதற்கு முன் எப்போதும் அறைகளை வாடகைக்கு விட்டிராத அவனுடைய பெற்றோர் குடித்தனக்காரர்களிடம் மிகையான மரியாதை காட்டி தங்களுக்குச் சொந்தமான நாற்காலிகளில்கூட உட்காராமல் நின்றுகொண்டிருந்தார்கள். அவனுடைய அப்பா கதவில் சாய்ந்துகொண்டு தன்

வலதுகையை தன்னுடைய பணியாளருக்குரிய கோட்டின் இரண்டு பொத்தான்களுக்கிடையே நுழைத்திருந்தார். அவனுடைய அம்மாவுக்கு ஒரு நாற்காலியைத் தந்தார்கள். அவள்முன்பு விட்டுவிட்டுப்போன இடத்திலேயே ஒரு இளைஞன் அந்த நாற்காலியைப் போட்டதால் அவள் அதன் ஒரு மூலையில் ஒரு பக்கமாக உட்கார்ந்தாள். க்ரீட் வாசிக்க ஆரம்பித்தாள். அவளுடைய இருபுறமும் இருந்த அப்பாவும் அம்மாவும் அவளுடைய கைகளின் அசைவுகளைக் கூர்ந்து கவனித்தார்கள். வயலின் இசையால் கவரப்பட்ட க்ரகர் கூடத்திற்குள் தன் தலை நுழையும்வரை நகரத் துணிந்தான். மற்றவர்களைப் பற்றிய தன்னுடைய அக்கறைகுறைந்துகொண்டே வருவதைப்பற்றி அவன் அநேகமாக ஆச்சரியப்படவேயில்லை. ஒரு காலத்தில் மற்றவர்கள் மீதான தன் அக்கறை பற்றி பெருமிதம் கொண்டிருந்தவன்தான் அவன். இருந்தும் வேறெப்போதையும்விட இந்த சந்தர்ப்பத்தில் தன்னை ஒளித்துக்கொள்ள அவனுக்கு அதிகக் காரணம் இருந்தது. அவனுடைய அறையில் அடர்ந்து படிந்துவிட்ட அழுக்கும் சிறு அசைவில்கூட மேலெழும்புவதும் அவன்மீது படிந்துவிட்டதுமான தூசியுமே அந்தக் காரணம். அவனுடைய முதுகின்மீதும் விலாப்பக்கங்களிலும் அப்பிக்கொண்டிருந்த மயிர்க்கற்றையும் உணவுத்துணுக்குகளும் அவனுக்குப் பின்னால் தடம் பதித்துச் சென்றன. முன்பெல்லாம் ஒரு நாளைக்குப் பலமுறை செய்ததுபோல தரைவிரிப்பின்மீது மல்லாக்கப் படுத்துத் தேய்த்து சுத்தம் செய்துகொள்ள அவனுடைய மெத்தனம் இப்போது இடம் கொடுப்பதில்லை. அருவருப்பூட்டும் தோற்றம் கொண்டிருந்தாலும் கூடத்தின் நறுவிசான தரையில் மேலும் நகர அவன் வெட்கப்படவேயில்லை.

யாரும் அவனைப் பார்க்கவில்லை என்பது உறுதி. குடும்பமே வயலின் இசையில் லயித்திருந்தது. சட்டைப்பைகளில் கைகளை விட்டுக்கொண்டு இசைக்குறிப்புத்தாங்கிக்கு மிக அருகில், குறிப்புகளைப் படிக்க முடிகிற தூரத்தில் நின்று கொண்டிருந்த — இது க்ரகரின் தங்கையை நிச்சயம் தொல்லைப்படுத்தியிருக்கும் — மூன்று இளைஞர்களும் விரைவில் ஜன்னல் பக்கம் நகர்ந்தார்கள். குனிந்த தலையுடன் அவர்கள் அடங்கிய குரலில் பேசியபடி அங்கேயே நின்றார்கள். க்ரகரின் அப்பா அவர்களுடைய எண்ணத்தை அறியும் ஆர்வத்தில் அவர்களைப் பார்த்தார். நல்ல இசையைக்

கேட்க விரும்பியதில் ஏற்பட்ட ஏமாற்றத்தையும் க்ரீட்டின் வாசிப்பு சலித்துப்போனதையும் நாகரிகம் காரணமாகத் தொல்லையைத் தாங்கிக்கொண்டிருப்பதையும் அவர்கள் மிகவும் வெளிப்படையாகவே காட்டிக்கொண்டிருந்தார்கள். வாய் வழியாகவும் மூக்கு வழியாகவும்சுருட்டுப் புகையை அவர்கள் ஊதிக்கொண்டிருந்த முறையிலேயே அவர்களுடைய எரிச்சலை யாரும் புரிந்துகொள்ளமுடியும். இருந்தும் க்ரகரின் தங்கை அருமையாக வாசித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய முகம் பக்கவாட்டில் சாய்ந்திருந்தது. அவளுடைய கண்கள் இசைக்குறியீடுகளை கவனமுடனும் கவலையுடனும் பின்பற்றின. க்ரகர் இன்னும் கொஞ்சம் முன்னால் நகர்ந்துபோய், அவளுடைய கண்களைத் தன் கண்கள் சந்திக்கும் விதமாக தன் தலையைத் தரையோடு தாழ்த்தினான். இசை அவனை அப்படிக் கவரும்போது அவன் ஒரு விலங்காக இருக்கமுடியுமா? அவன் ஏங்கிக்கொண்டிருந்த இனந்தெரியாத நல்மன ஊட்டத்துக்கு அவனுக்கு முன்னால் வழி திறப்பதைப்போல அவன் உணர்ந்தான். தான் ரசிப்பதைப்போல அவளுடைய இசையை அங்கு யாரும் ரசிக்கவில்லை என்பதால், அவள் அருகில் நகர்ந்துபோய் அவளுடைய குட்டைப் பாவாடையைப் பிடித்திழுத்து அவள் வயலினுடன் தன் அறைக்கு வரவேண்டும் என்பதை அவளுக்கு உணர்த்த வேண்டும் என்று தீர்மானித்தான். ஏனென்றால், அவளுடைய வாசிப்பை அவன் ரசிப்பதைப்போல இங்கு வேறு ஒருவரும் புரிந்துகொள்ளவில்லை. அவளை வெளியே விடாமல் தன்னுடைய அறையிலேயே எப்போதும், குறைந்தபட்சம் தான் உயிரோடிருக்கும் வரையிலாவது, வைத்துக்கொள்ளப் போகிறான். பயமூட்டும் அவனுடைய தோற்றம் முதல்முறையாக அவனுக்கு உதவப் போகிறது. அவனுடைய அறையின் கதவுகளைக் காவல் காப்பான். அத்துமீறி வருபவர்கள் மீது துப்புவான். ஆனால் அவனுடைய தங்கை மீது எந்தவித கட்டுப்பாடும் இருக்கப்போவதில்லை. அவளுடைய சொந்த விருப்பத்தின் பேரிலேயே அவனுடன் அவள் தங்கியிருக்க வேண்டும். சோஃபாவின் மீது அவனருகில் அவள் உட்கார்ந்து தலைகுனிந்து அவன் நம்பிக்கையுடன் சொல்வதைக் கேட்பாள். அவளை இசைப்பள்ளிக்கு அனுப்பும் எண்ணம் அவனுக்கு உறுதியாக இருந்ததென்றும் இந்த அசம்பாவிதம் நடக்காதிருந்தால் போன

கிறிஸ்துமஸின்போது — கிறிஸ்துமஸ் போய் நீண்ட நாட்களாகிவிட்டதா? — எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அதை எல்லோருக்கும் தெரிவித்திருப்பேன் என்றும் சொல்வான். இதைச் சொன்னவுடன் உருகிய உள்ளத்துடன் அவள் வெடித்து அழுவாள். பின்பு க்ரகர் அவள் தோள் உயரத்துக்கு ஏறி, வேலைக்குப் போவதால் ரிப்பனோ காலரோ அணியாத அவளுடைய வெறுங் கழுத்தில் முத்தமிடுவான்.

மூவரில் நடுவில் நின்ற இளைஞன் வார்த்தைகளை வீணாக்காமல், "மிஸ்டர் சேம்சா!" என்று பெரியவரைக் கூப்பிட்டு அறைக்குள் மெதுவாக நகர்ந்துவரும் க்ரகரைச் சுட்டிக்காட்டினான். வயலின் இசை நின்றது. அந்த இளைஞன் ஒரு தலையாட்டலுடன் நண்பர்களைப் பார்த்துச் சிரித்துவிட்டு க்ரகரை மீண்டும் பார்த்தான். க்ரகரை வெளியே துரத்துவதை விடவும் மூன்று இளைஞர்களை சமாதானப்படுத்துவது முக்கியம் என்று க்ரகரின் அப்பா நினைப்பது மாதிரி தோன்றியது. ஆனால், அந்த இளைஞர்கள் கொஞ்சமும் பதற்றப்படவே இல்லை என்பது மட்டுமன்றி, வயலின் இசையைவிடவும் க்ரகர் அதிக கேளிக்கை அளிப்பவனாக அவர்களுக்குத் தோன்றினான். க்ரகரின் அப்பா விரித்த கைகளுடன் அவ்விளைஞர்களிடம் வேகமாகப் போய் அவர்களை அவர்களுடைய அறைக்குப் போகச்சொல்ல முயன்ற அதே நேரத்தில் க்ரகரைப் பார்க்க முடியாதபடி அவர்களுடைய பார்வையை மறைத்து நின்றார். அந்த இளைஞர்கள் இப்போது உண்மையிலேயே கொஞ்சம் கோபமடைந்தார்கள். அவர்கள் கோபமடைந்தது அந்த முதியவரின் நடத்தையாலா அல்லது க்ரகரைப்போன்ற ஒன்று அடுத்த அறையில் இருப்பது இப்போதுதான் அவர்களுக்கு தெரிய வந்ததாலா என்பதை யாராலும் சொல்ல முடியாது. க்ரகரின் அப்பா செய்தது போலவே அவர்களும் கைகளை வீசி அவரிடம் விளக்கம் கேட்டார்கள். சங்கடத்துடன் தங்கள் தாடியை நீவிக்கொண்டார்கள். பிறகு தயக்கத்துடன் க்ரகரின் அப்பா வழிநடத்தத் தங்கள் அறைக்குத் திரும்ப ஆரம்பித்தார்கள். இதற்கிடையில், இசை திடீரென்று முடிந்து போனதால் செயலிழந்த நிலையில் நின்றுகொண்டிருந்த க்ரகரின் தங்கை சுயநினைவு வந்தவளாகக் கையிலிருந்த வயலினையும் வில்லையும் ஆஸ்துமாவினால் மூச்சுவிடப் போராடிக்கொண்டிருந்த அம்மாவின் மடியில் போட்டுவிட்டு அந்த இளைஞர்களின் அறைக்குள் ஓடினாள்.

பழக்கத்தின் காரணமாக விரைவாக அவ்வறையின் படுக்கையிலிருந்த தலையணைகளையும் போர்வைகளையும் ஒழுங்குபடுத்தி விரித்துவிட்டு அந்த இளைஞர்கள் அறையை அடையும் முன்பே நழுவி வெளியேறிவிட்டாள்.

க்ரகரின் அப்பா தன்னுடைய பிடிவாதமான சுயத்தின் ஆதிக்கத்தால் குடியிருப்பவர்கள்மீது காட்டவேண்டிய மரியாதையை மறந்துகொண்டிருந்தார். அவர்களை அவர்களுடைய அறைக்குத் துரத்துவதிலேயே குறியாக இருந்தார். தங்களுடைய படுக்கை அறையின் கதவை அடைந்தவுடன் நடுவிலிருந்த இளைஞன் தன் காலால் தரையை ஓங்கி மிதித்து அவரை நகரவிடாமல் செய்தான். அவன் ஒரு கையை உயர்த்திக்கொண்டு அவரையும், க்ரகரின் அம்மா, தங்கை ஆகியோரையும் ஒரு சேரப் பார்த்துக்கொண்டு பேச ஆரம்பித்தான்: ‘‘இந்த வீட்டிலும் குடும்பத்திலும் நிலவும் அருவருப்பான சூழ்நிலைகள் காரணமாக – இந்த இடத்தில் – அவன் மட்டுமதிப்பின்றி வெடுக்கென்று தரையில் துப்பினான் – நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதே இடத்தில் முன்னறிவிப்பும் கொடுக்கிறேன். ஒரு பென்னியும் வாடகை தர மாட்டேன். இதுவரை தங்கியிருந்த நாட்களுக்கும்கூட வாடகை தரப்போவதில்லை. மாறாக, எனக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு எதிராக உங்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி யோசிக்கப் போகிறேன். உங்கள் மீதான என்னுடைய புகார்களை என்னால் சுலபமாக நிரூபிக்க முடியும்.’’ பேசி முடித்துவிட்டு எதையோ எதிர்பார்ப்பவனைப்போல முன்னால் உற்றுப்பார்த்தான். இந்த இடைவெளியை அவ னுடைய நண்பர்கள், ‘‘நாங்களும் இதே இடத்தில் முன்னறிவிப்பு கொடுக்கிறோம்,’’ என்ற வார்த்தைகள் மூலம் நிரப்பினார்கள். முதலில் பேசிய இளைஞன் கதவின் பிடியைப் பற்றி படாரென்று சாத்தினான்.

க்ரகரின் அப்பா கைகளால் வழியைத் தேடியபடி தடுமாறி நடந்து சென்று தன்னுடைய நாற்காலியில் விழுந்தார். ஒரு சாதாரண மாலைநேர சிறு தூக்கத்திற்காகத்தான் அவ்வாறு அவர் உடலை நீட்டி உட்கார்ந்தார் என்று தோன்றியது. ஆனால்,வெளிப்படையாகவும் அனிச்சையாகவும் வெட்டியிழுத்து ஆடிக்கொண்டிருந்த அவருடைய தலை, நிச்சயம் அவர் தூங்கவில்லை என்பதைக் காட்டியது. குடித்தனகார இளைஞர்கள் முதலில் பார்த்த இடத்திலேயே க்ரகர் இன்னும் அமைதியாக நின்றிருந்தான். அவனுடைய திட்டம் தோல்வியடைந்ததால் ஏற்பட்ட ஏமாற்றமும் பசியால் உண்டான

பலவீனமும் அவனை நகரவிடாமல் செய்துவிட்டன. அங்கே நிலவிய பொதுவான இறுக்கமும் பதற்றமும் எந்த நிமிடமும் தன்மீது ஒரு கூட்டுத் தாக்குதலில் நிச்சயமாக முடியலாம் என்று அவன் பயந்தான். அவன் காத்திருந்தான். அம்மாவுடைய விரல்களின் நடுக்கத்தால் அவளுடைய மடியிலிருந்து விழுந்த வயலின் உண்டாக்கிய சத்தத்திற்கும் ஒலி அதிர்வுக்கும்கூட அவன் செவிசாய்க்கவில்லை.

தன் பேச்சை அறிமுகம் செய்துகொள்ளும் விதமாக க்ரகரின் தங்கை மேஜையைக் கையால் தட்டி ஆரம்பித்தாள்: ‘‘என் அருமைப் பெற்றோரே, இப்படியே இது தொடரமுடியாது. ஒருவேளை நீங்கள் அதை உணரவில்லையென்றாலும் நான் உணர்கிறேன். இந்தப் பூச்சியின் முன்னால் என் அண்ணனின் பெயரை உச்சரிக்கமாட்டேன். நான் சொல்வதெல்லாம் இதுதான்: அதிலிருந்து நாம் விடுபட்டாக வேண்டும். மனித சாத்தியத்துக்குட்பட்டவரை அதை நாம் கவனித்துக்கொண்டோம். அதை சகித்துக் கொண்டோம். யாரும் நம்மைப் பழிக்கமுடியும் என்று நான் நினைக்கவில்லை.’’

‘‘அவள் சொல்வது முழுவதும் உண்மை,’’ என்று க்ரகரின் அப்பா தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். மூச்சுவிட இன்னும் திணறிக்கொண்டிருக்கும் அவனுடைய அம்மா, வாயைக் கையால் மூடிக்கொண்டு மெலிதாக இரும ஆரம்பித் தாள். அவளுடைய கண்களில் ஓர் அமானுஷ்யப் பார்வை படிந்திருந்தது. அவனுடைய தங்கை அவளிடம் ஓடி அவளுடைய நெற்றியைத் தாங்கிப்பிடித்தாள். க்ரீட்டினுடைய வார்த்தைகளால் அவனுடைய அப்பாவுடைய எண்ணங்களின் குழம்பிய தன்மை மறைந்துபோனது போலத் தோன்றியது. குடித்தனக்காரர்கள் சாப்பிட்டுவிட்டுப்போன தட்டுகளின் இடையே கிடந்த அவருடைய தொப்பியை விரல்களால் தடவிக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார். இடையிடையே அசைவற்றிருந்த க்ரகரின் உருவத்தைப் பார்த்தார்.

ஒரு வார்த்தையையும் கேட்க முடியாதபடி அம்மா அதிகமாக இருமிக் கொண்டிருந்ததால் அவனுடைய தங்கை அவன் அப்பாவிடம் வெளிப்படையாகச் சொன்னாள் : ‘‘நாம் அதிலிருந்து விடுபட முயலவேண்டும். நெருங்கிவரும் உங்கள் சாவுக்கு அது காரணமாகப் போவது எனக்கு

நன்றாகத் தெரிகிறது. நம் வீட்டில் ஏற்படும் தொடர்ச்சியான மனவேதனையை நம்மைப் போன்றே கடினமாக உழைக்கும் ஒருவரால்கூட தாங்கிக் கொள்ள முடியாது. குறைந்தபட்சம் என்னால் இனிமேலும் இதைத் தாங்கிக்கொள்ள முடியாது.'' உணர்ச்சி வேகத்தில் ஓங்கரித்து அழுத அவளுடைய கண்ணீர்த் துளிகள் அவளுடைய அம்மாவின் முகத்தில் விழுந்தன. அவற்றை அவள் எந்திரகதியில் துடைத்துவிட்டாள்.

க்ரகரின் அப்பா புரிதலுடனும் அனுதாபத்துடனும், ''ஆனால் நாம் என்ன செய்யமுடியும், குழந்தை?'' என்றுகேட்டார். முன்பிருந்த நம்பிக்கைக்கு மாறாக அழுகையின்போது உண்டான கையாலாகாத உணர்வைத் தெரிவிக்கும் விதமாகக்ரகரின் தங்கை வெறுமனே தோள்களைக் குலுக்கிக் கொண்டாள்.

''அவனால் நம்மைப் புரிந்துகொள்ள முடிந்தால்,'' என்று அவளுடைய அப்பா பாதிக் கேள்வி கேட்பவரைப் போல சொன்னார். இன்னும் அழுதுகொண்டிருந்த க்ரீட், அவர் சொல்வது எவ்வளவு காரிய சாத்தியமற்றது என்பதை உணர்த்தும் விதமாக ஒரு கையை ஆவேசமாக ஆட்டினாள்.

அவனால் புரிந்துகொள்ள முடியாது என்ற அவருடைய மகளின் நம்பிக்கையைப் பரிசீலிப்பவர்போல கண்களை மூடிக்கொண்டு அந்த முதியவர், ''அவனால் நம்மைப் புரிந்துகொள்ள முடிந்தால்,'' என்ற திரும்ப ஒருமுறை சொல்லிவிட்டுத் தொடர்ந்தார், ''அவனுடன் நம்மால் ஒரு உடன்படிக்கைக்கு வரமுடியலாம். ஆனால் இப்போதுள்ள நிலையில் . . . ''

''அப்பா, அவன் போய்விட வேண்டும், அது ஒன்றுதான் வழி'' என்று க்ரகரின் தங்கை கத்தினாள். பிறகு தொடர்ந்துசொன்னாள் : ''இந்தப் பூச்சிதான் க்ரகர் என்ற எண்ணத்தி லிருந்து விடுபட நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். நீண்டகாலம் நாம் அப்படி நம்பியதே நம்முடைய துன்பத்துக்கு அடிப்படை. அது எப்படி க்ரகராக இருக்க முடியும்? அது க்ரகராக இருந்திருந்தால், மனிதர்கள் இந்த மாதிரியான பூச்சியுடன் வாழ முடியாது என்பதை எப்போதோ உணர்ந்து அவனாகவே எங்காவது போயிருப்பான். அதற்குப் பிறகு நமக்கு சகோதரன் இருந்திருக்க மாட்டானேயொழிய நாம் தொடர்ந்து வாழ்ந்து அவனுடைய நினைவை கௌரவத்துடன் போற்றியிருப்போம். இப்போதுள்ள நிலையில் இந்தப் பூச்சி நம்மைத் துன்புறுத்துகிறது. குடியிருப்பவர்களை விரட்டுகிறது. வீடு முழுவதையும் தனதாக்கிக்கொண்டு நம்மைச் சாக்கடையில்

தூங்கவைக்க அது விரும்புவதும் வெளிப்படையாகத் தெரிகிறது.'' இப்படிப் பேசிக்கொண்டு போனவள் திடீரென்று, ''அங்கே பாருங்கள் அப்பா'' என்று அலறி, ''அவன் மீண்டும் உள்ளே வந்து கொண்டிருக்கிறான்,'' என்றாள். க்ரகருக்கு அருகில் இருப்பதைவிட அம்மாவைக் கைவிடத் தயாராயிருப்பவள்போல வேகமாக நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு தன்னுடைய அம்மாவிடமிருந்து விலகி அப்பாவுக்குப் பின்புறமாக ஓடி நின்றாள். அவளுடைய கலவரத்தால் நிலைதடுமாறிய அவரும் எழுந்து நின்று அவளைப் பாதுகாப்பவர்போல தன்னுடைய கைகளை விரித்தார்.

யாரையும், குறிப்பாகத் தன் தங்கையை, பயப்படுத்தும் நோக்கம் க்ரகருக்குக் கிடையாது. தன்னுடைய அறைக்குத் தவழ்ந்து திரும்பிப் போகத்தான் அவன் தன் உடலைத் திருப்ப ஆரம்பித்திருந்தான். அவனுடைய ஊனமுற்ற உடல்நிலையில் உடலைத் திருப்பும் இயக்கங்கள் கடினமாகவையாகவும் பார்ப்பதற்கு அதிர்ச்சி தரக்கூடியவையாகவும் இருந்தன. தலையை உயர்த்தியும் பின் தரையில் தலையை ஆதாரமாகக் கொண்டும் மீண்டும் மீண்டும் அவன் முயன்றான். அசைவற்று ஒருமுறை சுற்றிலும் பார்த்தான். அவனுடைய நல்ல நோக்கத்தை அங்கிருந்தவர்கள் புரிந்து கொண்டதுபோல தோன்றியது. அங்கு தோன்றிய பயம் தற்காலிகமானதுதான். இப்போது அவர்கள் கவலை தோய்ந்த அமைதியுடன் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவனுடைய அம்மா சோர்வினால் கண்களை மூடியபடி நாற்காலியில் சாய்ந்திருந்தாள். அவளுடைய கால்கள் ஒருசேர விறைப்புடன் நீண்டிருந்தன. அவனுடைய அப்பாவும், தங்கையும் அருகருகே உட்கார்ந்திருந்தார்கள். க்ரீட்டின் கை அவளுடைய அப்பாவின் கழுத்தைச் சுற்றியிருந்தது.

தன்னால் ஒருவேளை இப்படியே தொடர்ந்து சுற்றித் திரும்ப முடியுமோ என்று நினைத்த க்ரகர் தன் முயற்சிகளை மீண்டும் தொடங்கினான். அந்த முயற்சிகளால் உண்டான மூச்சிரைப்பை அடக்க முடியாமல் அவ்வப்போது நிறுத்தி நிறுத்தி மூச்சுவிட்டுக் கொண்டான். யாரும் அவனைத் துன்புறுத்தவில்லை, அவனே திரும்பிக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டார்கள். திரும்பியவுடன் நேராக ஊர்ந்துசெல்ல ஆரம்பித்தான். தனக்கும் தன் அறைக்கும் இருந்த தூரத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தான். தன் பலவீனமான

நிலையில் இவ்வளவு தொலைவைத் தான் எப்படி கவனத்தில் கொள்ளாமலேயே கடந்தோம் என்று நினைத்து அதிசயப்பட்டான். விரைவாக நகரும் முயற்சியில் இருந்த க்ரகர், அவனுடைய இயக்கத்தைக் குறுக்கிடும் அளவுக்கு அவனுடைய குடும்பத்தினர் ஒரு வார்த்தை பேசவோ உணர்ச்சி மேலீட்டால் ஒரு சத்தம் எழுப்பவோ இல்லை என்பதைக் கவனிக்கவே இல்லை. தன் அறைக்கதவை அடைந்த பிறகுதான் தலையைத் திருப்பிப் பார்த்தான். கழுத்துச் சதை விறைப்பாக இருந்ததால் தலையை முழுதாக அவனால் திருப்ப முடியவில்லை. அவனுடைய தங்கை எழுந்து நின்றிருந்ததைத் தவிர வேறு எந்த மாற்றமும் ஏற்படாததைக் கவனித்தான். அடுத்து, தூங்கிவிட்ட அவனுடைய அம்மாவின்மீது அவனுடைய பார்வை பட்டது.

அறைக்குள் அவன் நுழைந்த உடனேயே அவசரம் அவசரமாக அறைக்கதவை க்ரீட் மூடி, தாழிட்டு, பூட்டினாள். அவனுக்குப் பின்புறம் ஏற்பட்ட திடீர் சத்தம், அவனுடைய சிறிய கால்கள் தொய்ந்து போகுமளவுக்கு அவனைத் திடுக்கிடச் செய்தது. அவனுடைய தங்கைதான் அத்தனை அவசரம் காட்டியவள். நாற்காலியிலிருந்து தாவி எழுந்து தயாராகக் காத்திருந்த அவள், ‘‘கடைசியில் ஒரு வழியாக,’’ என்று பெற்றோரைப் பார்த்து உரக்கச் சொல்லிவிட்டு பூட்டில் சாவியைத் திருப்பினாள்.

இருட்டில் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ‘அடுத்து என்ன?’ என்று க்ரகர் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான். தன் ஒரு காலைக்கூட கொஞ்சமும் அசைக்கமுடியாமல் போய்விட்டதையும் அவன் உடனே உணர்ந்துகொண்டான். இதுபற்றி அவன் ஆச்சரியப்படவே இல்லை. மாறாக, இத்தனை நாட்களும் அந்த மெல்லிய சிறிய கால்களைக் கொண்டு தன்னால் நகரமுடிந்ததுதான் நம்பமுடியாத விஷயமாக அவனுக்குப் பட்டது. மற்றபடி அவன் பொதுவாக சௌகரியமாகத்தான் இப்போது உணர்ந்தான். உடல் முழுக்க இருக்கும் வலி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கடைசியில் இல்லாமல் போய்விடும் என்று அவனுக்குத் தோன்றியது. மெல்லிய தூசிப்படலம் போர்த்தப்பட்டு அவன் முதுகில் அழுகிக்கொண்டிருந்த ஆப்பிளும் அதைச் சுற்றி கன்றிச் சிவந்திருந்த பகுதியும் அநேகமாக இப்போது அவனுக்கு வலியை உண்டாக்கவில்லை. வாஞ்சையுடனும் நேசத்துடனும் தன் குடும்பத்தை நினைத்துப் பார்த்தான்.

தான் மறைந்துவிட வேண்டுமென்பதில் அவனுடைய தங்கையைவிட அவனுக்கு அதிக முனைப்பு இருந்தது — அது சாத்தியமாக இருக்கும் பட்சத்தில். கோபுரக்கடிகாரம் காலை மூன்று மணி அடிக்கும் வரை இப்படிப்பட்ட வெறுமையான, சாந்தமான சிந்தனையில் அவன் மூழ்கியிருந்தான். ஜன்னலின் வெளிப்புறமிருந்து பரந்து பெருகும் உலகின் முதல் ஒளி அவனுடைய உணர்வுநிலைக்குள் மீண்டும் ஒருமுறை நுழைந்தது. பிறகு அவனுடைய தலை அதுவாகவே தரையில் தாழ்ந்தது. அவனுடைய சுவாசத்தின் வலுவிழந்த கடைசி மூச்சு நாசித்துவாரங்கள் வழியாகக் கசிந்து வெளியேறியது.

அதிகாலையில் வேலைக்காரி வந்து — எவ்வளவோ தடவை கெஞ்சிக் கேட்டுக்கொண்டதையும் மீறி — வலிமையும் பொறுமையின்மையும் தெரிய அவள் கதவுகளை ஓங்கிச் சாத்தினாள்; அவள் வந்த பிறகு வீட்டில் யாரும் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை. க்ரகரின் அறைக்குள் எட்டிப் பார்த்தபோது அசாதாரணமான எதையும் அவள் பார்க்கவில்லை. பிணங்கிக் கொண்டு வேண்டுமென்றே அவன் அப்படி படுத்துக் கொண்டிருப்பதாக அவள் நினைத்தாள். அவன் புத்திசாலி என்று எப்போதுமே அவள் ஒத்துக்கொண்டிருக்கிறாள். அவள் வைத்திருந்த துடைப்பத்தின் கைப்பிடி நீண்டதாக இருந்ததால் வாசற்படியில் நின்றபடியே அவள் க்ரகரைத் தொட்டு அவனுடைய உணர்ச்சியைக் கிளறிவிட முயன்றாள். ஆனால் அது எந்த விளைவையும் ஏற்படுத்தாததால் அவள் கொஞ்சம் திடுக்கிட்டு அவனை இன்னும் கொஞ்சம் வலிமையுடன் துடைப்பத்தால் தொட்டாள். அவனைத் தரையோடு தள்ளியபோது எவ்வித எதிர்ப்பும் வராததைப் பார்த்தபோதுதான் அவளுடைய கவனம் எச்சரிக்கையடைந்தது. உண்மையைப் புரிந்துகொள்ள அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. கண்கள் விரிய அவள் மெலிதாக விசிலடித்தாள். நேரம் கடத்தாமல் உடனே க்ரகரின் பெற்றோருடைய படுக்கையறைக் கதவை விரியத் திறந்து உச்சஸ்தாயியில் இருட்டுக்குள் கத்தினாள்; “இதைக் கொஞ்சம் பாருங்கள், அது இறந்துவிட்டது, அது இறந்துபோய் கிடக்கிறது!”

க்ரகரின் அப்பாவும் அம்மாவும் அவர்களுடைய இரட்டைப் படுக்கையிலிருந்து விழித்தெழுந்தார்கள். வேலைக்காரி சொன்ன செய்தியின் தன்மையை முழுதாக உணரும் முன்பாக ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து அவர்கள் மீள சிறிது

நேரம் பிடித்தது. க்ரகரின் அப்பா கம்பளியைத் தோளில் போட்டபடியும் அம்மா இரவு உடையுடனும் படுக்கையின் இருபுறமும் ஆளுக்கு ஒருவராக வேகமாகக் கீழிறங்கி க்ரகரின் அறைக்குள் நுழைந்தார்கள். மூன்று இளைஞர்களும் குடித்தனத்துக்கு வந்த பிறகு க்ரீட் தூங்கப் பயன்படுத்திக் கொண்டிருந்த கூடத்தின் கதவும் திறக்கப்பட்டது. அவள் தூங்க ஆரம்பிக்கவே இல்லை என்பதுபோல முழு உடையில் இருந்தாள். வெளிறிப்போயிருந்த அவளுடைய முகம் அதை உறுதிப்படுத்தியது. வேலைக்காரியைக் கேள்விக்குறியோடு பார்த்தபடி க்ரகரின் அம்மா, ‘‘இறந்து விட்டானா?’’ என்று கேட்டாள். வெளிப்படையாகத் தெரிந்த அந்த விஷயத்தை அவளாகவே கண்டுகொண்டிருக்கக்கூடிய சாத்தியம் இருந்தும் அவள் இந்த கேள்வியைக் கேட்டாள். ‘‘அப்படித்தான் எனக்கு சொல்லத் தோன்றுகிறது’’ என்று சொல்லிக்கொண்டே தன் துடைப்பத்தால் ஒரு பக்கமாக க்ரகரின் கடலத்தை நீண்டதூரம் தள்ளி தான் சொன்னதை நிரூபித்தாள். அவள் செய்வதைத் தடுப்பதுபோல நகர்ந்த க்ரகரின் அப்பா பிறகு நின்றுவிட்டார். ‘‘சரி கடவுளுக்கு நம் நன்றி’’ என்று சொன்னார். அவர் சிலுவைக்குறி இட்டுக் கொண்டதை மூன்று பெண்களும் பின்பற்றினார்கள். க்ரகரின் உடலைவிட்டு அகலாமல் பார்வை பதிந்திருந்த க்ரீட் சொன்னாள் : ‘‘எவ்வளவு மெலிந்து போயிருக்கிறான் பாருங்கள். அவன் சாப்பிட்டு பல நட்களாயிற்று. தின்றதெல்லாம் அப்படியே வெளியே வந்துகொண்டிருந்தது.’’ கால்களால் தாங்கப்படாத அவன் உடலை இப்போது மிக நெருக்கத்தில் எவ்விதத் தடையுமில்லாமல் பார்த்தபோது அவன் உடல் தட்டையாகவும், உலர்ந்தும் இருந்ததைக் காணமுடிந்தது.

‘‘எங்களோடு உள்ளே வா’’ என்று க்ரீட்டை அவளுடைய அம்மா கூப்பிட்டபோது அவள் க்ரகரின் உடலைத் திரும்பிப் பார்த்தபடியே தன் பெற்றோரின் படுக்கையறைக்குள் நுழைந்தாள். வேலைக்காரி கதவை மூடிவிட்டு ஜன்னலை முழுக்கத் திறந்தாள். அது அதிகாலையாக இருந்தும் தூயகாற்றில் ஒருவகையான மென்மை இருந்ததை உணர முடிந்தது. மார்ச் மாதம் முடிவடையப் போவது காரணமாக இருக்கலாம்.

தங்களுடைய அறையிலிருந்து வெளியே வந்த மூன்று இளைஞர்களும் காலைஉணவு இல்லாததைக் கண்டு வியப்படைந்தார்கள். அவர்களைக் குடும்பத்தினர் மறந்துவிட்டார்கள். நடுவிலிருந்த இளைஞன், ‘‘எங்கள் காலை

உணவு எங்கே?'' என்று சிடுசிடுப்புடன் துப்புரவு செய்பவளைக் கேட்டான். ஆனால் அவள் ஒரு விரலைத் தன் உதடுகளில் வைத்து அவசரமான சைகைகள் மூலம் அவர்களை க்ரகரின் அறைக்குள் போகும்படி உணர்த்தினாள். அவள் சொன்னபடியே செய்து, வெளிச்சம் முற்றாகப் பரவியிருந்த அறையில் கிடந்த க்ரகரின் சடலத்தைச் சுற்றி தங்களுடைய நைந்து போன கோட்டுப் பாக்கெட்டுகளில் கைகளை விட்டுக்கொண்டு நின்றார்கள்.

அந்த நேரத்தில் க்ரகரின் பெற்றோருடைய படுக்கையறைக் கதவு திறக்கப்பட்டு, ஒரு கையில் மனைவியையும் மறுகையில் மகளையும் பிடித்தபடி க்ரகரின் அப்பா சீருடையில் தோன்றினார். அவர்கள் அதுவரை அழுதுகொண்டிருந்தது போலத் தோன்றியது. அடிக்கடி க்ரீட் தன்னுடைய முகத்தைத் தன் அப்பாவுடைய கையில் மறைத்துக்கொண்டாள். இரண்டு பெண்களிடமிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளாமல் கதவைச் சுட்டிக்காட்டி ''என் வீட்டை விட்டு உடனே வெளியேறுங்கள்,'' என்று இளைஞர்களைப் பார்த்து அந்த முதியவர் சொன்னார். அதிர்ச்சியடைந்த நடு இளைஞன் பலவீனமான சிரிப்புடன், ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான். தாங்கள் நிச்சயம் வெற்றியடையப் போகும் ஓர் அருமையான சண்டையை ஆவலோடு எதிர்பார்ப்பவர்கள்போல மற்ற இரண்டு இளைஞர்களும் கைகளைப் பின்புறம் வைத்து ஒன்றோடொன்று உரசிக்கொண்டிருந்தார்கள். க்ரகரின் அப்பா தன் இரண்டு சகாக்களோடு நடு இளைஞனை நோக்கி நடந்தபடி, ''நான் நினைப்பதைத்தான் சொல்கிறேன்'' என்றார். முதலில் கொஞ்சநேரம் தன் தரப்பில் உறுதியாக இருந்த அவன் சிறிது நேரம் அமைதியாகத் தரையைப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான். அவனுடைய எண்ணங்கள் புது வடிவத்தை அடைவதுபோல தோன்றியது. ''சரி, நாங்கள் போய்விடுகிறோம்,'' என்று சொன்ன அவன், திடீரென்று அடக்கத்திற்கு ஆட்பட்டு இந்த முடிவுக்கு அவருடைய புது அனுமதியை எதிர்பார்ப்பவன் போல க்ரகரின் அப்பாவை ஏறிட்டுப் பார்த்தான். அவர் பொருள் பொதிந்த கண்களுடன் தலையை ஓரிரு முறை லேசாக ஆட்டினார். அந்த இளைஞன் உடனே நீண்ட அடிகள் எடுத்துவைத்து கூடத்திற்குப் போனான். இதையெல்லாம் கவனித்துகொண்டிருந்த அவனுடைய நண்பர்கள் கைகளை உரசுவதை

நிறுத்திவிட்டு அவன் பின்னால் துரிதமாக நடந்தார்கள். அவர்கள் விரைந்து நடந்ததைப் பார்த்தால், க்ரகரின் அப்பா அவர்களுக்கு முன்பாகக் கூடத்திற்குப் போய் அவர்களுடைய தலைவனோடு அவர்களுக்குள்ள தொடர்பை முறித்துவிடுவார் என்று பயந்ததைப்போல இருந்தது. கூடத்தில் அவர்கள் மூன்றுபேரும் கோட் ஸ்டாண்டிலிருந்து தங்கள் தொப்பிகளையும், குடை ஸ்டாண்டிலிருந்து தங்கள் கைத்தடிகளையும் எடுத்துக்கொண்டு அமைதியாகத் தலைதாழ்த்தி வணங்கிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறினார்கள். ஆதாரமேயில்லாத ஒரு சந்தேகத்துடன் க்ரகரின் அப்பாவும் இரண்டு பெண்களும் படிக்கட்டுத் திருப்பத்தின்வரை அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள். ஒவ்வொரு படிக்கட்டுத் திருப்பத்திலும் மறைந்து ஓரிரு விநாடிகளில் மீண்டும் பார்வையில் படும்படி அந்த இளைஞர்கள் மெதுவாகவும் உறுதியாகவும் நீண்ட படிக்கட்டு வரிசைகளில் இறங்கிப் போவதை க்ரகரின் பெற்றோரும் தங்கையும் படிக்கட்டுக் கைப்பிடியில் சாய்ந்துகொண்டு கவனித்தார்கள். அந்த இளைஞர்கள் உருவத்தில் சிறுத்துப் போகப்போக அவர்கள்மீது சேம்சா குடும்பத்தினர்க்கு இருந்த ஆர்வம் குறைந்துபோனது. இறைச்சிக்கடைப் பையன் ஒருவன் தலையில் ஒரு தட்டோடு கம்பீரமாக அவர்களைக் கடந்து மேலே வந்தபோது க்ரகரின் அப்பாவும் இரண்டு பெண்களும் ஒரு பாரம் நீங்கியதுபோல படிக்கட்டு மேடையிலிருந்து வீட்டிற்குத் திரும்பிப்போனார்கள்.

அன்றைய நாளை ஓய்வெடுப்பதிலும் மனம் போனபடி சுற்றித் திரிவதிலும் கழிக்க வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். உழைப்பிற்கிடையே அப்படிப்பட்ட ஓய்வுக்கு அவர்கள் தகுதியானவர்கள் என்பது மட்டுமின்றி அது அவர்களுக்கு அவசியம் தேவையானதாகவும் இருந்தது. எனவே அவர்கள் மேஜையருகே உட்கார்ந்து, க்ரகரின் அப்பா அவருடைய நிறுவனத்தின் நிர்வாகக்குழுவுக்கும், அம்மா அவளுடைய முதலாளிக்கும், க்ரீட் அவளுடைய வணிக நிலையத்தின் தலைவருக்கும் தாங்கள் வேலைக்கு வரமுடியாததை விளக்கி மூன்று கடிதங்களை எழுதினார்கள். அவர்கள் எழுதிக்கொண்டிருந்தபோது துப்புரவு செய்பவள் வந்து தன்னுடைய அன்றைய காலை வேலை முடிந்துவிட்டதால் போவதாகச் சொன்னாள். முதலில் அவர்கள் அவளை ஏறிட்டுப் பார்க்காமல் தலையை மட்டும் ஆட்டினார்கள்.

ஆனால் அவள் தொடர்ந்து தயங்கி நின்றதைக் கண்டு அவளை எரிச்சலுடன் பார்த்தார்கள். ‘‘அப்புறம்,’’ என்றார் க்ரகரின் அப்பா. அவர்களிடம் சொல்ல தன்னிடம் ஒரு நல்ல செய்தி இருப்பதுபோலவும் சரியான முறையில் முறையில் கேட்டால் மட்டுமே அதைச் சொல்ல நினைத்திருப்பவள் போலவும் ஓர் அசட்டுச் சிரிப்புடன் அவள் கதவருகே நின்றுகொண்டிருந்தாள். அவள் வேலையில் சேர்ந்த நாள்முதலே க்ரகரின் அப்பாவை எரிச்சலூட்டிக் கொண்டிருந்த அவளுடைய தொப்பியின் மீது நேராக நின்ற நெருப்புக்கோழியின் சிறகு எல்லாத் திசைகளிலும் மென்மையாக அலையாடிக் கொண்டிருந்தது. அவளிடமிருந்து மற்றவர்களை விடவும் அதிக மரியாதையைப் பெற்றிருந்த க்ரகரின் அப்பா, ‘‘சரி, அப்புறம் என்ன?’’ என்று அவளைப் பார்த்துக் கேட்டாள். ‘‘அதாவது,’’ என்று ஆரம்பித்த அவள் களங்கமற்ற அசட்டுச் சிரிப்பால் தொடர்ந்து பேச முடியாமல் போய், பிறகு, ‘‘அடுத்த அறையிலிருக்கும் அதை எப்படி அப்புறப்படுத்தவது என்று நீங்கள் கவலைப்படவேண்டாம். ஏற்கனவே அதைச் செய்தாயிற்று,’’ என்றாள். க்ரகரின் அம்மாவும் க்ரீட்டும் தங்களை மறந்து வேலையில் ஈடுபட்டவர்களைப்போல குனிந்து தங்கள் கடிதங்களை மீண்டும் எழுத ஆரம்பித்தார்கள். விலாவாரியாக அந்த விஷயத்தைச் சொல்ல அவள் ஆர்வமாக இருந்ததைக் கவனித்த க்ரகரின் அப்பா தீர்மானமான ஒரு கையசைப்பின் மூலம் அவளைத் தடுத்துவிட்டார். பேசவிடாமல் தடுக்கப்பட்டதால் கோபமடைந்து, தன்னுடைய அவசரத்தையும் எண்ணிப்பார்த்து, ‘‘எல்லாருக்கும் போய்வருகிறேன்,’’ என்று சொல்லிவிட்டு கதவுகளை வீசியடித்து மூடிவிட்டு சூறாவளியைப்போல் மூர்க்கமாக வெளியேறினாள்.

‘‘இன்றைக்கு இரவு அவளை வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டியதுதான்’’ என்றார் க்ரகரின் அப்பா. ஆனால் அவருடைய மனைவியிடமிருந்தோ மகளிடமிருந்தோ எந்தப் பதிலும் இல்லை. சற்று நேரத்துக்கு முன்தான் அவர்கள் அடைந்திருந்த சாந்த நிலையை துப்புரவு செய்பவள் மீண்டும் குலைத்துவிட்ட மாதிரி தோன்றியது. அம்மாவும் பெண்ணும் எழுந்து ஜன்னலருகே போய் ஒருவரையொருவர் இறுகப்பற்றியபடி நின்றார்கள். க்ரகரின் அப்பா தன் நாற்காலியில் இருந்தபடியே திரும்பி அவர்களை அமைதியாகக் கொஞ்ச நேரம் பார்த்தார். பிறகு, ‘‘தயவுசெய்து இங்கே வாருங்கள். நடந்தவை

போகட்டும்; என் மீது கொஞ்சம் பச்சாதாபப்படுங்கள்,'' என்று சொன்னார். இரண்டு பெண்களும் அவர் சொன்னதற்குக் கீழ்ப்படிந்து வேகமாக அவரிடம் நடந்து போய் அவரை அன்பாகத் தடவிக் கொடுத்துவிட்டு விரைவாகத் தங்கள் கடிதங்களை எழுதி முடித்தார்கள்.

பிறகு மூன்று பேரும் ஒன்றாக வீட்டைவிட்டு வெளியேறி— பல மாதங்களாக அவர்கள் இப்படி ஒன்றாக வெளியே போனதில்லை — ட்ராம் மூலமாக நகரத்துக்கு வெளியே திறந்த வெளியாக இருந்த கிராமப்புறத்துக்குப் போனார்கள். அவர்கள் மூன்று பேர் மட்டுமே பிரயாணம் செய்த அந்த ட்ராம் இதமான சூரியஒளியால் நிரம்பியிருந்தது. அவர்கள் தங்கள் இருக்கைகளில் சௌகரியமாகப் பின்புறம் சாய்ந்தபடி உட்கார்ந்துகொண்டு தங்கள் எதிர்காலம் பற்றி விவாதித்தார்கள். கவனமாக ஆராய்ந்தால் எதிர்காலம் அப்படி ஒன்றும் மோசமாக இருக்காது என்று புலப்பட்டது. ஏனென்றால் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் வேலைகள் — இதுவரை அவர்கள் தங்கள் வேலைகளைப் பற்றி அடுத்தவருடன் பேசியதேயில்லை — நல்லவையாகவும் காலப்போக்கில் முன்னேற்றத்துக்கு இட்டுச் செல்பவையாகவும் இருந்தன. அவர்களுடைய நிலையில் உடனடியான பெரியமுன்னேற்றம் அவர்கள் வேறு வீட்டிற்குக் குடிபோவதில்தான் உண்டாகும். க்ரகர் தேர்ந்தெடுத்து இதுவரை அவர்கள் குடியிருந்த வீட்டைவிடவும் சிறிய, குறைவான வாடகையுடைய, நல்ல சூழலில் அமைந்த, எளிதில் கையாள முடிகிற ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்க அவர்கள் விரும்பினார்கள். இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது தங்களுடைய மகளின் பெருகும் கிளர்ச்சித் துடிப்பை உணர்ந்த க்ரகரின் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒரே சமயத்தில் ஒரு விஷயம் மனத்தில் உறைத்தது. அவளுடைய கன்னங்களை வெளிறச் செய்த சமீபகாலத்திய துயரத்தையும் மீறி வாளிப்பான உருவம் கொண்ட அழகிய பெண்ணாக அவள் வளர்ந்திருப்பதைக் கண்டார்கள். அவளுக்கு ஒரு நல்ல கணவனைத் தேர்ந்தெடுக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது என்ற முடிவுக்கு வந்த அவர்கள் பாதி உணர்வற்ற நிலையில் தங்களுடைய ஒருமித்த மனநிலையை வெளிப்படுத்தும் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டு அமைதியாகப் பிரயாணம் செய்தார்கள். அவர்களுடைய புதிய கனவுகளையும் சிறந்த எண்ணங்களையும்

உறுதிப்படுத்துவது போல பிரயாண முடிவில் அவர்களுடைய பெண் முதலில் துள்ளியெழுந்து தன் இளம் உடலை நீட்டி சோம்பல் முறித்தாள்.

காஃப்கா தன் அப்பாவுக்கு எழுதிய நீண்ட கடிதத்தின் இறுதிப்பகுதி

(நவம்பர் 1919)

(தன் புகார்களுக்கு அவருடைய அப்பா பதில் சொல்வதாக கடிதத்தின் இப்பகுதியை காஃப்கா அமைத்துள்ளார்.)

"முற்றிலும் என்னைச் சார்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதன் மூலமாகவே உன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளாய். நாம் இருவரும் ஒருவரோடொருவர் போரிட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் போரில் இரண்டு வகைகள் உள்ளன. வீரமும் பெருந்தன்மையும் நிரம்பியது ஒருவகை; இதில் தனித்தனியான இரண்டு எதிரிகளுடைய படைகளின் வலிமை ஒப்புமையில் கணிக்கப்படுகிறது; போரிடும் இருவரும் தனியாக உள்ளனர்; தனியாகத் தோற்கின்றனர்; தனியாக வெல்கின்றனர். அடுத்து மூட்டைப்பூச்சி, பேன் போன்ற ரத்தம் உறிஞ்சும் பூச்சிகளின் போர்; அவை கடிப்பது மட்டுமன்றி தாம் உயிர்வாழ ரத்தத்தையும் உறிஞ்சிக்கொள்கின்றன. அப்படித்தான் தொழில்முறை சார்ந்த ஒரு படைவீரன் உண்மையில் இருப்பான்; நீயும் அப்படித்தான் இருக்கிறாய். நீ வாழ்க்கைக்கு லாயக்கற்றவன். ஆனால் கவலைகளும் சுயபழிகூறல்களும் இல்லாத ஒரு வாழ்க்கையில் சௌகரியமாக நிலைகொள்வதற்கு ஏதுவான உன்னுடைய தகுதியை நான் பறித்து என்னுடைய சட்டைப் பையில் போட்டுக்கொண்டுவிட்டதாக நீ நிரூபிக்கிறாய். வாழ்க்கைக்கு நீ தகுதியில்லாதது இப்போது உனக்கு ஒரு பொருட்டில்லை. உன்னுடைய வாழ்க்கை இப்போது என்னுடைய பொறுப்பு. ஆனால் நீ அமைதியாக படுத்துக்கிடந்துகொண்டு உடல் ரீதியாகவும், மனோரீதியாகவும் வாழ்க்கையின் ஊடே என்னால் இழுத்துச் செல்லப்பட உன்னை ஒப்புக்கொடுத்துவிட்டாய்."

‘உருமாற்றம்’ பற்றி காஃப்காவின் இரண்டு டயரிக் குறிப்புகள்:

அக்டோபர் 20, 1913

வீட்டில் இப்போது ‘உருமாற்ற’த்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன்; மோசமாக உள்ளது.

ஜனவரி 19, 1914

‘உருமாற்றத்’த்தின் மீது பெரும் வெறுப்பு. படிக்கமுடியாத இறுதிப்பகுதி அடிப்படையிலேயே குறைபாடு. வியாபாரப் பிரயாணம் குறுக்கிடாமல் இருந்திருந்தால் இதைவிட நன்றாக வந்திருக்கும்.

கா.ஃப்காவும் ஒரு தமிழ் எழுத்தாளரும் – க.நா.சுப்ரமண்யம்

கா.ஃப்கா என்கிற பெயரை முதல் முதலாக நான் புதுமைப்பித்தன் மூலமாகத்தான் கேள்விப்பட்டேன் என்று எண்ணுகிறேன். 1937 மத்தியில் இருக்கலாம். Dorothy Norman என்பவருடைய Twice a Year வெளியீடாக வந்த அமெரிக்கப் பதிப்பு ஒன்று எப்படியோ second–hand work ஆக நண்பர் புதுமைப்பித்தனுக்குக் கிடைத்தது. அதில் ஒன்றிரண்டு கதைகளையும் அவர் மொழிபெயர்க்க உத்தேசித்து மொழிபெயர்த்தார் என்று எண்ணுகிறேன். A Franz Kafka Miscellaneous என்கிற பெயருடன் வெளிவந்த அந்த நூலில், கா.ஃப்காவிலிருந்து பல பகுதிகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன; கா.ஃப்காவைப் பற்றியும் ஒரு சில கட்டுரைகளும் இருந்தன. ஒருநாள் அந்த நூலை என்னிடம் தந்து அதை ஒரே நாளில் படித்துவிட்டுத் திருப்பித் தந்துவிட வேண்டும் என்கிற நிபந்தனையுடன் கொடுத்தார் புதுமைப்பித்தன். கா.ஃப்காவைப் பற்றிய கட்டுரைகளை நான் படிக்கவில்லை. எனக்கு விமர்சனத்தில் அன்றும் அவ்வளவாக நம்பிக்கை கிடையாது; இன்றும் கிடையாது. ஆனால் அந்த நூலில் இருந்த கா.ஃப்கா மொழிபெயர்ப்புகளையெல்லாம் உட்கார்ந்து இரவோடு இரவாகப் படித்து விட்டேன்.

இரவு எப்போது தூங்கினேன் என்கிற நினைவில்லை. ஆனால் கா.ஃப்காவைப் படிப்பதும், தூக்கத்தில், கனவில் ஒரு உலகத்தைக் காண்பதும் ஒன்றுதான் என்று சொல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. Nightmares என்று சொல்லுவார்களே அது போன்றவை கா.ஃப்காவின் கதைகளும், முடிவுறாத நாவல்களும். "கனவு காண்பது போல் இருந்தது," என்று சொல்லி நான் மறுநாள் புதுமைப்பித்தனிடம் அந்த நூலைத் திருப்பித் தந்தபோது, புதுமைப்பித்தன் விமர்சனப் பகுதியில் பல இடங்களில் கா.ஃப்காவின் கதைகளில் ஃபிராய்டின் மனோதத்துவ அலசல் கனவுகள் பலமான இடம் பெற்றிருப்பதாகப் பலரும் எழுதியிருப்பதைக் குறிப்பிட்டுவிட்டு, அவருடைய டயரிகளில் அவருடைய கனவுகள் பெரும் அளவுக்கு இடம்பெற்றிருப்பதாகவும் அவருடைய பல சிறுகதைகளும் நாவல்களில் ஒன்றும் இன்னும் ஆங்கிலத்தில்கூட மொழிபெயர்க்கப்படாதிருப்பதாகவும் கூறினார். அதற்குப் பிறகு ஒரு வழியாக கா.ஃப்காவின் நூல்களையும் கதைகளையும் ஜெர்மன்

மூலத்தில் தேடிப் பிடித்துப் படித்தேன். Trial என்கிற ஆங்கில மொழிபெயர்ப்பு 1937இல்தான் வெளிவந்தது. பின்னர் டயரிகள், பல கதைகள் எல்லாம் வரிசையாக வெளிவந்தன.

இந்தக் கதைகளில் நானும் புதுமைப்பித்தனும் 1937 மத்தியில் படித்த Metamorphosis — கூடுவிட்டுக் கூடுபாய்தல் அல்லது மாற்றம் — என்கிற கதையைப் பற்றிப் படித்துவிட்டு நாங்கள் பேசிக்கொண்டதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அந்தக் கதையைப் படிக்காதவர்களுக்கும் படித்துவிட்டு மறந்து விட்டவர்களுக்குமென்று (அப்படி மறப்பது என்றும் சாத்திய மில்லை என்றே நான் நினைத்தாலும் கூட) இங்கு நினைவு படுத்துகிறேன்.

மிகவும் அருவருப்பை உண்டாக்கும் கதை அது. ஊர்சுற்றி வியாபாரி ஒருவன் — அவன் வாலிபன் — ஒருநாள் காலையில் எழுந்து பார்த்ததும் திடீரென்று தான் ஒரு கரப்பான் பூச்சியாக மாறியிருப்பதை உணருகிறான். அவன் பெற்றோர்கள் – தங்கள் பொருளாதாரக் கதிமோட்சம் அவன்தான் என்று எண்ணியிருப்பவர்கள் — கரப்பான் பூச்சியாக மாறிவிட்ட தங்கள் பிள்ளையோடு, அருவருப்புடனும் அலட்சியத்துடனும் வசிக்கவேண்டி வருகிறது. இதுதான் கதை.

இந்தக் கதை புதுமைப்பித்தனுக்கு — எனக்கும்தான் — ஒரு விதத்தில் பொருத்தமாக இருந்ததை நாங்கள் இருவருமே பேசிக்கொண்டோம். உணர்ந்தோம். புதுமைப்பித்தன் தன் தகப்பனாரிடம் சண்டை போட்டுக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறியவர்; தன் தகப்பனாருடைய அருவருப்பையும் அலட்சியத்தையும் சம்பாதித்துக்கொண்டவர். அதே போல ஆங்கிலத்தில் எழுதுவதற்கென்று பழக்கப்படுத்தப்பட்டிருந்த நான் என் தகப்பனாரின் ஆலோசனையை அவமதித்து தமிழில் எழுதத் தொடங்கி அவர் விரோதத்தை, அலட்சியத்தை சம்பாதித்துக்கொண்டவன். புதுமைப்பித்தனின் தகப்பனாரும் என் தகப்பனாரும் உலக வாழ்க்கையில் ஓரளவுக்கு வெற்றி பெற்றவர்கள்; நாங்கள் இருவரும் ஓரளவுக்குத் தோல்வியுற்றவர்கள்.

“என் தகப்பனார் காஃப்கா படிக்க மாட்டார்,” என்று தன் உணர்ச்சியைச் சொன்னார் புதுமைப்பித்தன்.

“என் தகப்பனார் படிப்பார்,” என்றேன் நான்.

காஃப்காவின் வாழ்வும் இலக்கியமுமே பூரணமாக அவருக்கும் அவர் தகப்பனாருக்கும் இடையே ஏற்பட்டுள்ள உறவுகள் காரணமாக எழுந்தவை என்று சொல்லுவது வழக்கம் — ஜீவிய சரித்திரத்தையே ஆதாரமாகக் கொண்டு இலக்கிய விமர்சனம் செய்கிற ஓர் ஐரோப்பிய கோஷ்டி இப்படித்தான் அடித்துச் சொல்லுகிறது. இதேபோலத் திருமணங் கண்டு பயந்து ஒதுங்கிய காஃப்கா மனப்பான்மையே அவர் சிறுகதைகளைச் சமைத்தது என்று சொல்லுகிற கோஷ்டி ஒன்றும் உண்டு. இரண்டுக்கும் இடையில் காஃப்கா ஒரு கனவுலகத்தில் வாழ்ந்து அந்தக் கனவுலகத்தைச் சாதாரண உலகத்தைவிட அதிக உண்மையானதாகக் கண்டு தீட்டினார் என்று சொல்லுவதும் பொருந்தும். எழுதுவது கலையாக அல்லாமல் ஒரு வாழ்க்கை நியதியாக, இந்திய அர்த்தத்தில் வாழ்க்கைத் தர்மமாகவே அவருக்குத் தோன்றியது. இந்தத் தர்மத்தை அவர் தனக்காகவன்றி பிறருக்காக மேற்கொள்ளவில்லை. ஆகவேதான் தன் எழுத்துகளைப் பிரசுரிக்கத் தேவையில்லை என்று தன் நண்பரிடம் தெரிவித்து உயில் எழுதி வைத்து விட்டுப் போனார் அவர். அதேபோல் அவர் தன் தகப்பனாருக்கு எழுதிய ஒரு கடிதமும் இருக்கிறது — தன் தோல்விக்கெல்லாம் காரணம் தன் தகப்பனார்தான் என்கிற அளவில் குற்றம் சாட்டுகிற மாதிரியே எழுதப்பட்ட கடிதம் அது. அதையும் ஒரு இலக்கிய நூலாகவே கருதலாம்.

இரண்டு முடிவுறாத நாவல்கள், பல உருப்பெற்ற சிறப்பான சிறுகதைகள், பல கடிதங்கள், சில டயரிகள் — இவைதான் காஃப்காவின் நூல்கள். அவர் தனது இளமைப் பிராயத்திலிருந்து நாற்பத்தியோராவது வயதில் இறந்தது வரையில் எழுதியதெல்லாம் ஜெர்மன் மொழியிலும், பின்னர் மொழிபெயர்ப்பிலும் பிரசுரமாகியுள்ளன. இவற்றைப் படிக்கும் போது காஃப்காவின் இலக்கிய உருவம், தனித்தன்மை, personality பளிச்சிடுகிறது. கரப்பான் பூச்சி உலகத்தை நோக்குகிறது காஃப்காவின் நூல்களில் — இந்தக் கரப்பான் பூச்சிக்கு எழுத்துக்கலை கைவந்திருந்தது — தன் நோக்கைப் பூரணமாக எழுத்தில் வடித்துக் காட்ட முடிந்தது, இந்த மேதையான கரப்பான் பூச்சியினால். முக்கியமாக இரண்டு யுத்தங்களுக்கு மத்தியில் நசுக்குண்ட ஐரோப்பிய மக்களின் நிலைமை கரப்பான் பூச்சியினுடையது போலத்தான் — helpless, morally pointless ஆக இருந்தது. இந்த pointlessness,

helplessness இரண்டையும் காஃப்கா அளவுக்கு வார்த்தைகளில் வடித்துத் தந்த கலைஞர் ஐரோப்பிய இலக்கியத்தில் வேறு யாரும் இல்லை. அதுதான் காஃப்காவின் பெருமை. வேதாந்தத்தில் சொல்லுவார்கள் — நிஜ உலகம் என்று நாம் நம்புவதைப் போலவே நமது கனவுகளில் வருகிற உலகமும் நிஜமானதுதான் — அந்த அளவுக்கு நிஜமானதுதான் என்று சொல்லுவார்கள். காஃப்காவின் கனவுலகம் நிஜமான உலகமாக உருப்பெறச் செய்த அந்த எழுத்துக்கலை வன்மையானது — இதற்கு முன் யாரும் சாதிக்காதது.

‘ஒரு நாயின் ஆராய்ச்சிகள்’ என்ற கதையை எடுத்துக்கொள்வோம். இந்த நாய் தனது ஆராய்ச்சியின் ஆரம்பமாக ஒன்றை ஏற்க மறுக்கிறது. நாய்கள் மனிதனுக்கு அடிமைப் பட்டவை என்று ஏற்க மறுத்துத் தன் ஆராய்ச்சியைத் தொடங்குகிறது. நாய் உலகத்தின் அடிப்படையான அம்சங்கள் எவை எவை? நாய்களுக்கான உணவு எங்கிருந்து, எப்படிக் கிடைக்கிறது? பூமியிலிருந்து கிடைக்கிறது என்றும், தங்களுக்கு உணவளிக்கும் பூமியை முகர்ந்து அதற்கு நீர் வார்க்கவேண்டும் — அது நாய்களின் கடமை என்றும் எல்லா நாய்களும் அறிந்திருக்கின்றன. உணவு தேடும் நாய் பூமியைப் பார்ப்பதில்லை. வானத்தைப் பார்த்தே குரைக்கிறது என்று விஞ்ஞானியான நாய் கண்டறிந்து வைத்திருக்கிறது. இது ஏன் என்று விசாரிக்கிறது. மனிதர்கள் இல்லை என்று கற்பனை செய்து கொள்வது நாய்களுக்கு சுபாவமாகிவிட்டது — கடவுள் இல்லை என்று மனிதன் நினைப்பது இந்தக் காலத்தில் சுபாவமாகிவிட்டது போல. காஃப்காவின் முடிவுறாத நாவல்களைப் போலவே இதுவும் முடிவுறாத ஒரு கதை.

‘விசாரணை’ என்கிற நாவலில் குற்றம் சட்டப்பட்டவன் — என்ன குற்றமோ, யாரால் அவன் குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டானோ — என்னவானால் என்ன? தான் குற்றம் செய்தவன்தான் என்கிற எண்ணம் கதாநாயகனுக்கு ஏற்பட்டுவிட்டதாகவேதான் காஃப்கா வருணிக்கிறார். தன்னையே நாயும், பூச்சியும் ஆக்கிக் கொள்கிற வித்தையை காஃப்கா, நமது சைவப்பெரியார்களைப் போலவே அறிந்திருந்தான் என்று புதுமைப்பித்தன் ஒருதரம் சொல்லி நான் கேட்டதுண்டு. காஃப்காவின் எழுத்திலே ஒரு கசப்பு மனப்பான்மை, ஒரு frustration தொனிப்பது தெளிவாகவே தெரிகிறது. இந்த

விஷயங்களில் நமது புதுமைப்பித்தன் காஃப்காவுக்கு ஈடு சொல்லக்கூடியவர்தான்.

1937இல் காஃப்காவின் எழுத்து எனக்கு முதல்முதலாகப் புதுமைப்பித்தன் மூலம் பரிச்சயமாயிற்று. அதற்குப் பிறகு பல தடவைகள் அவர் நூல்களை ஆங்கிலத்திலும், ஜெர்மன் மொழி யிலும் படித்திருக்கிறேன். இப்படி ஒருதரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் The Great Wall of China என்கிற நூலைப் படித்துவிட்டுத் திருப்பித்தர எடுத்துப் போகும்போது சிதம்பரத்தில் 'மௌனி'யைச் சந்தித்து அவரிடம் "இதைப் படித்துப் பாருங்கள். உங்களுக்குப் பிடிக்கலாம்," என்று தந்தேன். மறுநாளே பூராவையும் படித்த மௌனி அந்தப் புஸ்தகத்தைத் திருப்பித் தரும்போது "இந்த நூல்களை நீங்களும் மற்றவர்களும் எதற்காகப் படிக்கிறீர்களோ, எனக்குத் தெரியவில்லை. இந்தக் காஃப்கா எனக்காகவே எழுதியிருக்கிறான்," என்றாரே பார்க்கலாம்.

ஒரு சிறந்த இலக்கியாசிரியருக்கு இதைவிடச் சிறந்த tribute வேறு ஒருவரும் சொல்ல முடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது.

Sorry – எழுதி முடித்த பிறகு தலைப்பை மாற்றி, "காஃப்காவும் மூன்று தமிழ் எழுத்தாளர்களும்" என்று சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது. அப்படியே வைத்துக் கொள்ளுங்களேன்.

நன்றி : 'கசடதபற'' இதழ், 15, 16 (1972)